# குருநானக்

சி. இராமலிங்கம்
தத்துவத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.
1974

# குருநானக்


சி. இராமலிங்கம்
தத்துவத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.
1974

Rs 4 - 00

முதற்பதிப்பு: 1974
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

இளங்கோ அச்சகம்.
புதுவை.

# முன்னுரை

குருநானக் அவர்களது ஐந்நூறாவது பிறந்த தின விழாவைக் கொண்டாடும் பொருட்டு குழுவொன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களால் அமைக்கப் பெற்றது. இக்குழு என்னைக் குருநானக் அவர்களது சமயத்தைப்பற்றியும் தத்துவக் கொள்கைகள் பற்றியும் சுருக்கமான நூலொன்று எழுதுமாறு பணித்தது. தமிழக மக்கட்கு குருநானக் கொள்கைகளைச் சுருங்கிய முறையில் தமிழில் எழுதப் பெற்றது இந்நூல். மேலும், மேலும் நானக் அவர்கள் கண்ட உண்மைகளை அறிய, ஆராய்ந்து தெளிய இந்நூல் தூண்டுமானால் பெரிதும் மகிழ்வேன்.

சீக்கிய சமயம் இறையொருமையை வலியுறுத்துகிறது இறைவனிடத்து இடையறாது அன்பைச் செலுத்தி அவன் பெருமையை ஓதுதலையே சிறப்பான நெறியாக இச்சமயம் வகுக்கிறது. சாதி சமயப்பாடுகளற்ற சமுதாய அமைப்பைக் காண வழிசெய்கின்றது. இச்சமயம் இன்றும், நம்மிடையே தோற்றகாலச் சிறப்புடன் விளங்கி வருகின்றது

சமயங்களை ஒப்பிட்டு ஆராய்கின்ற துறை இந்நாளில் பல்கலைக்கழகங்களில் தோன்றி நற்பணி புரிந்து வருகிறது. ஆதலால் இந்நூல் அத்தகைய சமய ஒப்புமைக்குப் பயன் படும். தமிழ் மக்கள் குருநானக் அவர்கள், சமய உலகில் ஆற்றிய அருந் தொண்டுகளை அறிந்து போற்ற இந்நூல் துணைநிற்கும் என்று நம்புகிறேன்.

இந்நூல் எழுதும் வாய்ப்பினை நல்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும், ஆட்சிக் குழுவிற்கும் பதிவாளருக்கும் எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்தி ன்கிறேன்.

அன்பன்,

**சி. இராமலிங்கம்**

# சிறப்புரை

மக்கள் குழுக்களாகப் பிரிந்து, மாறுபட்டு, பகைமை யுணர்ச்சியோடு, பொருது நின்ற சமயத்தில், குருநானக் தோன்றினர். பிளவுப்பட்டிருந்த மக்களை அன்பின் அடிப் படையில் இணைக்க அவர் முற்பட்டார், இறைவனுக்குத் தொண்டுசெய்வதிலும், மக்கட்குத் தொண்டு செய்வதிலும் மக்கள் இணைதல் இயலும் என்று குருநானக் காட்டினர். எழுச்சியூட்டும் உரைகளாலும், பாடல்களாலும் மக்களை நானக் விழித்தெழச் செய்தார். அனைத்துச் சமயங்களும் சமமா னவை என்று எடுத்தியம்பினர். மக்களை ஹிந்துவென்றும், இஸ்லாமியனென்றும், ஆண் என்றும், பெண் என்றும், வன்மைமிக்கவன் என்றும், எளியவனென்றும், இச்சாதியினன் என்றும், அச்சாதியனன் என்றும் பாகுபாடுகளை ஏற்படுத்தி பகுக்க வேண்டாம் என்று நானக் அறைகூவினர். சடங்கு களின் உள்ளீட்டற்ற நிலையினை நன்கு வெளிப்படுத்தினர். இந்திய நாடெங்கும் சுற்றித் தனது நற்செய்தியாகிய தூய வாழ்வையும், நேயமிக்க வாழ்வையும் பரப்பினர். இவ்வுப தேசம், யாண்டும் பரவியது. பிறநாடுகளிலும் பரவநேர்ந்தது.

நம்மனைவருக்கும் உரியவர் குருநானக். அவரது உப தேசங்கள், மதிக்க வொண்ணாத கருவூலமாகும். அவர் மறைந்து ஐந்நூறு ஆண்டுகள் கழிந்துள்ளன. இப்பொழுது, அவரது உபதேசங்களைப் புரிந்து, பின்பற்ற இதுகாறும் முயன்றதைவிட, உண்மையாக முயல்வோமாக!

புதுடில்லி
அக்டோபர் 8–1969

**இந்திரா காந்தி**
பிரதமர்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| தோற்றுவாய் | ... | 1 |
| குருநானக் கண்ட இறைவன் | ... | 15 |
| குருநானக் — அனுபூதிச் செல்வர் | ... | 42 |
| குருநானக் — இரு பெருஞ் சமயங்களின் இணைப்பாளர் | ... | 58 |
| சீக்கிய சமயம் | ... | 68 |
| குருநானக் கண்ட அறவாழ்வு | ... | 92 |
| குருநானக் கண்ட சமுதாயம் | ... | 104 |

# குருநானக்

## தோற்றுவாய்

மனிதன் தன்னைப் பற்றியும், தான் அடையத்தக்க பேற்றினையும் சிந்திக்கத் தலைப்பட்ட நாள் தொடங்கி, இந்திய பெரு நிலத்தில் சமயப் பெரியார்கள் தோன்றியுள்ளனர். இப்பெரியார்கள் தாம் தோன்றிய சூழ்நிலை, காலம், ஆகிய வற்றை நினைவில் கொண்டு தாம் கண்ட உண்மைகளை வெளிப்படுத்தினர். தொடக்கத்தில், இவர்கள் தோன்றிய பகுதியில் உண்மைகள் பரப்பப்பெற்றன. பின்னர் பாரத கண்டம் முழுமையும் பரவிய சமயங்கள் உள. சில அயல் நாடுகளிலும் பரவுவதாயிற்று. இந்தியாவில் சமயம் வளர்ந்த வரலாற்றை நோக்குவோம்.

பல்வேறு சமயங்களில் இயற்கையை நோக்கி எழுந்த பாடல்களின் தொகுப்பு வேதமாகும். பின்னர் உபநிடதப் பெரியோர்கள் தோன்றினர். இவர்தம் சீரிய சிந்தனைகளை உபநிடதங்களின் வாயிலாக அறிகின்றோம். கௌதம புத்தர், மகாவீரர் ஆகிய இருவரும் சம காலத்தவர். மகாவீரர் மூத்தவர். இவர் சமண மரபிலே இறுதியாகத் தோன்றிய தீர்த்தங்கரர் ஆவார். கௌதம புத்தர் மகாவீரரை நோக்க இளையவர். இவர்கண்ட உண்மைகளை, இவரது பெயரால் இன்று பௌத்தம் என்று வழங்குகிறோம். புத்தரது சீடர்கள் பௌத்த சமயத்தையும், தத்துவத்தையும் வளர்த்தனர். ஹீனயானம், மஹாயானம் என்ற இருபிரிவுகளைக் கொண்டு பௌத்தம் விளங்குகிறது. இச்சமயம் அயல்நாடுகளில் பரவிய நிலையில், ஆங்காங்கு உள்ள சூழ்நிலைகட்கு ஏற்ப வளர்ச்சி பெறுவதாயிற்று. இந்த நூற்றாண்டில், ஜென்-பௌத்தம்– (Zen-Buddhism) பெரிதும் வளர்ந்துள்ளது. சமண சமயத்தின் தோற்றம், மகாவீரர் காலந்தொட்டு ஏற்பட்டது எனலாம். இன்றும் நம்மிடையே தரபந்தி-பிரிவைச் சேர்ந்த மறைத்திரு துளசி அடிகளார் சமண சமய உண்மை

களைப் பரப்பி வருகின்றார். ஆகவே சமணம், பௌத்தம் இன்றும் நம்மிடை வாழ்ந்து வரும் சமயங்கள் எனலாம். இவ்விரண்டும் ஹிந்து சமயத்தினின்று கிளைத்தவை என்றாலும் சில அடிப்படைகளில் வேறுபட்டவை.

எட்டாவது நூற்றாண்டு தொடங்கி, தத்துவ வரலாற்றிலே ஓர் சிறப்பைக் காண்கின்றோம். ஆதிசங்கரர், ஹிந்துக்கள் போற்றும் சிறந்த மூன்று நூல்களாகிய உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகியவற்றிற்குப் பேருரை எழுதினார். அவர் காலத்தில் நிலவிய அறுவகைச் சமயங்களை ஹிந்து மதத்தின் உட்பிரிவுகளை-ஒழுங்குபடுத்தி நிலைபெறச் செய்தார். இந்தியாவின் நான்கு எல்லைகளிலும் மடங்கள் நிறுவி ஹிந்து சமயத்திற்கு ஓர் புத்துணர்ச்சி நல்கினார். பின்னர் இராமானுஜாச்சாரியார் தோன்றி மேற்கண்ட நூல்கட்குத் தாமும் பேருரைகள் எழுதியதோடு பக்தியைப் பெரிதும் வற்புறுத்தினார். இவருக்குப் பிறகு மத்வர் தோன்றித் தாமும் விரிவான உரைகளை மேற்குறித்த மூந்நூல்கட்கு வழங்கியதோடு, பக்தி மார்க்கத்தை இவரும் வலியுறுத்தினார்.

தமிழகத்தில் சங்கரர், இராமானுஜர் ஆகிய இருவரும் தோன்றினர். ஆனால் இவர்களது சமய—தத்துவ உண்மைகள் இந்தியா முழுமையும் பரவின. இன்று அயல்நாடுகளிலும் பரவி வருகின்றன. ஆச்சாரியர்களுள் சங்கரர், இராமானுஜர், மத்வர் ஆகியோர் குறிக்கத்தக்கவர்களாவர். என்றாலும், வல்லபர், நிம்பார்க்கர், மெய்கண்டார் ஆகியோரும் ஆச்சாரியர்களே ஆவர்.

தமிழகத்தில், சமய-மறுமலர்ச்சிக்காலம் என்று குறிக்கப் பெறுவது ஆறு, ஏழு நூற்றாண்டுகளாகும். சைவ சமய குரவர்கள், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர். இவர்கட்கு முன்னும் பல சமயப் பெரியார்கள் வாழ்ந்து அருமையான பல பாடல்களைப் பாடியுள்ளனர். பின்னும் பாடியுள்ளதை அறியலாம். சைவத்துள் தோத்திர இலக்கியமென்றும், சாத்திர இலக்கியமென்றும் இருவகையாகப் பகுத்து நாம் சமய உண்மைகளை அறிகின்றோம். மெய்கண்டார்'

அருணந்திசிவம், உமாபதிசிவம் ஆகிய மூவரது நூல்களை சைவ உலகு சிறந்த சாத்திரங்களாகக் கொண்டுள்ளது. பின்னேயும் சாத்திரங்கள் வளர்வனவாயின. தோத்திர, சாத்திர இலக்கியங்கள் இன்றும் வளர்ந்து வருகின்றன.

வைணவத்தில் பன்னிரு ஆழ்வார்களை நாம் போற்றுகின்ளேம். இவர்கள் அருளிய பாக்களின் திரட்டை, நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்று வழங்குகிறேம். இத்திரட்டு, பக்தி மார்க்கத்தின் கருவூலம் எனலாம். பக்தி நெறி தென்னகத்தினின்று வடக்கே பரவியது என்பது பலர் கொள்ளும் முடிபாகும். வங்கத்தில் சைதன்யரால் பெரிதும் பரவிய பக்தி யியக்கம், இராமானுஜர் வழி வழி வந்தோரால் பெரிதும் ஊக்கம் பெற்றது. பக்தி நெறியில் தலைநின்றவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தோன்றி பக்தியை வளர்த்தனர். மகாராட்டிரம் இவ்வகையில் குறிக்கத்தக்க தெனலாம்.

மேற்கு ஆசியாவினின்றும் நமது நாட்டிற்கு வந்த இஸ்லாமிய பெரியவர்கள் 'சூபிகள்' அநுபூதி நெறியொன்றைப் புகுத்தினர். இந்நெறி இந்தியாவில் வரவேற்கப்பெற்றது. இது சமயம், மதம் நாடு, மொழி முதலியன கடந்ததாகும். உலகெங்கும் அநுபூதிமான்கள் உளர். ஓரிரு நூற்றுண்டுகளுள் நமது நாட்டில் யாண்டும் துறவோர், அநுபூதிச் செல்வர், யோகிகள் தோன்றி அவரவர் தாய்மொழியில் சிறந்த உண்மைகளை வெளியிட்டனர். இத்தகைய பெரியோர் தோன்றிய காலம் பதின்மூன்று பதினன்கு நூற்றுண்டுகளாகும். இவர்கள் இறைவனது பெருமையையும் பக்தி நெறி நின்று நாம் இறைவனை அடைய இயலும் என்பதையும் வலியுறுத்தினர்.

இன்னும் நம்மிடையே வாழ்ந்துவரும் சமயங்களுள் அண்மைக்காலத்தில், — ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய சமயம்—சீக்கியமாகும். இச்சமயத்தைத் தோற்றுவித்தவர் குருநானக் என்பவர்.

இருபதாவது நூற்றாண்டு பல துறைகளில் பல்வகை மாற்றங்களைக் கண்டு வருகின்றது. இவற்றை அக, புற மாற்றங்கள் எனலாம். புற உலகில் காணும் மாற்றங்கள் எல்லாம் பெரும்பாலும் இயந்திரங்களின் துணையினாலானவை. அக உலகில் நிகழ்ந்துள்ள மாற்றங்களுள் குறிக்கத்தக்கது சமய உலகில் எழுந்துள்ள மறுமலர்ச்சி எனல் வேண்டும். இம்மறுமலர்ச்சி அல்லது விழிப்புணர்ச்சி, இந்தியாவில் தோன்றியுள்ள அனைத்துச் சமயங்களிலும் நிகழ்கிறது என்று கருத இடமுண்டு. அசோகரது காலத்தில் தழைத்திருந்த பௌத்தம் பின்னர் அது பிறந்த நாட்டிலே செல்வாக்கு இழந்தது. அயல்நாடுகளில் ஆக்கங்கண்டது. அண்மைக் காலத்தில் பௌத்தத்தை நாம் மீண்டும் வரவேற்றோம். அடுத்து 1974-ஆண்டு தொடங்கி ஓராண்டுகாலம் நாம் சமண சமயத்தின் கீர்த்தியை உணர இருக்கின்றோம். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இராஜாராம் மோஹன்ராய், தயானந் சரஸ்வதி போன்றவர்கள் ஹிந்து சமயத்தைப் பெரிதும் திருத்தி அமைக்க முற்பட்டனர். இதில் வெற்றியும் கண்டனர். பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய இராம கிருஷ்ணபரமஹம்சர் சமய வாழ்வில் ஓர் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தினர். சமயங்கள் பல என்றும் அவை உணர்த்தும் உண்மை ஒன்றே என்று கண்டார். அவர் வழி நின்று உலகெங்கும் முழக்கம் செய்த விவேகானந்தர் வேதாந்த நெறியினைப் பரப்பினர். இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் இராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் உள. இவை மக்களை நன்னெறிப் படுத்தி உயர்த்த ஆன்மீக வாழ்வு வாழும் வகை செய்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழகத்தில் தோன்றிய பெரியார் இராமலிங்க அடிகளாவர். இவர் கண்ட நெறி சமரச சுத்த சன்மார்க்கமாகும். சமயம் கடந்த நிலையில் அன்புநெறி புகட்டிய பெருமை இவருக்கு உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் 'பிரம்மஞான சபை' (Theosophical society) தோன்றியது இச்சபையும், சமயங்கடந்த நிலையில் தனித்தவொரு சமயச் சார்பின்றி உயர்ந்த இலட்சிய வாழ்வு வாழ வகை செய்கிறது. சமயப் பெரியாரனைவரையும்

போற்றுகிறது. இவ்வகையில் இவ்விருபதாம் நூற்றாண்டில் சமய உலகில் சிறப்பாக விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. மக்கள் தாம் தாம் மேற்கொண்டுள்ள சமயங்களைப்பற்றி நன்கு அறிய வாய்ப்பு தோன்றியுள்ளது. பிற சமய உண்மைகளையும் அறிய நூல்கள் இன்று பல உள. அவ்வச்சமயம் சார்ந்த பெரியோர்களையும் அணுகியும் அறியலாம். சமயந்தோறும் பழையனவற்றை கழித்து ஒவ்வாதனவற்றை ஒதுக்கி புதியன புகுத்தும் முயற்சிகளையும் காண்கின்றோம். சமயங்களிடையே, இன்று காழ்ப்புணர்ச்சி, பகைமை அருகி வருவதைக் காணலாம். சமயங்களை ஒப்பு நோக்கிப் பயிலும் துறை (Comparative Religion) நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. நமது நாட்டிலன்றி, அயல்நாடுகளிலும் இத்தகைய முயற்சியைப் பற்றி அறிகிறோம். மக்களிடையே, இன்று சமயங்கள் உணர்த்தும் நிலைத்த உண்மைகளை அறியும் ஆவல் மிகுந்து வருவதைப் பார்க்கலாம். புனிதமான அடிப்படை உண்மைகள் மறைந்து, சடங்குகளும் பிறவும் வளர்ச்சியுற்ற காரணத்தால், சமயங்களிடையே வேறுபாடும் பகைமை உணர்ச்சியும் தோன்றுவதாயிற்று. குருநானக் தோன்றிய காலத்தில் ஹிந்து சமயமும், இஸ்லாமிய சமயமும் இகலி நின்றன. இவ்விரு சமயங்களிடையே ஒற்றுமை நிலவும் வகையில், குருநானக் முயன்றார்; வெற்றியும் பெற்றார். இவ்வெற்றியின் விளைவே சீக்கியமாகும். (SIKHISM).

சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தவர் குருநானக் ஆவர். இன்று லாகூர் என்றும் வழங்கும் பதி பாகிஸ்தானில் உள்ளது. இப்பதிக்குத் தென்மேற்கில் அறுபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் தால் வரண்டி என்னும் ஊரில் குருநானக் 1469-ம் ஆண்டு தோன்றினர் இவர் இளமையிலேயே ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபாடு உள்ளவராக விளங்கினர். பள்ளி பயிலும் பருவத்திலேயே, தன்னை யொத்த சிறுவர்களோடு விளையாடுவதில் நாட்டம் செலுத்தாது, ஊர்தோறும் சுற்றி வருகின்ற புனிதமான பெரியவர்களது உறவை விரும்பினர். சமய சம்பந்தமான உரையாடல்களில், இவரது மனம் ஈடுபட்டது. இவர் மேற்கொண்ட தொழிலைவிடுத்து உண்மையை ஆராய முற்பட்டார். பின்னர் தாம் உணர்ந்த உண்மையினை

உலகிற்கு உணர்த்துவதைக் கடமையாகக் கொண்டார். இவர் பெற்ரோரது வற்புறுத்தலினல் மணந்தார். 1494-ம் ஆண்டு ஸ்ரீ சந்த் என்ற ஆண்மகன் பிறந்தார். பின்னர் இலக்குமிதாஸ் என்றவர் பிறந்தார். இவரது தமக்கையினிடத்துப் பேரன்பு பூண்டிருந்தார். இவர் இந்திய மாநிலமெங்கும் சுற்றிஞர். தெற்கே ஈழநாடு (Ceylon) வரையும், கிழக்கே அஸ்ஸாம் வரையும், மேற்கே பாக்தாத் வரையும் சென்று தாம் கண்ட உண்மைகளை எளிய சொற்களிலே எடுத்துரைத்தார். இவர் யாண்டும் எடுத்து வலியுறுத்திய உண்மை-இறையொருமையாகும். இறைவன் ஒருவனே-நாமனைவரும் அவனது மக்கள். உலகம் ஒன்று-மக்கட் சமுதாயம் ஒன்றே என்பன அவர் அடுத்தடுத்து வற்புறுத்திய உண்மைகளாகும். முதற் புனித பயணம் கி. பி. 1505-ம் ஆண்டு மேற்கொள்ளப்பெற்றது. இம்முறை குருக்ஷேத்திரம், பாட்ன, கயா, டாக்கா, சிட்டகாங், பூரி போன்ற இடங்கட்குச் சென்று திரும்பினர். இரண்டாவது புனிதப் பயணம் கி. பி. 1506-ல் ஏற்பட்டது. இம்முறை சென்னை, நாகப்பட்டிணம், இலங்கை, முதலிய பதிகட்குச் சென்ருர். மூன்ருவது புனிதப் பயணத்தை கி. பி. 1514-ல் மேற்கொண்டார். இம்முறை மானஸ்ரோவர், திபெத், கைலாஷ், காஷ்மீரம், ஜம்மு முதலிய இடங்கட்குச் சென்ருர். நான்காவது பயணம் கி. பி. 1518–1522-ல் ஆகிய இருகால எல்லைகட்கு இடையே நிகழ்ந்தது எனலாம். மெக்கா, மெடின, எருசலேம், பாக்தாத், பாரசீகம், பெஷாவார் போன்ற இடங்கட்குச் சென்றுள்ளார். கி. பி. 1531ம் ஆண்டு கர்தர்பூர் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். இங்கேயே அவர் இறுதி நாள் வரை தங்கியிருந்தார். இவருக்குச் சீடர்களாக அமைந்தவர்களே பின்னர் சீக்கியர்களாஞர்கள். ‘சிஷ்ய’ என்ற சமஸ்கிருத சொல், பஞ்சாபி மொழியில் ‘சீக்’ என்று வழங்குகிறது. (சீக்-சீடன்)

ஆதி கிரந்தம் என்பது பஞ்சாபி மொழியின் இலக்கியத்தில் மிகவும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இக்கிரந்தம் குருஅர்ஜன் என்பவரால் தொகுக்கப் பெற்றது. பதின்மர், குருமார்களாகச் சீக்கியரால் போற்றப்பெறுவர். இப்பதின்மருள், ஐந்தாவதாக அமைபவர் குருஅர்ஜன் ஆவர். இவர்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த ஹிந்து, முஸ்லீம் தூயோரது சிந்தனைகளைத் தொகுத்தார். இவற்றேடு முதல் நான்கு குருமார்களது சிந்தனைகளும் இவரால் தொகுக்கப் பெற்றன். குருஅர்ஜனின் வழி வந்தோர், மூலநூலிற்கு வேறு பல தூயோரது சிந்தனைகளைச் சேர்த்தனர். பத்தாவதாகத் தோன்றிய குரு கோவிந்த்சிங் என்பவர். அவருக்குப்பின் எவரும் குருவென்று மதித்தற்குரியவரல்லர் என்றார். ஆதி கிரந்தம் என்பது அனைத்து குருமார்களது குரலாகும். இது இன்றும் நிலவுகின்ற உண்மை. ஆதிகிரந்தத்தின் தனிச் சிறப்பு யாதெனில், ஹிந்து, முஸ்லீம் சமயப் பெரியோரது உபதேசங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதாகும். சீக்கியர்கள் போற்றுகின்ற பத்து குருமார்களது காலம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | குருநானக் | 1469—1539 |
| 2 | குரு அங்கத் | 1504—1552 |
| 3. | குரு அமர்தாஸ் | 1479—1574 |
| 4. | குரு ராம்தாஸ் | 1534—1581 |
| 5. | குரு அர்ஜன் | 1563—1606 |
| 6. | குரு ஹர்கோவிந்த் | 1595—1644 |
| 7. | குரு ஹர்ராய் | 1630 1661 |
| 8. | குரு ஹர்கிஷான் | 1656—1664 |
| 9. | குரு தேக்பகதூர் | 1621—1675 |
| 10. | குரு கோவிந்த் சிங் | 1666—1708 |

ஆதி கிரந்தம் ஃபரீத் (12ம் நூற்றுண்டு), பேனி (12ம் நூற்றுண்டு), ஜயதேவ (12ம் நூற்றுண்டு), சாத்ன (13ம் நூற்றுண்டு), திரிலோசன் (13ம் நூற்றுண்டு), நாமதேவ் (13ம் நூற்றுண்டு), இராமானந்த் (13ம் நூற்றுண்டு), செலயின் (1390—1440), பாபா (13ம் நூற்றுண்டு), கபீர் (1440—1518), இரவிதாஸ் (15ம் நூற்றுண்டு), தன்ன (16ம் நூற்றுண்டின் முற்பட்ட காலம்), பிகன் (16ம் நூற்றுண்டு), சூர்தாஸ் (16ம் நூற்றுண்டு), பரமானந் (இராமானந்தரின் சீடர்) ஆகியோரது பாடல்களையும் கொண்டதாகும்.

குருவின் வார்த்தையே ஆதிகிரந்தமாகும். இது கழிந்த காலத்தில் சொல்லப்பெற்றது என்று கொள்ளாது இன்றும் நமக்கு உணர்த்தி வருகின்றது என்று சீக்கியர் கொள்கின்றனர். தூயோர், தாம் ஆனந்த பரவசநிலை யெய்தும்போது குருவின் வார்த்தையைக் கேட்பார்கள். இதுவே உயர்ந்த நூலென்று போற்றப்பெறுகிறது. "இறைவன், ஆதிகிரந்தத்துள் வதிகின்றான்" என்று குரு அர்ஜன் கூறுகிறார். இக்கிரந்தத்துள் காணப்பெறும் பாடல்கள் இசையமைப்பு பெற்றவை. அனுபூதி நிலையில் அமையும் உள்ளத்தெழுச்சியின் பல்வேறு நிலைகளை, இப்பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. மேற்குறித்த பத்து குருமார்களும், பிறரும் இறைவனை தாம் தாம் உணர்ந்த நிலையில், அவ்வுணர்வின் வெளிப்பாடாக பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் இறைவனிடத்துக் கொண்டுள்ள அன்பானது கரைபுரண்டு ஓடுவதைக் காணலாம்.

மனித சமுதாயத்திற்குப் பொதுவாக உரியன, ஆன்மீகத்தை வளர்க்கும் இலக்கியங்கள். இத்தகைய பொதுமை வாய்ந்தது ஆதிகிரந்தம். சீக்கிய சமயத்தின் புனிதமான கோயில், அமிரித்சரஸ் என்னும் பதியில் விளங்கும் 'பொற்கோயில்' ஆகும். இங்கே ஆதிகிரந்தம் ஓதப்பெறுகிறது. ஆதிகிரந்தம் சிறப்பாகப் போற்றப்பெறுவதற்குக் காரணங்கள் பலவாகும். இன்று உலக மக்களிடையே திரு நூல்களென போற்றப்பெறுவனவற்றுள், ஆதிகிரந்தம் பெரிதும் மதிக்கப் பெறுவதாகும். திருக்குரானை முஸ்லீம்கள், விவிலியத்தைக் கிறித்தவர்கள் போற்றுவதைவிட சீக்கியர்கட்கு ஆதிகிரந்தம் சிறப்பு மிக்கதாகும். இந்நூல் சீக்கியரால் தொடர்ந்து என்றென்றும் குருவாகக் கருதிப் போற்றப்பெறுவதே இச்சிறப்பாகும். ஆன்மீக வாழ்விற்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாகும்.

சீக்கிய சமயத்தைக் கண்டவர், நிறுவியவர், குருநானக் அவர்கள் என்றாலும், அவர் தாம், இச்சமயத்தைத் தோற்றுவித்ததாகக் கொள்ளத் தயங்குவார். தமக்கு முன் விளங்கிய சமயப்பெரியோர் விடுத்துச் சென்ற தலையாய முக்கிய உண்மைகளைத் தொகுத்து வெளிப்படுத்திய பெருமையே குருநானக் அவர்களைச் சார்வதாகும். அல்லது, அவருக்கு

முன்னமைந்த சமய குருமார்கள் உரைத்தனவற்றுள் உள்ளீடாக விளக்கியவற்றைத் தொகுத்து வெளியிட்ட பெருமை குருநானக்கிற்கு உண்டு எனலாம். ஆதிகிரந்தத்தின் பெரும் பகுதி நானக் அவர்கள் பாடியருளிய பாடல்களானது. இவற்றுள் அவருக்குப் பின்னர் போந்த பல குருமார்களின் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. ஆதிகிரந்தத்தை டாய்ன்பீ (Toynbee) என்கின்ற வரலாற்றுப் பேரறிஞர் 'சமயப்பொறை மிக்க சமய இலக்கியம்' (Catholic anthology) என்று பாராட்டியுள்ளார். குருநானக் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட இந்திய தீர்க்கதரிசிகளது பாடல்களும் ஆதிகிரந்தத்துள் இடம் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் சீக்கியர் அந்த தீர்க்கதரிசிகளிடத்துக் கண்ட ஒத்த உணர்ச்சியே ஆகும்.

சில பாடல்கள் ஹிந்துக்களால் பாடப்பெற்றவை; பிற முஸ்லீம்களால் பாடப்பெற்றவை. சீக்கியம் சமயமாக உருப்பெற்றது குருநானக். காலத்திற்குப்பிறகு என்றே கொள்ள வேண்டும். இவ்வாறு சமயமாக சீக்கியம் நிலைபெறுவதற்கு முன்னால் விளங்கினவர்களும் சீக்கியர்களே என்ற கருத்து ஆதிகிரந்தத்தைத் தொகுத்தவர்களிடம் நிலவியது. பொதுமையான, ஆன்மீக உண்மைகளை அவரவர் மேற்கொண்டு ஒழுகிய சமயங்களுள் காண முற்பட்டனர். இப்பொது உண்மைகளை வலியுறுத்தியபோது இவை, அனைத்துச் சமயங்கட்கும் உரியவை என்ற உணர்ச்சி மேலோங்கி இருந்தது.

ஹிந்துக்களும், முஸ்லீம்களும் இணைதற்கு உரிய பொதுவான சில அடிப்படைகளைச் சீக்கியம் கண்டது. ஆதலால் சீக்கிய சமயம்-ஹிந்துமதம், இஸ்லாம் ஆகிய இவ்விரண்டையும் இணைக்கும் பாலம் எனலாம். இவ்விரு சமயங்களிடத்து விளங்கும் ஒற்றுமைக் கூறுகளைக் கண்டு, தெளிந்து வலியுறுத்திய பெருமை சீக்கியத்திற்கு உரியதாகும். புறத்தே நோக்கும்போது, இந்துக்களும், முஸ்லீம்களும் இகலி நிற்பவர்போல் தோன்றினாலும் இவர்கள் தத்தம் சமயங்களைப் பகைமை பாராட்டாமல் போற்றலாம் என்ற உண்மையைச் சீக்கியம் சிறப்பாக வற்புறுத்தியது. சமயத்

தின் பெயரில், எழுந்துள்ள குறுக்குச் சுவர்களைக் கடந்து, அடிப்படையான ஒற்றுமைக்கூறுகளை, இரு சமயங்களையும் இயைபுபடுத்தும் உண்மைகளை, கண்ட பெருமை சீக்கிய குருமார்கட்கு என்றும் உண்டு.

மனிதனின் வருங்கால சமய வாழ்வு எத்தகையதோ என்ற ஐயம் நமக்கு எழலாம். அதைப்பற்றித் தெளிவான கருத்து நம்மிடத்தில் அமையாது இருக்கலாம். ஆனால் ஓர் உண்மையை நாம் முன்னரே அறிய இயலும். இன்று நம்மிடை வாழ்கின்ற உயர் சமயங்கள் ஒன்றையொன்று ஊக்குவனவாக அமைந்துள்ளன. இவ்வூக்கம் இன்று, முற் காலத்தைவிடச் சிறிது வலிவு தோன்ற அமைகிறது. மேலும், ஆழ்ந்த கருத்துக்களின் அடிப்படையில் ஒன்றை யொன்று ஊக்குவதால் நல்லபயன் விளையும். இன்று உலகின் வெவ்வேறு பகுதிகள் விஞ்ஞான வளர்ச்சியின் காரனத்தால் நெருக்கம் கொள்கின்றன. வெவ்வேறு இனங்களும் இணை கின்றன. இந்நிலையில் சமயங்களிடையே நிகழ இருக்கும் உரையாடல்கள் பொருண்மை உடையனவாகலாம். இத்த கைய உரையாடல்களுள் சீக்கிய சமயமும், அதன் திரு நூலாகிய ஆதிகிரந்தமும் சீரிய பங்கு ஏற்கலாம். ஏற்பின், உரையாடல் சமய உலகில் ஒருமை எய்துதற்குரிய வழி வகைகளை வகுக்கும். பயனுள்ள வகையில், இருபெருஞ் சமயங்களாகிய ஹிந்து சமயமும், இஸ்லாமும்—இயைய, ஒற்றுமை காண இயலும். இத்தகைய முயற்சி சிறப்பாக அமைந்துள்ளது. சீக்கிய சமயமே, இம்முயற்சிக்குத் தலை சிறந்த சான்றாகும். இது வரவேற்றற்குரியதாகும் என்று டாய்ன்பீ (Toynbee) என்ற பேரறிஞர் கருதுகிறார்.

ஆதிகிரந்தத்துள், ஹிந்து சமயத்தைச் சார்ந்தோரும், இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தோரும் பாடியருளிய பாக்கள் இடம் பெற்றுள்ளதைக் கண்டோம். இத்தகைய நிலை, இந்திய மரபிற்கு ஏற்ப அமைவதாகும் இந்தியா என் றென்றும், பிறசமயங்களைப் போற்றியுள்ளது. மனிதனுக்குத் தான் கண்ட உண்மைகளை உரைக்க உரிமையுண்டு. இவ் வுரிமையை நமது நாடு போற்றிப், பேணி வளர்த்தது.

ஒரு சமயத்தைச் சார்ந்தவன் மற்றொரு சமயத்தைச் சார்ந்தவனைச் சகித்துக் கொள்ளுதல் அத்துணைச் சிறப்புடையதன்று. சகிப்புத் தன்மை மட்டும் வெவ்வேறு சமயத்தவரிடத்து, நல்லெண்ணத்தையும், நேயத்தையும் வளர்க்காது. பிற சமயங்களை ஆழ்ந்து கற்று அவற்றிடையே நிலவும் உண்மைகளை நாம் போற்றுதல் வேண்டும். சமயந்தோறும் பல பெரியவர்கள் வாழ்க்கை வளம்படுவதற்குரிய நெறிகளைக் கண்டுள்ளனர். இந்நெறி முறைகளை நாம் அறிதல் வேண்டும்.

சமயந்தோறும் உயர்ந்த உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்த பெரியோர் உளர். இவர்கள் தாம் உயரிய வாழ்வு வாழ்ந்ததோடல்லாது பிறர் வாழ்வதற்கும் உரிய வழி வகைகளைக் கோலினர். இதனால் தான் தூயோரை உலகிற்கு உரியவர் என்று கூறுகிறோம். இவர்கள், பிறப்பால், வாழ்ந்த சூழலால், பயின்ற மொழியால், ஓரிடத்திற்கு, ஓரினத்திற்கு உரியவர் என்றாலும், இவர்கள் தாம் வகுத்த கொள்கையால் உலகிற்கு உரியவர்களாவார்கள். இவர்களை அநுபூதிச் செல்வர் (Mystics) என்று வழங்குகிறோம். இவர்கள் உலக மக்களாவார். இவர்களது மனம் மத நெறி கடந்தது; மூடநம்பிக்கைகளைத் தவிர்த்தது; ஆராயாது கொள்கைகளை வற்புறுத்துகின்ற போக்கு இல்லாதது; சடங்குகளை நீக்கியது; சமயங்களின் அடிப்படையான எளிய, ஆனால் உயர்ந்த உண்மைகளை நிலைநாட்டுவதாகும். அகவாழ்வின் பண்புகளைக் காத்த பெருமை, இத்தகைய உலகப் பெரியவர்கட்கு உரிய ஒன்றாகும்.

குருநானக் காலத்திய ஹிந்துமதத் தலைவர்கள் ஆன்மீக உண்மைகளை மக்கட்குப் போதிக்க மறந்தனர். மக்கள் மூடநம்பிக்கைகளிலும், பருப்பொருட் கோட்பாடுகளிலும் சூழ்ந்து, ஆன்மீக உண்மைகளை மறந்தும், மறுத்தும் வந்தனர். சமயத்தைச் சாதி பாகுபாடுகளென்று கொண்டனர். உணவு, பருகும்நீர் போன்றவற்றோடு தொடர்படுத்தி சமயத்தைக் குறுகிய நிலையில் கொண்டனர். முஸ்லீம்களும் மூடநம்பிக்கைகளுக்கு ஆட்பட்டிருந்தனர். அவர்களது தலைவர்களுள் சிலர்

பொறையற்றவராய் விளங்கினர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பெரியார்கள் தோன்றி மக்கட் சமூகத்திற்குச் சமயத்தின் பெயரால் விளங்கிய முறையற்ற செயல்களையும், கொடுமைகளையும் எடுத்துக்கூறி, ஆங்காங்கு விளங்கிய சமயங்களைத் திருத்த முற்பட்டனர். இவ்வாறு தோன்றியவர்களே ஞானேஸ்வர், நாம்தேவ், ஏக்நாத் (மஹாராஷ்டரம்) குஜராத்தில் நரசிங்மேத்தா, வங்கத்தில் சைதன்யர். உத்திரபிரதேஷில் கபீர், ஆந்திரத்தில் வல்லபாச்சாரியர் போன்றோராவர். இவர்கள் மக்களிடத்துத் தமது தூய வாழ்க்கையாலும், போதனையினாலும், விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினர். இவ்விழிப்பு பக்தியாக, பெருகிய அன்பாக, மக்கட் சமுதாயத்தையே தழுவிநிற்கும் தயையாக உருக்கொண்டது. ஒருவனது சமயத்தின் அளவுகோல் அவனது கொள்கைகளன்று. அவனது ஒழுகலாறேயாகும். உண்மையையும் அன்பையும் புறக்கணிக்கின்ற எந்த இதயமும் இறைவன் உறைகின்ற கோயிலாகாது. மக்களிடையே அன்பை, உண்மையான பக்தியைப் போதித்த தூயோர் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க பெரியார் குருநானக் ஆவார். மக்கள் தங்கள் பிழைகளை உணர்ந்த காலத்தில் குருநானக் தோன்றி, சமயத்தின் உள்வீடு எது என்று எடுத்துரைத்தார். அவருக்குப்பின் தோன்றிய ஐந்தாவது குருவே, சீக்கிய சமயத்தை வகுத்தவர். புதியதொரு சமுதாயத்தை உருவாக்கியவர் எனலாம்.

ஐந்நூறு ஆண்டுகட்குமுன்னர் குருநானக் என்னும் கதிரவன் இந்நிலவுலகில் தோன்றினன். குருநானக்கின் வாழ்வு, இவ்வுலகில் தொடர்ந்த பல அறைகூவல்களாக அமைந்தது. அவரது வாழ்வு உண்மையின் புலப்பாடாகவும், செயல்நிலையில் நம்மை ஊக்குவதாகவும் அமைந்தது, அவரைக்கண்டவர்கள். அவரது உபதேசங்களை கேட்டவர்கள், ஆன்ம ஞானத்தின் ஊற்றாக அவர் விளங்கியதை உணர்ந்தார்கள். மன அமைதிக்காகவும், ஆன்ம ஒளிக்காகவும், அவரைக்கண்டவர்கள், அணுகியவர்கள், அமைதியே அன்பே, கருணையே உருவாக மாற்றம் பெற்றனர். காந்தம் மிகுந்த அவரது ஆளுமை, தோற்றப்பொலிவு, சாந்தம் தவழும் இன்முகம் யாவரையும் ஈர்த்தன. சமயத்தின் சிதைவும் அழிவும் அவரது

கருத்தை மிகவும் ஈர்த்ததால், அவற்றிற்குக் காரணமான வற்றை வன்மையாகக் கண்டித்தார். சமுதாயத்தின் நலிவுகளை நாடி. அவற்றிற்கு உரிய காரணங்களைக்கண்டு, அவற்றைப் போக்க வழி வகைகளை வகுத்த திறமையும், அவரது தூய வாழ்வும், பொலிவும், அவரைத் தனித்த, சிறந்த தீர்க்கதரிசி யாக ஆக்கியது.

குருநானக் அவர்களது வாழ்நாளில் சமயம் மூடுபனி போன்று மங்கலான புகைமண்டமாக விளங்கியதெனல் வேண்டும் பொய்ம்மையும், புரட்டும், வஞ்சகமும், சமயத் தின் பெயரால் தழைத்தன. இவற்றைஅவர் கடிந்தார். சமயப்போர்வையில், விளங்கிய ஆரவாரமான போக் கையும், கொடுமையையும் அவர் சாடினர் அன்று ஹிந்து மதம் புரோகிதருடைய ஆட்சியில் சிக்கித்தவித்தது ஹிந்துக்கள் செயலற்றவர்களாக, அடிமைகளாக வாழ்ந்தனர். மூடநம்பிக்கைகள், பொருளற்ற சடங்குகள். கேடு பயக்கும் சமுதாய சட்டங்கள் ஆகியவை சமயப்பூச்சு பெற்று, மீற வொண்ணுதவையாகக் காட்சியளித்தன. அடங்கி, ஒடுங்கிப் போகின்ற ஹிந்து சமுதாயத்தை நோக்கி, நானக் அறை கூவி ஞர். சமயத்தின் உயிர்ப்பு, தூய வாழ்வில் விளங்குவதென்று வற்புறுத்தினர். நன்னடத்தை, சீரிய ஒழுகலாறு சமயத்தை வளர்ப்பது என்று நன்கு வற்புறுத்திஞர். அன்பு, இரக்கம். ஒப்புரவு ஆகிய உயர்ந்த சமூக பண்புகளை அவர் வலியுறுத்தி மக்கள் அவற்றை மேற்கொள்ளுமாறு செய்தார். அவர் ஆற்றிய பணியின் கீர்த்தியினை அறிய, அந்நாளில் நிலவிய அரசியல் சூழ்நிலையை அறியவேண்டும். அப்போதுதான் அவரது பணி யின் பெற்றி நமக்குப்புலனுகும். ஒருவாறு அவர் காலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையை ஆங்காங்கு குறித்துள்ளேன்.

அஜிதரந்தவா என்பவர் குருநானக்கை நோக்கி, அஹிம்சையைப்பற்றி வினவுகிருர். குருநானக்கின் மறுமொழி கீழ்வருமாறு அமைந்தது.

(1) எவருக்கும் தீது நேர்தல்வேண்டும் என்று விழை யாதே!

(2) எவரிடத்தும் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தாதே!
(3) எவருடைய பணிக்கும் இடையூறு விளைக்காதே!
(4) எவரேனும் உன்னைப்பற்றிக் குறைவாகப் பேசினால், அவரை மன்னித்துவிடு!
(5) உடலால், உள்ளத்தால், ஆன்மாவினால் பொறுக்கின்ற பாங்கினைப் பயில்க. உடலால், உள்ளத்தால் நேருகின்ற துன்பங்களைப் பொறுத்துக்கொள்க!
(6) உனது வாழ்வு கெடுமானாலும், கவலைகொள்ளாது, பிறர் துன்பத்தைக் களைக.

மேலே குறித்தனவற்றுள் முதல் மூன்றும், சிந்தனை, சொல், செயல் ஆகிய நிலைகளில், இன்னா செய்யாமையை எவ்வாறு போற்றுதல் வேண்டும் என்பது குருநானக் அவர்களால் விளங்கப்பெறுகிறது. மேலும் நானக் கூறுவது, "எவரிடத்தும் பகைமை கொள்ளாதே; இறைவன் உயிர்தோறும் விளங்குகின்றான்; மன்னித்தல் என்பது, அன்பின் உயர்ந்த வளர்ச்சி பெற்ற நிலையாகும்; ஆற்றல் சான்றதாகும். எங்கே மன்னிப்பு நிகழ்கிறதோ, அங்கே இறைவன் உளன்."

எவரும், மற்றவர்களை, அவர்களது ஜாதியினைப்பற்றியோ உட்பிரிவுகளைப்பற்றியோ கேட்கக்கூடாது. இறைவன் எல்லா உயிரிடத்தும் தங்கியிருத்தலால் எவரையும் வெறுத்தொதுக்குதல் தகாதது ஆகும். முற்றிலும் நம்மை இறைவனிடத்தில் ஒப்புவித்து வாழ்வோமேயானால், நாம் இவ்வுலகில், இறைவனது சித்தத்தை நிறைவேற்றுபவர்களாவோம்.

சமயம் வளர்ந்த வரலாற்றினைச் சுருக்கி உரைத்துள்ளேன் சமயங்களை ஒப்புநோக்கிக் காணும் நெறி இந்த நூற்றாண்டில் வளர்ந்து வருவதையொட்டி, சீக்கிய சமயத்தைப் பற்றிச் சுருக்கமாக இந்நூலில் எழுத முற்பட்டுள்ளேன். குருநானக் கண்ட இறைக்கொள்கை அடுத்து இடம்பெறுகிறது. அவரை ஓர் அனுபூதிச் செல்வர் (Mystic) என்ற தலைப்பிலும், சில கருத்துக்கள் வழங்கப்பெற்றுள்ளன. 'சீக்கிய சமயம்' என்பது யாது? அதன் வளர்ச்சியும், வாழ்வும் என்பனவும்

இடம்பெற்றுள்ளன. சமயத் தலைவர்கள் சமுதாயத்தைப் புறக் கணித்தவரல்லர். ஆதலால், குருநானக் கண்ட சமுதாயமும் இங்கே விளக்கம் பெற்றுள்ளது. சிறந்த ஒழுகலாறு சீக்கியத்தின் அடிப்படை ஆதலால் நானக் கண்ட அறவாழ்வும், விளக்கப் பெற்றுள்ளது.

## குருநானக் கண்ட இறைவன்

இறைவன் ஒருவனே,
அவன் என்றுமுள்ளவன்,
எங்கும் நிறைந்தவன்,
படைத்தோன்,
மேலான பரம் பொருள்,
அச்சமில்லாதவன்,
பகைமை இல்லாதவன்,
காலங்கடந்தவன்,
அவதாரஞ் செய்யாதவன்,
தன்னுண்மை உள்ளவன்,
குருவின் அருளால் அவனை அடைய, உணர இயலும்.

குரு 1 ஜப்ஜி

இந்த மேற்கோள், குருநானக் இறைவனைப்பற்றிக் கொண்ட கருத்துக்கள் யாவற்றையும் நமக்குச் சுருக்கி உரைப்பதாகும். இறைவனை 'அல்லா' என்றும் நானக் குறிக்கின்றார். அவனை அறிய இயலாது என்கிறார். உலகு, போக்கும், வரவும் உடையது. பரம கருணைமூர்த்தியாகிய இறைவனே என்றுமுள்ளவன். "இறைவனை நான் அறிய நேர்ந்தாலும் நான் அவனது இயல்புகளை விரித்துரைக்க இயலாது" என்று குறிக்கின்றார். இறைவன் வேதங்கள், திருநூல்கள் யாவையும் கடந்து விளங்குகிறான். சொற்கள் அவனது குணங்களைச் சரிவர உணர்த்தமாட்டா என்பது குருநானக் கருத்தாகும். மேலும் அவர் மிகுந்த பணிவுடன் கூறுவது, "நீ இன்றி அனைத்தும் பொய்யாகும்." உலகில் மக்கள் படுந்துன்பங்களனைத்தையும் களைபவன்; பாவச் செயல்களை நீக்கித் தூய்மைப்படுத்துவதும் இறைவனே ஆவான். யாவும் இறைவனது

உடைமை" என்பதை நன்கு வெளிப்படுத்தி, நானக் கூறுவது "நீயே என்றும் உள்ளவன்; நீயே உண்மையான தலைவன். எனது ஊன், உடம்பு யாவும் நின்னதே" என்பதாகும்.

இவ்வகையில் நம்மிடத்து உள்ளன யாவும் இறைவனது உடைமை என்று கொள்ளும்போது, நாம் இறைவனுக்கு அர்பணிக்கத் தக்கது யாது? என்று வினவுகிறார்! நானக் "உலகு ஒரு தோட்டம்; இறைவன் தோட்டக்காரன்; அவன் யாவற்றையும் கவனித்துக் கொள்கிறான்; எதுவும், (எவரும்) அவனது பார்வையினின்று நீங்குதல் இயலாது." என்பது அவர் கருத்து.

## எல்லாம் வல்லவர்

படைக்கப்பெற்றுள்ள யாவும் இறைவனது ஒழுங்கைப் புலப்படுத்துகிறது. இறைவனை அன்றி வேறு எவரும் ஆற்றல் சான்றவராக விளங்குகின்றாரிலர். இறைவனே நமக்குப் புகலிடமாவான். நமக்கு ஆதாரமாக விளங்குகின்றவனும் அவனே! நமது வாழ்விற்கு நிலைக்களமாக விளங்குகின்ற இறைவனை நாம் பணிதல் வேண்டும். அவனுடைய தொண்டிற்கு நம்மை அர்ப்பணித்துக் கொளல் வேண்டும். நின்றும், அமர்ந்தும், விழித்தும், உறங்கியும் இறைவனுக்கே நாம் ஆட்பட்டு ஒழுக வேண்டும் என்று பல இடங்களில் குருநானக் வற்புறுத்தியுள்ளார். இறைவன் இம்மை, மறுமை ஆகிய இருவுலகங்கட்கும் தலைவனாவான் எவ்வுலகும் அவனது ஆட்சியில் அமைவதே ஆகும். இறைவனால் காக்கப்பெற்றவன் கவல்வதற்கு ஏதுமிலது இறைவனை அன்றி நம்மைக் காப்போன் வேறு எவரும் இலர். நிலமாயினும், நீராயினும் உடைமையாதாயினும் இறைவனே நம்மைக் காப்போன் ஆவான். இறைவனே நமக்கு வாழ்வு நல்குகின்றவன்; அல்லது போக்குகின்றவன், ஆதலால் மனதை நோக்கி, குருநானக் கூறுவது, "உலகைக் குறித்து கவலையற்றவனாக விளங்கு; உனக்கு அமைந்த வாழ் நாட்களை அமைதியுடன் கழிக்க முற்படு."

## எல்லாம் அறிந்தவர்

"மக்களே! என்னை நம்புங்கள். எனது இறைவன் எல்லோரது உள்ளங்களையும் நன்கு அறிவான்." நாம் செய்வன யாவும் இறைவன் அறிவான். இறைவனிடம் சரண் புகுந்து, நமது குறைகளைக் கூறி அவனது கருணைக்காக இறைஞ்சுவோமேயானால் அவன் இரங்குதல் உறுதியாகும். செய்த பிழைகட்காக கழிவிரக்கமும், திருந்திய வாழ்வும் நம்மை உய்விக்கும் என்றும் இவ்வகையில் முயல்வோருக்கு இறைவன் கருணை உறுதியாக அமையும் என்றும் நானக் தெளிவுபடுத்துகிறார்.

ஒருவன் எவரும் அறியாத நிலையில், மற்றொருவனை ஏமாற்றலாம். ஆனால் அவனது உள்ளத்தை இறைவன் அறிவான். நாம் ஏதும் உரைக்காத நிலையிலும், நமது உள்ளத்தை இறைவன் நன்கு உணர்வான். மனிதன் பல வியப்பான செயல்களில் தனது மனத்தை ஈடுபடுத்துகிறான். ஆனால், பெரும் வியப்பு யாதெனில் இவன் இறைவனை அறியாது ஒழுகுதலாகும். இத்தகைய கருத்துக்கள், இறைவன் உடனிருந்தே நம்மைக் கண்காணிக்கின்றான் என்பதாகும்.

## எங்கும் நிறைந்தவர்

"இறைவனே யாண்டும் நீ உள்ளாய். நான் எவ்வெவ்வற்றைக்கண்டாலும் ஆங்காங்கே நீயே உள்ளாய்" என்று இறைவனது நீக்கமற நிறைந்த நிலையை நானக் விளக்குகிறார். நாம் நமது செயல்களை மறைக்க வறிதே முயல்கின்றோம். தூயதல்லாத செயல்களைச் செய்கிறோம். ஆனால் இறைவன், நமக்கு மிகவும் நெருங்கியுள்ள பொருளைவிட, மிகவும் நெருக்கமாக விளங்குகிறான். கழிந்த காலத்தில், நிகழ்வில், வருங்காலத்தில், காலக்கூறுகள் யாவற்றிலும், இறைவன் விளங்குகிறான். இறைவனது கருணையினாலே, அன்பினாலே நாம் வாழ்கின்றோம். இறைவனது பேரன்பில் திளைத்து, அழுந்துமாறு, இறை நினைவு நீங்காதவாறு வாழும்படி நானக் நம்மை நோக்கிப் பணிக்கிறார். படைப்புயிர்தோறும், படைப்புகொண்டுள்ள பொருள் தோறும், இறைவனைக் காணலாகும்

என்று அவர் கூறுகிறார். இவ்வுலகைப் படைத்தவனே நமது பாவங்களை அழிக்கவல்லவன். நாம் அறியாமை வயத்தவர்கள். ஆதலால் இறைவன் எங்கோ தொலைவில் உள்ளதாகக் கற்பனை செய்கின்றோம். நமது நண்பனாகிய இறைவன், நம்முடனேயே இருக்கின்றான். இறைவன் யாண்டும் நிறைந்து விளங்குகிறான். அவனை நமது உள்ளத்திலே கண்டுகொள்ள இயலும். குருநானக், தமது உள்ளத்திலே, குருவின் கருணையால் கண்டுகொண்டதாகக் கூறுகிறார். இறைவன் எப்போதும் நம்முடன் இருப்பதால், அவரது சந்நிதியினின்றும் நாம் விலகுதல், தப்புதல் இயலாது என்பது குருநானக் அவர்களது முடிபாகும். அநுபூதிச் செல்வர் இறையின் இருப்பை உணர்ந்து உரைத்துள்ளதைப்போலவே நானக் அவர்களும் இதுகாறும் கூறியவற்றால், குறித்துள்ளார்.

## எவ்வடிவும் இறைவன் வடிவமாகும்

“எதை நான் பார்த்தாலும் அதை நினது வடிவாகக் காண்கிறேன்.” இறைவன் தன்னை வெளிப்படுத்தும் வடிவங்கள் பலவாகும். கதிரவனது இயக்கத்தால் நாள், வாரம், திங்கள், ஆண்டு என்று நாம் காலக் கழிவைக் கணக்கிடுகிறோம். கதிரவன் ஒருவனே என்றாலும் பருவங்கள் பலவாகும். இதேபோல், படைத்தோன் இறைவன் ஒருவனே என்றாலும், அவன் வெளிப்படும் வடிவங்கள் பலவாகும். குருமார்கட்கெல்லாம் குருவாக விளங்குகின்றவன் ஒருவனே. அவனது கோலங்கள் பலவாகும். இறைவனுக்கு வடிவம் இல்லை. ஆனல் வடிவங்கொண்டு விளங்குகின்றான். அவன் பரம்பொருள். எனினும் உறவு கொள்பவன். அவனை உணர்ந்தோர் அவன் ஒருவன் எனகின்றனர். ஆனல் அவ்வொருவனே பலராகின்றான். அவன் நிறம் கடந்தவன்; குறி கடந்தவன்; இத்தன்மையன் என்று மதிக்கவொண்ணுவன். வடிவமற்ற நிலையிலும் அவனது கோலம் வியப்பானது. குருவின் கருணையால், இறைவனை நானக் உணர்ந்ததாகக் கூறுகிறார். இறைவன் நிறைவானவன்; அவனை துன்பத்திலும், இன்பத்திலும் மறத்தலாகாது என்று நானக் வலியுறுத்துகிறார்.

## இறைவன் பிறப்பில்லாதவன்

"இறைவன் திருவுருக் கொண்டான், பிறந்தான் என்று கூறும் நாவானது எரியுண்ணட்டும்." இறைவன் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை. அவன் ஊனுடம்பு கொள்வதுமில்லை, மடிவதுமில்லை. அவன் போக்கு வரவில்லா புண்ணியன். அவன் என்றென்றும் விளங்குகின்றவன். அவன் எவ்வித மாற்றத்திற்கும் உட்படாதவன்; மாறுபாடில்லாதவன் அவன்து பெருமையை நாம் ஆழங்காண இயலாது. என்றெல்லாம் தெளிவாக அவதாரக் கருத்துக்களை நானக் மறுத்துள்ளார்.

குருநானக் கூறுவது "இறைவன், நமது தலைவன், மரணமில்லாதவன். ஆதலால் நான் மரணத்திற்கு அஞ்சேன்; அவன் அழிவில்லாதவன், ஆதலால், நான் அழிவதற்கு அஞ்சேன்;" என்று தான் சார்ந்த தலைவனது இயல்புகளை உணர்த்தி தனது உறுதியினைப் புலப்படுத்துகிறார்.

## இறைவன்—படைத்தோராவர்

இறைவனே யாவற்றையும் படைத்தோனாவான்; படைப்போனாவான்; அவனது செயல்களில் எவரும் தலையிடுதல் இயலாது ஒரு வார்த்தையைக் கொண்டு இவ்வுலகை—உலகிலுள்ளனவற்றைப் படைத்தான். இவ்வார்த்தையினின்று பிற யாவும் தோன்றின. படைத்தோனே, யாவற்றையும் அழிப்போனாவான். படைத்த இவ்வுலகை இரட்சிப்பவனும் அவனே! இவ்வுலகை நிருவகிப்பவனும் அவனே! இறைவனே ஆதியில் இருந்தவன் தோற்றமும் அவனே! நிறைவான நிலையில் விளங்குகின்றவனும் அவனே! படைத்தவனே அழிக்க இயலும். வேறு எவராலும் அழித்தல் ஒண்ணாது படைக்கப்பெற்ற இவ்வுலகு இறைவனது லீலையாகும். "எல்லையற்ற காலம்வரை இருள் நிலவியது; பூமியும் இல்லை; வானமும் இல்லை; இரவும் இல்லை; பகலும் இல்லை; சந்திரனும், சூரியனும் இல்லை; இறைவன் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தான், பின்னர் இப்பிரபஞ்சம் தோன்றுவதா

யிற்று. இறைவனது திருவுள்ளகிடக்கையே, பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாகும். இவ்வுலகு, இறைவனது சங்கல்பம் என்று பிற நூல்கள் கூறுகின்றன.

## இறைவனே பாதுகாப்பவர்

நன்னெறியினின்று விலகி தீயநெறிப்பட்டோரைக் காப்பவன் இறைவன். நமது பாவச் செயல்களினின்று நம்மை மீட்பவன் அவனே! இறைவன் தமது அருளால் பாவிகளை இரட்சிக்கின்றான். இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் நம்மை அவன் காக்கின்றான். மாடு மேய்ப்ப வன் மாடுகளைக் காப்பதுபோல, இறைவன் சிறந்த மேய்ப் பாளை விளங்கி நம்மை எல்லாம் காக்கின்றான். இறைவன் நம்மைக் காக்கவேண்டில் நாம் இடையருது அல்லும் பக லும் இறைவனை நினைத்தல் வேண்டும் என்று நானக் கூறு கிறார். இறைவனது கருணையே நம்மைக் காத்தல் இயலும் வேறு எவராலும் காக்க இயலாது. இறைவனது புகழைப் பாடுவோர். இவ்வுலகில் மாயையின் மயக்குகளிலிருந்துநீங்கி அவனது கருணையினால் தப்பியோராவர். இறைவன் நம்மை காத்தால், நாம் அல்லலுற வேண்டுவதில்லை நாம் நமது செயல் களால், அறமல்லாதவனவற்றைப் பின்பற்றுதலால் இறை வனிடமிருந்து பிரிந்தவர்களாகின்றோம். இறைவனது கருணையே நம்மை காக்கும். பக்தி சமயங்களைப்போல நானக், இறையருளே நம்மைக் காப்பது என்று கூறுகிறார்.

## இறைவன் நலம் பல பயப்பவர்

அனைத்துயிர்க்கும் நற்செயல்களைப் புரிந்தவன், புரிபவன் இறைவன். உணவு, உடை, உணர்வு, ஞானம், அறிவாற்றல், புகழ், அழகு, செல்வம் போன்ற அனைத்தையும் நல்கியவன் இறைவன். அன்னைத் தனது மக்களைக் காப்பது போல, உயி ரினங்களைப் பேணுபவன் இறைவன். அனைத்துயிர்க்கும் ஒரு வனே; அவன் அருளாளன். அவனை நாம் என்றும் மறக்கலா காது. வாழ்க்கைக்குரிய வளம் பல கண்டபிறகே, உயிரினங் களைப் படைத்துள்ளான். இறைவனே கொடையாளி, உயிர்

களைத்தும் அவனால் உண்டாக்கப் பெறுகின்றன. ஒவ்வொரு உயிர்க்கும் அன்றாட உணவை அவன் தருகின்றான். நமது விருப்பங்களை இறைவன் நிறைவேற்றுகின்றான், நன்றி கொன்றவர்கட்கும் உணவு வழங்குகிறான். அவனே கொடுப்பவன். நாமனைவரும் அவனிடமிருந்து பெறுவோராவர். தூயோர் துறந்தோர், யாவரும் அருளாளனாகிய இறைவனையே துதிக்கின்றனர்; வழிபடுகின்றனர். இறைவன் நமது உள்ளத்தில் உறைகின்றான். அவனையே தொழுது உய்யவேண்டும் என்பது குருநானக் அவர்களது அருளுரையாகும். இறைவன் பேரன்புகொண்டு உயிர்களை இரட்சிக்கின்றான். உயிர்களது அருகதைநோக்கி அவனது அருள் அமைவதிலது. இறைவனுக்கு ஆட்பட்டோர், விடுதலை பெறுகின்றார். நானக் இறையை உணர்ந்த அளவிலேயே அவரது துன்பங்கள் யாவும் நீங்கின என்கின்றார். எவ்வுயிரையும் தாங்குகின்ற இறைவனிடத்துச் சரண்புகுமாறு நமக்கு அருளுரை வழங்குகிறார். இக்கருத்தும் பக்திநெறியின் சிறந்த கூறாகும்.

## இறைவன் இருப்பிடம்

கபீர் கூறுவது:

"முல்லாவே! தூபியின் உயரத்திலிருந்து ஏன் உரத்த குரலில் கூக்குரலிடுகிறாய்?

நமது தலைவன் செவிடன் அல்லன்.

எவருக்காக நீ கூக்குரல் இடுகிறாய்?

உனது இதயத்தில் அவனைக் காண்க."

நானக் கூறுவது, "நான் யாண்டும் இறைவனைத் தேடிவிட்டேன். எப்பொருளிலும் அவன் இல்லாமல் இல்லை, அவனே விளங்குகிறான். இறைவன் இதயந்தோறும் விளங்குகின்றான். ஆதலால், இதயத்தில் அவனைத் தேடுதல் வேண்டுமென்கிறார். இறைவன் உயிர்தோறும் விளங்குவதால், எவரிடத்தும் கடுமையாக நடந்து கொள்ளுதல் ஆகாது; பிறரைத் துன்புறுத்தல் தகாதது. ஏனெனில் எல்லோரும் விலை மதிப்

பற்ற மணிகளாவர் என்று நமக்கு அன்புநெறியை வலியுறுத்தி குருநானக் நல்லுரை பகர்கின்றார். இறைவன் எல்லாப் பொருள்களிலும் வதிந்தாலும். இதயந்தோறும் விளங்கினாலும் அவனை எப்பொருளிலும் தனித்த நிலையில் காண இயலாது காரணம், அவன் பொருள்களிடத்து கலப்பமின்றி விளங்கு கிறான். அவன் தனித்தன்மை வாய்ந்தவன். யாண்டும் நிறைந்து அவ்வவற்றை அவன் இயக்குகின்றான். தூயோர், துறவோர், புனித ஆன்மாக்கள் ஆகியவரிடையே இறைவன் விளங்கு கிறான். நமது உள்ளமே கோயிலாகும். உள்ளத்தைச்சுற்றி அமைந்துள்ள வேலி போன்றது நமது உடலாகும். உள்ளத் தினுள் இறைவன், எல்லையில்லாதவன் விளங்குகின்றான்.

கபீர் மேலும் கூறுவது :

“அல்லா மசூதியில் மட்டும் இருப்பானே ஆனால் எஞ்சும் பிற இடங்கள் எவருக்குச் சொந்தம்? ஹிந்துக்களுக்கு இறை வன், ஆலயத்துக்குள் விக்ரகங்களில் அர்ச்சை வடிவினனாக விளங்குகிறான் என்பர். இவ்விருவர் கூற்றிலும் உண்மை யில்லை. அல்லா! இராம் என்று விளித்து, உன்னைப் புகழ்த லால் நான் வாழ்கின்றேன். உனது அருளை என்மீது பொழிக! ஹிந்துக்களுக்கு ஹரி, தெற்கே உள்ளான். முஸ்லீம்களுக்கு அல்லா, மேற்கே உள்ளான் உனது இதயத்தைத் தேடு — அதுவே அவனது இருப்பிடமாகும்.”

(கபீர்ஜி பிரபத்தி ராக்)

## இறை யொருமை

இறைவன் ஒருவனே என்ற கருத்தை குருநானக் பெரி தும் வற்புறுத்தினார். இறைவன் வடிவமில்லாதவன். இருந் தாலும், அவனுக்கு பெயரிட்டு நாம் வழங்க நினைத்தால் அவன் ‘உள்ளவன்’ என்று கூறவேண்டும். நானக் ‘சதி, என்று கூற லாம் என்கின்றார் சமஸ்கிருத சொல்லாகிய ‘சத்யம்’ என்ப தன் கருத்தையே ‘சதி’ என்ற சொல்லும், குறிக்கிறது. ஹிந்துக்கள் இறைவனைக் குறிக்கப் பயின்ற சொற்களில் பெரும்பாலானவற்றை நானக் அவர்களும் பயின்றுள்ளார்.

முஸ்லீம்கள் பயின்றனவும், யோகிகளும் பிறரும் பயின்றனவும் நானக் பாடல்களில் காணலாம். பிரமம், ஈஸ்வரன், இராமர், அல்லா கூடா அலக் (Alakh) கிருஷ்ணு போன்ற சொற்களை அவரது பாடல்களுள் நாம் பரக்கக் காணலாம். நானக் காலத்தில் வெவ்வேறு சமயத்தவர் பயின்ற சொற்களே வழக்கிலிருந்தன. அவரவர் தாம் தாம் பயின்ற சொற்களே தகுதி மிக்கவை என்று கூறினர். இவ்வாறு சமயத்தவரிடையே நேர்ந்த பூசலை நிறுத்த, நானக் அவர்கள் ஹிந்து இஸ்லாம் ஆகிய இருவரிடையேயும் பயின்று வந்த சொற்களைத் தாமும் பயின்றார், தமது நூல்களில் ஆண்டுள்ளார் நறுமணம் பரப்பும் மலரொன்றை நாம் எப்பெயர் கொண்டு அழைத்தாலும் அம்மலர் மணத்தைப் பரப்பும். பெயர்களிலுள்ள மாறுபாட்டால் மலர் மணம் பரப்புதலை ஒழியாது, இதேபோல, பரம்பொருளை எப்பெயர் கொண்டு அழைத்தாலும் அப்பொருளின் உண்மை மாறுபடாது. சதி என்ற சொல்லானது இறைவனது சீரிய இயல்பைப் புலப்படுத்துவதாகும். அவன் என்றுமுளன். அவன் இருந்தவன், இருப்பவன். மேலும் வருங்காலத்திலும் இருப்பான் என்பது பொருள். எச்சொல் அதனைப் பயிலும்போது நமக்கு அவனது உண்மைத் தன்மையாகிய, இருப்பை—உளதாகும் தன்மையை நினைவுபடுத்த வல்லதோ, அச்சொல்லே பயிலுதற்குரியது இவ்வாறு, இறைவன் உளதாகும் நிலையை குருநானக் பல இடங்களில் வற்புறுத்தியுள்ளார். நிலைபேறு என்பது இறைவனுக்குரிய சிறப்பு இயல்பாகும். கதிரவனும், சந்திரனும் பிற எண்ணிறந்த உடுக்களும் தத்தம் நெறியில் சென்று கொண்டிருக்கின்றன. இறைவனே எவ்வித மாற்றத்திற்கும் உட்படாது, அசையாது விளங்குகிறான். உண்மை என்றும் பழையதாதல் இல்லை. உள்ளத்தில் இவ்வுண்மை இடம் பெற்றுவிட்டால், இதனை மாற்ற இயலாது. இறையுண்மையை இடையறாது நினைக்க வேண்டும் என்று குருநானக் கூறுகிறார்.

கடந்த நிலையில் விளங்குகின்ற இறைவன் நம்பொருட்டு வெளிப்படுகிறான். அவன் படைக்கும் பிரபஞ்சத்தினுடே உள்ளார்ந்த நிலையில் விளங்குகிறான். படைப்பைக்கண்டு, வியந்து, பல இடங்களில் குருநானக் பாராட்டியுள்ளார், சீக்கியசமயம்

கடவுள் ஒருவரே என்பதை வற்புறுத்துகிறது. இறைவனது எண்ணிலடங்காது குணங்களையும், திருநாமங்களையும் விரித்து நானக் கூறுகிறார். குருகிரந்தத்தில் பரம்பொருளைப் பல பெயர்களால் வழங்கக் காண்கின்றோம். நானக் பரமேஸ்வரனை ஹிரி, இராமன், பிரபு, பகவான், கிஷன், பிரும்மா, கோவிந்தன், கோபாலன், கோசாயி, ஈசுவரன், மாதவன், முராரி, பரபிரும்மம் போன்ற பலவேறு சொற்களால் குறிக்கின்றார். இஸ்லாமிய சமயத்தில் வழக்கிலிருந்த சொற்களையும் பயன்படுத்துகிறார். அவை, அல்லா, கரீம், ரப், ரஹீம், ரஜாக் சாகிப் என்பவையாகும். அவர் பயின்ற பிறசொற்கள் மீது, பியாரா ப்ரீதம் வாஹ்குரு போன்றவை ஆகும். ஹிந்து சமயம், இறைவனை நிர்குணன் என்று வழங்கும் குணங்களை கடந்தவன் என்பது இச்சொல்லிற்குப் பொருள் பிரகிருதியின் மூன்று குணங்களாகிய சாத்துவிகம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்களையும் கடந்தவன். இறைவன் என்று பொருள்படும். ஆனால், குருநானக் இறைவனின் இருநிலைகளாகிய, நிர்குண, சகுண நிலைகளையும் ஏற்கிறார். சகுண நிலை குணங்களைக் குறிக்கும் இறைவனுக்குரிய எண்ணிறந்த நாமங்கள் அவனது குணங்களைக் குறிப்பன ஆகும் ஏக, ஓங்கார, அநேக, கர்த்தார, காலிக், கரண காரண, ஹுகமி, மூல, டேக், அதார, ஜகஜீவன பிராண தாதா, பிராணபதி, நிர்குண, சகுண, மாலிக, பரம ஜோத, ஆத்மா, சர்வஜோத. சர்வநிவாசி, நேரே, ஹிதே, நேரே, போகீ, அபோகீ, கலக. ஆபேஆப். ஸோஹம், தத் புக்த, நிர்லேப, நிரஞ்ஜன, அகம, அகாத, சத், சசு, புருஷ, அகால புருஷ, கமலநயன, மீர, ஷாஹன்ஷாஹ், நிராங்கார, அனில. அகாலமூரத், அஜுனி, அவிநாசி. அசல, அபேத, பரபூர, அச்சேத, நிராகார, லைபம், அமோலக, சாகர, தரிஆவ, ஆதி, அநாதி, பேஅந்த, ஏகோவேஷ, அகால, அதேச, சர்வவியாபி, குணநிதான, ஆனந்த, விநோதி, அமிருத, தீனதயாள, அநாத நாத, தயாள, தாதார, துக்க பஞ்சன, பதித பாவன, பக்தவத்சல, பாபா, பிதா, மாதா, கந்த, கஸம, பாயி, மித்ர, ஸதி ஆரா, ஸகா, பீரு, பியாரா, நிர்பய, நிர்வயிர, அபூல, அடோல, பவித்ர, புனித, தேவ, குரு, சந்தர, மனமோகன, ஸோஹன, ராஜா, பாதஷாஹ, ஸசபாதஷாஹ, சர்வலோஹ, டாகுர், அலேக, அகர்ம, அநாம

என்றன போன்ற எண்ணிறந்த நாமங்களில் இறைவனை வழுத்துகிருர். குருநானக் அவர்களது கருத்துப்படி பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் படைக்கப் பெற்ருேராவர். இவர் கள் இறைவன் ஆணையைப்பெற்று தத்தம் கடைமைகளை ஆற்றுகின்றனர். இவர்கள் அழிபவர்களே ஆவர். இறைவன் வடிவங்கொண்டு இவ்வுலகில் அவதாரம் செய்ததாக கூறும் புராணங்கள், கதைகள் யாவும் குருநானக் அவர்களால் புறக் கணிக்கப் பெறுகின்றன. கடிந்து ஒதுக்கப் பெறுகின்றன. சுருங்கச் சொல்லின் உருவ வழிபாடு, சடங்குகள் யாவும் சீக்கியத்தினின்று நீக்கப் பெறுகின்றன. இறைவனை இடை யருத அன்பினுலும், பக்தியினுலும், அடையலாம் என்பது அவரது சிறந்த கொள்கையாகும். இந்த பக்திக்கு இன்றி யமையாத நிலையில். வேண்டப் பெறுவது, இறைவனை அண் மையிலிருப்பவனுக, நெருங்கியிருப்பவனுக, விரும்பத்தக்க வனுகக் கருதுதலே ஆகும். கருதி பக்தியோடு இடையருது நினைத்தலாகும்.

### காலங் கடந்தவன் — இறைவன்

இறைவனை 'அகால்' என்று குறிப்பிடுகிருர். இச்சொல் லின் பொருள், காலங் கடந்தவன் என்பதாகும். காலக் கூறு கள், தோன்றி மறையும் பொருட்கட்குப் பொருந்துவன. இறைவன் என்றும் இருப்பவன்; இருந்தவன்; இருப்பவன்; வருங்காலத்திலும் விளங்குவான். என்றுமுள்ள தன்மை இறைவனுக்கு உரிய சிறப்பியல்பாகும். 'உள்ளவன்' என்றே குறித்து நானக் தமது இறைக்கொள்கையை விரிக்கின்ருர்.

### இறைவன் நடுவுநிலைமை பிறழாதவர் – நீதிமான்

குருநானக், நம்மை நோக்கி, தான் ஒரு வியப்பான செய் தியைக்கண்டதாகக் கூறுகிருர் இறைவன் செய்வனயாவும் நீதியாகவும், சமநிலையில் இருந்து ஆற்றுவனவாகவும் விளங் குகின்றன என்று கூறுகிருர். நேர்மையானவர், சத்தியத் தினின்று பிறழாதவர், இறைவனுல் கௌரவிக்கப்பெறுகின் றனர். இறைவன் தானே நீதியை நிருவகிப்பதால், பொய்யும் பிறவும் சூழ்ந்தவர் தண்டனைக்குள்ளாகிருர்கள். அவர்கட்கு

இறைவனின் நீதிசபையில் இடமில்லை என்று வஞ்சக வாழ்க்கையை மக்கள் அறவே ஒழிக்கவேண்டும் என்கிறார். படைத்தவனாகிய இறைவன் முழுமையாக நீதியைப் படைப்புயிர்கட்கு வழங்குகின்றான். நிகழ்வன அனைத்தும் நியதிக்குட்பட்டதாக விளங்குவதால் இறைவனின் புகழ் ஓங்கட்டும் என்று நானக் பாடியருளுகிறார். எல்லாம் நியதியின்படி, நிகழ்கின்ற காரணத்தால் நீதிக்கும், நேர்மைக்கும் உட்பட்டிருத்தால், நாம் குறை கூறுவதற்கு ஏதுமிலது. அவரவர் வினைக்கு ஏற்ற விளைவுகளைக் காணுகின்றனர். நல்லோரும், தீயோரும் அவரவர் ஆற்றிய வினைகட்கு ஏற்பவே, விளைவுகளை அனுபவிக்கின்றனர். நமது வாழ்க்கையில் நேரிடும் இன்பதுன்பங்கட்கு நாமே காரணம் என்பது குருநானக் கருத்தாகும்.

## இறைவனின் அன்பு

இறைவனின் உண்மையான இயல்புகளை நாம் உள்ளன்போடு நேசித்தால், உடலும், உள்ளமும் தூய்மை பெறுகின்றன. இவ்வாறு உண்மையான அன்பினின்று விளையும் செயலகள் புனிதமடைகின்றன. இறைவனது அன்பு இலதேல் எச்செயலும் புனிதமடையாது. இறைவனிடத்து ஒருவனுக்கு முறுகிய அன்பு அமையுமானால், அவன் சுவர்கத்திற்கும், மோட்சத்திற்கும் கவலைப்படமாட்டான். இறையைக் காண விரும்புவோர், வீடும்வேண்டா விறலினர் ஆவர். இறைக் காட்சியே அவர்களது மனத்தை நிரப்புகின்றது. வேறு எதிலும் அவர்களது சிந்தனை செல்வதில்லை. இறையிடத்துச் செலுத்தும் அன்பே தூயது, நிலைபேறானது. மீனுக்கு நீர்நிலை எவ்வாறு பழகிய, பிரிய இயலாத சூழ்நிலை ஆகுமோ, அதே போல் இறைவனுக்கு அன்பரது உள்ளம் இயல்பாக ஈர்க்கின்ற ஒன்றாகும். சிறுபொழுதளவும் நாம் இறைவனைவிட்டு, பிரிய இயலாது. பிரிந்தால் வாழ இயலாது என்று கூறித் தாம் இறையைப்பிரிய இயலாத தமது அன்பின் திறத்தைப் புலப்படுத்துகிறார். இறையின் பெருங் கருணைத்திறத்தால் தான் நாம் இன்பங்களை நுகர்கிறோம். ஆதலால், அவனிடத்து நமது அன்பை இடையறாது செலுத்துதல் வேண்டும். அல்லல்கள் பெருகும்போது இறைவனை நினைக்கின்றோம். ஆனால் இன்பமாக நாம் வாழ்கின்றபோது இறைவனை மறக்கின்றோம்

எப்போதும் இறைவனை மறத்தலாகாது என்பது குருநானக் கருத்தாகும். இறைவனின் அன்பாகிய, அமிர்தத்தைப் பருகியவன் மூப்பினின்றும் மரண பயத்தினின்றும் காக்கப் பெறுகின்றான். எவனொருவன் இறைவனின் புகழை ஓதுகின்றானோ ஓதக்கேட்கின்றானோ இறையினிடத்து அன்பை நாளும் வளர்த்துகொள்கின்றானோ அவனது துன்பங்கள் விரைந்து மறைகின்றன. அவனது மனத்தில் நிலைத்த அமைதி தோன்றும் என்பது குருநானக் கண்ட உண்மையாகும்.

## இறை-வழிபாடு

இறைவனின் புகழை இடையறாது ஓதி, வழிபடுதல் வேண்டும். அல்லும் பகலும் நம்தலைவனது நினைவு மாறாமல் இருக்கவேண்டும் எவனது உள்ளத்தில் இறைவனது நினைவன்றி பிறநினைவுகள் நீங்குகின்றனவோ, அவனே நிறைவுடையவனாவான் என்பது கபீர் கருத்தாகும். ஆதிகிரந்தத்தில் காணப்பெறுவது, இறைவழிபாட்டின் இன்றியமையாமையே, ஆகும். "நான் புனித யாத்திரை மேற்கொண்டு காபாவிற்குச் செல்லவில்லை; வழிபாட்டின் பொருட்டு, தீர்த்த யாத்திரை செல்லவில்லை. ஒரே இறைவனை வழிபடுகின்றேன்" என்பது நானக் கருத்தாகும். உண்மையான வழிபாடு இறைவனின் ஆணையின் வண்ணம் ஒழுகுதலாகும். இறையை வழிபடுதலால் நாம் வேண்டுவன அனைத்தும் பெறஇயலும். பிறரை வழிபடுதலால், வீணான முயற்சியில் தலைப்பட்டவராவோம். மேலுலகம். வேண்டிநின்றால் வழிபாட்டில் கருத்துச் சிதைவே ஏற்படும் அழுக்கேறிய உடைகளை துவைத்தாலன்றி அழுக்கு நீங்காது. இறைவனை அஞ்சி, வழிபாட்டால் நமது வாழ்க்கையைத் தயார்செய்து கொள்ளுவோமே ஆனால் தீமைகளெல்லாம் நீங்கும். எவனொருவனது தலை தலைவனைக்கண்டு வணங்கவில்லையோ, அத்தலையைக் கொய்துவிடலாம். இறைவனது புகழை நாவானது ஓதுமேல் இம்மையிலும், மறுமையிலும் நலம்பெறலாம். புகழே இறைவன் விரும்புவதாகும். அன்பில் நிலைத்து, இறைவனையே வழிபடுவோர், உண்மையில் ஊன்றுவர். பொருள்சேர் புகழைப்பரவுதலால், வாழ்க்கை ஆன்மநலம் எய்தும்.

## இறைவனுக்குத் தொண்டு உகத்தல்

இறைவனுக்குத் தொண்டு செய்வோன் ஆசீர்வதிக்கப் பெற்றவன் ஆவான். அருளைப்பெற்றவனுவான். நமது உழைப் பிற்கு ஏற்ற ஊதியம் தருபவன் இறைவன். நமது இதயத்தை அறிபவன் இறைவன். ஆதலால், இறைவனுக்குத் தொண்டு செய்க என்று நானக் பணிக்கின்றார்.

குளித்தற்குப் பல குளங்கள் உள; வழிப்படுவதற்குப் பல விக்ரகங்கள் உள. ஆனல் உண்மையான தொண்டி னல்தான் மனத்தில் அமைதி ஏற்படும் என்று கபீர் கூறு கிறார். இறைவனுக்குத் தொண்டு செய்யாவிடில்; 'திக்க'-பூனூல் அணிவதில் பயன் ஏதும் இலது. இறைத்தொண்டு புரிகின்ற ஒருவன் பெறுகின்ற மகிழ்ச்சி அவன் அரியணை ஏறினும் பெருன். நமக்கு இன்பம் நல்குகின்றவன் இறைவன். அவனுக்குத் தொண்டு செய்தலால், நாம் என் றென்றும் மகிழ்ச்சியாயிருப்போம். உண்மையான தலைவ னுக்கு நாம் தொண்டு செய்யாவிடில், மீண்டும் மீண்டும் வருந்த நேரிடும். பயன் நோக்காது தொண்டை மேற் கொள்பவன் தனது தலைவனை நேரில் காண இயலும். தன் முனைப்பு அற்ற தொண்டே, இறைவனுக்கு உகந்த தாகும். முனைப்பு நீங்குவதற்கு இறையை நாம் இடைய ருது நினைத்தல் வேண்டும்; தொண்டும், முனைப்பு நீங்க துணை செய்யும் வழிபாடு, தொண்டு ஆகிய இவ்விரண் டும் இறைவனின் ஆணைப்படி ஒழுகுதல் என்று பொருள்படும். இறைவனின் ஆணையை ஏற்று ஒழுகுபவன், எந்நாளும் இரந்து திரிய நேராது. கீழ்ப்படிதலால் சீரிய பண்புகளைத் தனது வாழ்வில் பதிந்துக்கொண்டவனுவான். ஆதலால் இறைத்தொண்டு வேண்டற்பாலது.

## குரு

குரு என்ற சொல் இந்தியாவில் பெரு வழக்காக உள்ளது. ஹிந்து சமயத்தில், இச்சொல்லிற்கு அமைந் துள்ள பொருள் வேறு. சீக்கியத்தில் வழங்கும் பொருள் வேறு. ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டுபவன், தெளிந்தவன்

குருவென்று நாம் கொள்கிறோம். பிராமணனை, சந்நியாசியை யோகியை, பள்ளி ஆசிரியரை நாம் குருவாக மதிக்கின்றோம். இவ்வழக்கு விரிந்த பொருள் குறித்து நிற்பதாகும். எரியும் விளக்கை அணைத்த பிறகு ஏற்படும் ஒவ்வாத மணம்போல, குரு என்ற சொல் பல பொருள்களில் உயர்ந்தோரையும், அல்லாதோரையும் ஒருங்கே குறிக்கின்றது என்று நானக் கூறுகின்றார். ஆதலால், பொருள் வரையறை செய்கின்றார். சீக்கியத்தில் குரு என்ற சொல் முழுமை பெற்ற, நிறைவான ஒருவரை, தீர்க்கதரிசியை, இறைவனின் தூதுவரைக் குறிப்பதாகும். இத்தகைய குருவினிடத்தில் இறையொளி நன்கு விளங்கும். இவர், இறையைப்போல, நிறைவானவரும், பாவமற்றவரும் ஆவார். குருநானக், 'ஓங்கார்' என்ற பகுதியில் வெளிப்படுத்தியுள்ளது போல, இறையின் அற்புதமான (நம்மனோர்க்கு மறைமையான) படைப்பின் உண்மைகள், படைத்தவனாகிய இறைக்குத் தெரியும். அல்லது குருவிற்குத் தெரியும். இதனால் குரு எத்தகைய ஏற்றம் பெற்றிருந்தார் என்பது புலனாகின்றது போலியான குருமார்களினின்று உண்மையானவர்களைப் பிரித்து அறிவதற்காகக் குருவைச் 'சத்குரு' என்று சீக்கியம் வழங்குகிறது. 'சத்' என்ற சொல் உண்மையைக் குறிக்கும். ஆதலால், 'சத்குரு' என்பது உண்மையான குருவை குறிக்கும். இத்தகைய சத்குரு, இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவார். இவர்கள் இறைவனால் இவ்வுலகிற்கு வந்தவர்கள்; மனித சமுதாயத்திற்கு இறையுண்மைகளை வெளிப்படுத்துதற் பொருட்டு, தோன்றியர்கள். இறைவன் குருவின் மூலம் தம்மை மிகவும் சிறந்த முறையில் வெளிப்படுத்திக்கொள்கிறான். சீக்கியத்தில் குரு வகிக்கின்ற இடம் கிறித்தவரிடையே கிறித்துபெருமான், பௌத்தரிடையே புத்த பெருமான் பெறுகின்ற இடத்தை ஒத்ததாகும். மக்கட் சமுதாயத்திற்கு அறிவு கொளுத்தி, தீநெறியினின்று மீட்டு, நன்னெறியில் நிலை நிறுத்துபவர் குருவாவர். ஆதிகிரந்தத்தில் குருநானக் அருளியுள்ளதுபோல குருவை எவரும் பார்க்கலாம், நெருங்கலாம். குருவின் உபதேசங்களைப் புரிந்து கொண்டாலன்றி, ஆன்மா தூய்மை அடையாது. இறைவனின் நாமம், உள்ளத்தில் ஊன்றாது.

சீக்கியத்தில் குரு என்ற சொல் இறைவனையும், பத்து குருமார்களையும, 'குரு கிரந்த்சாகெப்' என்ற திருநூலையும் உணர்த்துவதாகும். குரு எல்லாம் வல்லவர். குருவே, (வடிவமற்ற) இறைவனுவார். உயர்ந்தவர், எல்லையற்றவர். அவரது புகழை நாம் உரைக்க இயலாது. உண்மையான குரு, இறையை உணர்ந்தவர். குருவிற்குத் தொண்டு செய்தலால் இறையோடு ஒன்றலாம். குருவே நம்மை நன்னெறியில் நிறுத்துவோராவர். குருவின் வார்த்தையால், பிறவிப் பெருங்கடலை நீந்தலாம். துன்பங்கள் நீங்கும். குருவின் அருண்மொழி உள்ளத்தில் ஊன்றவேண்டும். ஒருவனது நாவானது, இறையன்பில் திளைக்கவேண்டும். உண்மையான குருவின்றி, எவரும் இறைவனை அடைந்திலர். குருவை, வருமுன் உரைப்போராக தீர்க்கதரிசியாக், சீக்கியம் கருதுகின்றது. இறையின் அருளைப் பூரணமாகப்பெற்றவர்களே தீர்க்கதரிசிகளாவர். இவர்கள் இவ்வுலகில் சில செயல்களைப்புரிவதன் பொருட்டு இறைவனுல் அனுப்பப்பெறுகின்றனர். இவ்வுலகில் வாழுங்காலத்தில், இவர்களிடம் தனித்த நடத்தைக்கூறுகளைக் காணலாம். சால்தான்பூரில் குருநானக் இறையருளைப் பெற்ருர். இக்காட்சி, புத்தர்பெருமான் போதி மரநிழலில் பெற்ற, தெளிவைப்போன்றது; நபிகள் நாயகம் கனவில் கண்ட தெளிவான காட்சியைப் போன்றதாகும்.

## விக்ரக வழிபாடு – மறுப்பு

என்றென்றும், காலங்கடந்த நிலையில் விளங்குகின்ற உள்பொருளாகிய இறைவனைத் தியானிப்போர் என்றென்றும் உளராவர். பிறந்து, இறந்து உழல்வோரை வழிபடுவோர், பொய்மையான நெறியைப் பின்பற்றுவோராவர். இறைவன் தன்னுண்மை உடையவன். ஹிந்துக்களில் பெரும்பாலோர், குருநானக் காலத்திலும், இன்றும் உலோகங்களால், கற்களால் செதுக்கப்பெற்ற உருவங்களை வழிபடுகின்றனர். விக்ரகங்கள், ஆலயங்களில் குறித்த சில சடங்குகளைச்செய்து பிரதிஷ்டை செய்யப்பெறுகின்றன. பின்னர் வழிபடப் பெறுகின்றன. குருநானக் கூறுவது " இறைவனைப் பிரதிஷ்டை செய்ய இயலாது, படைக்கவும், உருவமைக்

கவும் இயலாது. தூய்மையே வடிவான இறைவனை நாம் எவ்வாறு பிரதிஷ்டை செய்ய இயலும்? அவன் தன்னைத்தானே படைத்துக் கொண்டவனாவான். தன்னுண்மையுடையவன்.'' ஆதலால் இறைவனுக்கு உருவம் அமைப்பது வீணான முயற்சியாகும். முன்னர், குருநானக் அவதாரக் கொள்கையை மறுத்ததைக் குறித்துள்ளோம். இறைவன் பிறப்பதில்லை. அவனுக்குத் தந்தை, தாய் இல்லை. எவருக்கும் மகனாகப் பிறக்கவில்லை. அவனுக்கு வடிவம் இல்லை. எந்த வருணத்தையும் அவன் சேர்ந்தவனல்லன். பசி, தாகம் முதலியன அவனுக்குக் கிடையாது. அவன் என்றும் நிறைவுற்றவனாக விளங்குகிறான் என்று நன்கு விளக்கியுள்ளார்.

மனிதன் கல்லைத் தெய்வமென்கிறான். அவனை அக்கல்லோடு பிணைத்து கடலில் போட்டால், கல்லோடு அவனும் அழுந்தி விடுவான். இக்கல் நம்மை அக்கரையில் சேர்க்காது. கல்லைக் கடவுள் என்று நினைத்து வழிபடுவோன் வீணே முயல்கின்றான். அக்கல்லைப் பணிகின்றான், அவனது செயல்கள் பயனற்றன. உயிரற்ற பொருள்களையும், இடுகாட்டில் சமாதிகளையும் வழிபடுவோனும் வீணான முயற்சிகளில் ஈடுபடுவோன் ஆவான். இறையை மறந்து, விக்ரகங்களிடத்து அன்பைச் செலுத்துவோர் நரகம் புகுவர். இறைவன் தான் படைத்த மக்களிடையே நிலவுகின்றான். கற்களில் காணப்பெறான், ஒரு கல்லைத் தெய்வம் என்று மதிக்கின்றான். பிற கற்களைக் காலில் மிதிக்கின்றான். முன்னது கடவுளானால் பின்னதும் கடவுளாதல்வேண்டும், கற்கள் பேசமாட்டா; நீ விரும்புவதைத் தரவும் மாட்டா. உனது வழிபாடும் செயல்களும் வறிதே அமைகின்றன. ஒருவன் நீராடி, கல்லை வழிபடுகிறான். இறையிடத்து அன்பு இல்லாத நிலையில், அவனது புறநீராட்டால் உள்ளம் தூய்மை அடைதலில்லை.

## மும்மை—பிரம்மா, விஷ்ணு, சிவன்—மறுப்பு

குருநானக் இறையை நோக்கிக் கூறுவது, "நீ பிரம்மாவை, விஷ்ணுவை, சிவனை, பிற கடவுளரை, பல்வேறு தெய்வங்களைப் படைத்தாய். ஆவியாக இருந்து நீ படைத்தவற்றை அளந்தறிதல் இயலாது. எங்கும் நிறைந்த

இறை தனது பரப்பை அறியும். படைத்தனவற்றினின்று இறைவன் சேய்மையில் விளங்குவதுபோல் தோன்றினும், நெருங்கியே, அண்மையில் (பரம்பொருள்) விளங்குகிறது." (பிலவால் திதி. 4) பிறிதோரிடத்தில், பிரும்மா, விஷ்ணு, மகேசன் ஆகிய மூவரும் இறையிடத்து உள்ளனர். இறையே யாவற்றையும் செய்கின்றான் என்று விளக்கியுள்ளார். புரிந்துகொள்ள இயலாத, எல்லையற்ற பரம்பொருளின் வாயிலில் பிரும்மா, விஷ்ணு, சிவா ஆகிய மூவரும் காத்திருக்கின்றனர். இன்னும் எண்ணிலோர், இறையின் எல்லையைக் காண காத்திருக்கின்றனர். இறைவனின் ஆணையைப் பெற்றே பிரும்மா முதலியோர், தத்தம் கடமைகளை ஆற்றுகின்றனர்.

## தீமை

இறைவன் தூயோன். தூய்மையின் வடிவம் இறையாகும். இறையாண்டும் நீக்கமற நிறைந்துள்ளது. இந்நிலையில் உலகில் நாம் தீமையை ஏன் காண்கின்றோம்? தீமையின் தோற்றம் எவ்வாறு? சில பழைய சமயங்களாகிய யூத சமயம் போன்றது 'நன்மை' என்றும் 'தீமை' யென்றும் விளங்குவனவற்றை உருவமாக இரண்டு கடவுளர்களைப் படைத்தன. தீமையை உருவகப்படுத்தி 'சாத்தான்' என்று வழங்கின. இச்சாத்தானே மனிதனைத் தீநெறியிற் புகுத்துகின்றான். ஸொராஸ்டிரிய சமயமானது இரு அடிப்படையான ஆற்றல்கள், உளவென்றும், அவை நன்மை, தீமை ஆகியவை ஆகும் என்றும் கூறியுள்ளது. நன்மை, சார்ந்த ஆற்றல்கள், தீயனவற்றோடு இகலி நிற்கின்றன நன்மையானவற்றோடு நாம் சேர்ந்து, தீயனவற்றை அழித்து ஒழிக்க முற்படல் வேண்டும். நன்மையே இறுதியில் வெல்லும் என்பது ஸொராஸ்டிரிய சமயக் கொள்கையாகும் குருநானக் மேற்கண்ட கருத்துக்களில் எந்த ஒன்றையும் ஏற்கவில்லை. மாயையும், மோஹமும் இறைவனால் ஏற்படுத்தப்பெற்ற தடைகளாகும். நமது உடல் வலுவுள்ளதாக வேண்டுமென்றால், எதிர்த்துப் போராடியே வலுபெறுதல் வேண்டும். இதேபோல் ஆன்மாவும் ஆன்மீக வாழ்வில்

தடைகளை எதிர்த்துப் போராடியே முன்னேற வேண்டு மென்கிறார் நானக். இவ்வுலகை மல்யுத்தம் பயிலும் களம் என்று உருவகித்துக் கூறுகிறார். தீய ஆற்றல்களை எதிர்த்து, ஆற்றலை ஆன்மா பெற வேண்டும்... முற்றிலும் தீய இயல்புகள் நீங்கினாலன்றி, நாம், இறையை அறிய இயலாது. ஆதலால், தீமைக்கென்று ஒரு கடவுளையோ, சாத்தானையோ குருநானக் படைக்கவில்லை. தெய்வ நெருப்பினின்று வெளிப் பட்டதுதான் மனித ஆன்மா. இப்பொறி - மூலத்தினின்று பிரிந்த காரணத்தால் சில தீய ஆற்றல்கள் இதன்கண் தோன்றலாயின. இவற்றை அறவே போக்கி, தூய இறை யோடு ஒன்றுதல் வேண்டும்.

## இறையின் கலந்தநிலை: எங்கும் நிறைந்த நிலை

இறைவனின் கலந்தநிலையை, பிரபஞ்சத்தினூடே யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற நிலையை, மேலேகண்டோம். ஆனால், இன்று சமய உலகில் ' யாவும் இறையாக விளங்கு கின்றது ' என்று (Panthiesm) கொள்கின்ற கருத்தினின்று நானக் கொண்ட கருத்து மாறுபடுகின்றது. குருநானக் இறை வன், இப்பிரபஞ்சம் முழுமையும் நிறைந்து விளக்குகிறான் என்று கூறுகிறார். ஆனால் இவ்வுலகில் உள்ள ஒவ்வொருஅணு வும் இறைவனே என்று கூறவில்லை. அணுவெல்லாம் இறை வன் என்று அவர் கருதியிருப்பாரானால் விக்ரக வழிபாட்டை அவர் எதிர்த்து இருக்கமாட்டார், ஆன்மா இடையறவுபடாத தியானத்தால், இறையின் இருப்பை உணரமுடியும். குரு நானக் அவர்களே, தமது அனுபவத்தில் இறையுண்மையை உணர்ந்தார். நானக், இறை எங்கும் நிறைந்திருத்தலை உணர்ந்தால்தான் அவர் உறுதியுடன் இறையின் இருப்பை, நமக்கு வலியுறுத்தினார். குருநானக் அவர்கட்கு இறைக் கொள் கையானது. இவ்வுலகப் புதிர்களை விளக்குதற்பொருட்டுப் பயன்படுத்திய கருத்தமைவன்று. இறைவன் உளன், ஆன்மா தனது தனித்தன்மையை நீக்கி, இறையை உணரமுடியுமென் றார். இத்தனித்தன்மையே, நமக்கும் இறைக்குமிடையேயுள்ள குறுக்குச் சுவராகும், தடையாகும். இறைவனின் சித்தமறிந்து அவனது ஆணைகளை மேற்கொண்டு தொண்டுபுரியும் நிலையில் இறைவனை உணரமுடியும் என்பதே குருநானக் கருத்தாகும்.

## இறைவன் அளப்பரும் பெருமையன்

இறைவனது பெருமையைக் கேள்வியாலறிந்து அவன் பெரியவன், பெருமை சான்றவன் என்று பலரும் கூறுகின்றனர். இறைக்காட்சி பெற்றோரே, உண்மையில் அவனதுபெருமையை உணர்ந்தோராவர். மக்களுள் எவரும் இறையை மதித்தறிதல் இயலாது. இறையின் இயல்புகளை விரித்துரைத்தல் இயலாது. இறையின் பெருமையை, ஆழங்காண்டலரிது. அவர் நற்பண்புகளின் கடல் போன்றவன். இப்பண்புகளின் முழுப்பரப்பையும் எவரும் அறிந்திலர். சிந்தனையாளர் தமது சிந்தனைகளைப் பயன்படுத்தினர். மதிக்கமுற்பட்டோர் தத்தம் அளவு கோல்களைப் பயன்படுத்தினர்; தியானத்தில் தினந்தோறும் கற்றறிந்தோரும்; பிறரும் இறையின் பெருமையையறிய முயன்றனரே அன்றி, இறையின் பெருமையில் ஒரு சிறிதளவும் அறிந்து விரித்துரைத்தாரிலர்.

குருநானக் அழகிய உவமையை ஈண்டு கையாள்கிறார். இவ்வுவமை, இறைவனின் அளப்பரும் பெருமையினை நமக்கு உணர்த்துகிறது. இறைவனை, ஒரு பேராற்றிற்கு ஒப்பிடுகிறார்—பக்தனை ஒரு மச்சத்திற்கு உவமிக்கிறார். ஆற்றின் பரப்பினை அறிய, மீன் தான் வாழ்கின்ற ஆற்றை விட்டு வெளியே வருதல் வேண்டும். அப்போதுதான் ஆற்றின் நீளமும், அகலமும் அதற்குப் புலனாகும். ஆனால், மீன் வெளியே வந்தால் உயிர் வாழாது. மனிதன் இறைவனது பெருமையை அவன் உணர்த்தினாலன்றி உணர்தல் இயலாது.

இறைவன் ஒருவனே என்பது குருநானக் வற்புறுத்திய கருத்தாகும். இறை-ஒருமைக் கொள்கையருள் தலையாயவர் குருநான்க் ஆவார். இறை அல்லது பரம்பொருள் தனித்த நிலையுடையது என்பது அவர் கருத்து. இந்திய சமய, தத்துவ நூல்கள், 'ஓம்' என்ற சொல் கொண்டு தொடங்குகின்றன. இலக்கண நூலார், இச்சொல்லின் 'வேர்' யாது என்று கண்டு, இறைவன் நம்மைக் காப்பவன் என்று 'ஓம்' என்ற சொல் பொருள்படும் என்கின்றனர். யோகிகள், 'ஓம்' என்பது ஒலிகாரணம் என்பர்

ஓம் என்பது, இவ்வுலகு படைக்கப்பெற்றபோது பரம் பொருளினின்று தோன்றிய ஓசை அல்லது ஒலியை ஒத்தது என்று யோகிகள் கருதுகின்றனர். இறையினிடத்து எழுந்த ஒலி, ஓம். இவ்வொலியையே இறைக்கு ஏற்றி இறையையே 'ஓம்'என்று வழங்குவோராயினர். பிரம்மத்தைக் குறித்து நாம் சொல்லக் கூடியதெல்லாம், அது உள் பொருள் என்பதாகும். இறையின் இருப்பை, உளதாகும் தன்மையை பிரம்மம், புருஷ, ஓம் ஆகிய சொற்கள் (பரம் பொருளை) உணர்த்துவன. ஆன்மாவைப்பற்றிய அறிவு, அறிவாற்றலால் நூல்களின் பயிற்சியால், அறிய இயலாது, நுண்ணிய-நுழைபுலம்-அகக்காட்சி கொண்டே பெரியோர் பிரம்மத்தை அறிந்துள்ளனர் மனம் எல்லைக்குட்பட்டது. எல்லையிறந்த வொன்றை அறிதலில் மனம் இடர்ப்படுகிறது. உபநிடதங்கள், 'நேதி' 'நேதி' - 'இதுவன்று, இதுவன்று' என்று உரைக்கின்றன. ஒழிபளவையின் மூலம். நாம் புலன் களைக்கொண்டு அறிந்தனவற்றையெல்லா ம்நீக்கி பரம்பொருள் இதுவாகும் என்று ஒருவாறு அறிய முற்படுகிறோம். உவமை, உருவகம், குறியீடு ஆகிய எவையும், பரம்பொருளை உணர்த்தமாட்டா. குருநானக், தமது காலத்தில் வழக்கி லிருந்த புராண மரபுகளை ஏற்று, அவற்றிற்கு புதிய விளக்கம் தருகிறார். நால்வகை யுகங்களை நமது புராணங்கள் பேசுகின் றன. ஆதிகிரந்தத்தில் காண்பது:-

சத்ய-யுகத்தில், தேர் அல்லது இரதம், மனநிறைவாகும்; நேர்மை இரத்தத்தை ஓட்டுபவன் ஆவான்.

திரேதா யுகத்தில், புலனடக்கம்-இரதம் ஆகும், ஆற்றல்-இரதத்தை ஓட்டுபவன் ஆவான்.

துவாபர யுகத்தில், நோன்பு. த்வம், இரதம் ஆகும். தானம்-இரதத்தை ஓட்டுபவன் ஆவான்.

கலியுகத்தில், நெருப்பு எனும் இரதம் இறங்கியது. தீமை—இரதத்தை ஓட்டுபவன் ஆவான்.

ஆதிகிரந்தத்தில் காணப்பெறும் தக்னி ஓங்கார் என்ற பாடலில் பிரபஞ்சத்தின் படைப்பு கூறப்பெறுகிறது. ஓங்கார், முதலில், மும்மூர்த்திகளுள் ஒருவராகிய பிரும்மாவைப்

படைத்தது. பிரும்மா, வேதங்களை வெளிப்படுத்தினர். இவையே மூல, முதன்மையான திருநூல்களாகும். ஓங்காரத்தினின்று பெற்ற உள்ளொளியின் துணைகொண்டே, வேதங்களை பிரும்மா படைத்தார். இதையே 'ஓம்' குறிப்பதாயிற்று. ஆதலால், ஓம் என்பது பிரம்மத்தைக் குறித்தது முண்டக உபநிடத்தில், 'ஓம்' என்பது அழியாத ஆசை என்று குறிக்கக் காண்கிறோம். மேலும் அவ்வுபநிடதம் விளக்கி, இருந்தது, இருப்பது, இருக்கப்போவது, என்று கூறின். பரம்பொருள் என்றுமுள்ளது. அழியாதது, மாற்றங்கொள்ளாதது, இவ்வியல்புகளை வெளிப்படுத்த; 'ஓம்', 'புருஷ' என்ற சொற்களை வேதங்கள் பயன்படுத்தின. இவ்வழக்கு இன்றும் நம்மிடையே நிலவுவதை நாம் அறிகிறோம். உபநிடதங்களில் பரம்பொருளை 'பிரம்மம்' என்ற சொல்லைக்கொண்டே பெரிதும் உணர்த்தக் காணுகிறோம். பிரம்மம், ஆன்மா, ஆகிய இருசொற்களும் ஒரே பொருளுடையவை. புறஉலகை ஆராய்ந்து அடிப்படையை அறிகிறபோது, அதனை 'பிரம்மம்' என்றனர். அகவுலகை ஆராய்ந்து, அடிப்படையை அறியும்போது அதனை 'ஆன்மா' என்றனர். இவ்விரு சொற்களையும் மாறி மாறி வழங்கக் காண்கிறோம். பிரம்மம் என்பது, குணங்கடத்தது. இயல்புகள் இவை என்று கூற இயலாத நிலையில், நிர்குணன் என்று உபநிடதங்கள் குறித்தன. எல்லையற்ற பரம்பொருளை குணங்கள் இல்லாததை-பிரம்மம் என்று கூறின. 'ஓங்கார்' என்ற சொல்லாலும் உபநிடதம் குறிக்கக் காண்கிறோம். குணங்கடந்த பிரம்மம், நமது கருத்திற்கு அப்பாற்பட்டது. குணங்களைக்கொண்டே, மனிதன் கருதுதல் இயலும். ஆதலால், பரம்பொருளைக் குறிக்கும் சொற்கள் பல உபநிடதங்களில் வழக்கிற்கு வந்தன. இவற்றை நானக் அவர்களும் ஏற்றார். முன்னர் சகுணநிலையைக் குறிக்க நானக் பயின்ற பல்வேறு சொற்களின் பட்டியல் தரப்பெற்றது. கர்தர் (படைத்தோன் படைப்போன்) நிரஞ்சன் (தூயநிலை) பிரணவ் (இறவாதது, என்று உள்ளது) அந்தர்யாமி (உள்ளிருந்து யாவற்றையும் இயக்குபவன்) அக்ஷர (மாறுதது, அழியாதது) புருஷ (மேலானது கழிந்த, நிகழ்காலங்களில் உள்ளனவற்றின்மீது ஆட்சி செய்வது) ஆத்ம போன்ற சொற்களை, குருநானக் பயின்றுள்ளார். ஓங்கார் படைக்கும் நிலையில், யாவற்றையும்

படைத்தலோடு படைக்கப்பெற்றன அனைத்தையும் உட்படுத்தும்; கடந்தும், விளங்கும் இங்கே குறித்த கருத்துக்களையும் பிற உண்மைகளையும் ஒருங்கே ஒரு பாடல் நமக்குத் தெளிவாக்குகிறது.

"பிரும்மா, ஓங்காரத்தால் படைக்கப்பெற்ருர், ஓங்காரத்தினின்று, மலைகளும் யுகங்களும் தோன்றின.

ஓங்காரத்தின் உட்பொருளை உன்னி, மனித குலம் உயர்ந்தது,

ஓங்காரத்தின் தூய, புனித ஆற்றலால், இறைவனது அடியார்கள் விடுதலை பெற்றனர். வீடுபேறு அடைந்தனர்.

ஓங்காரத்தின் விளக்கத்தைக் கேளுங்கள்
ஓங்காரம் மூவுலகின் பிழிவு ஆகும்.

தெய்வ ஆற்றலால், உந்தப்பெற்று, இறைவனின் என்றுமுள்ள பெயரை—ராம், கோபால் என்று எழுதுங்கள்."

ஓங்காரத்தை 'அக்ஷர' என்று உபநிடதங்கள் கூறுகின்றன. இச்சொல், அழிவற்றது, அழிக்கவொண்ணாதது என்று பொருள் தரும்; இதை மூலநூல்கள் குறிப்பதுபோல, ஆதிகிரந்தமும், அசையாகவே குறிக்கின்றன.

ஐப்ஜியில், ஐந்தாவது பாடலில் குருநானக் கூறுவது: "இறைவனிடமிருந்து நாதமும், வேதமும் தோன்றின.

அவன் பிரபஞ்சம் முழுமையும் நிறைந்து விளங்குகின்ருன்.

இறைவன், சிவா, கோரக், பிரும்மா, பார்வதி—அகில உலகின் அன்னை ஆவார்.

இவ்வுண்மை உணர்தற்கரியது. உரைத்தற்கு மேலும் அரியதாகும்.

"எனது தலைவன் எனக்கு இவ்வுண்மையினைத் தெளிவுப்படுத்தியுள்ளான்; உள்ளொளியாக உணர்ந்தேன்."

அவனே படைப்புயிர்க்கெல்லாம் வழங்குகின்றவன். அவனை என்றும் மறவாதிருத்தல் வேண்டும்!!

சீக்கியத்தில் இறைவன் (பரம்பொருள்) நாமம், குரு ஆகிய இம்மூன்றும் அடிப்படையில் ஒன்றே. இவை தொழிற்படும்போது, தனித்தனியே தொழிற்படுகின்றன. இறைவன் கடந்த நிலையில் விளங்குகின்றவன்; அறியொணாதவன்; உருவமற்றவன். நாமம் இறைவனை நமக்கு உணர்த்துவது. குரு, இறைவன் நாமத்தைப் பக்தனுக்கு உணர்த்துகிறார். இம்மும்மையில் ஒருமையுண்டு. இறைவன் கருத்தியல்பானது. நாமம், பருமையானது. குரு, மனித வடிவில், நமக்கு இறையுண்மையை இறைவனது நாமத்தின் பெருமையை உணர்த்துவார். இம்மூன்றாவது குருநிலை, நாமத்தைவிட, பருமையானது இறையுண்மையை நமக்கு எளிதில் உணர்த்துவது.

## 'நாம்' - நாமம்

'நாம்'! – பெயர் என்று பொருள்படும். இது சமஸ்கிருதத்தில் 'நாமன்' என்று வழங்கும். இறைவனது பெயரை பல்வேறு குணநலன்களைக் குறிக்கும் சொற்களை நினைத்தல், தியானத்தல் ஆகிய செயல்களை இச்சொல் குறிப்பன. இவ்வாறு நினைத்தலும், தியானித்தலும் தூய்மை பெறுவதற்காகவே என்று கொள்ள வேண்டும். சில இடங்களில் ஆதிகிரந்தத்தில், இச்சொல் - நாம் - என்பது இறைவனைக் குறிக்கவும் பயன்படுத்தப்பெற்றுள்ளது. இறைவன் வெளிப்படுத்தியதை, புனித சொல்லைக் குறிக்கவும் குருநானக் 'நாம்' - என்ற சொல்லைப் பயின்றுள்ளார்.

இறைவன் உயர்வற உயர்ந்தோனாவான். அவன் புனிதன். அவன் நாமத்தை இடையறாது அல்லும் பகலும் நினைக்க வேண்டும். இறையின் புகழை ஓதுதல் வேண்டும். அவனது நாமங்கள் எண்ணிலடங்கா. கணநேரமேனும்

இறைவனை நினைப்பவர், என்றென்றும் வாழ்வர். மற்றை யோர் விதித்த முறைகளை எல்லாம் நீக்குக. இறை-நாமம் என்ற ஒரே மருந்தைக் கொள்க. பாவச் செயல்களால் தோன்றும் சுரம் நீங்கும்; அமைதி பெறுவாய். இறைவனின், நாமத்தை நினையாமல், ஒருவன் வாழ்வானுனல், அவன், கழுதையைப் போல்வான். கழுதை அழுக்கு நிறைந்த இடங்களில் திரியும்.

இறைவனின் நாமத்தை நினையாதவன், தற்கொலையில் ஈடுபடுவான். தலைவன் உயர்ந்தவன்! அவனது நிலையும் உயர்ந்ததாகும். அவனது நாமம் உயர்ந்த எல்லாவற்றுள் ளும் உயர்ந்ததாகும். உனது நாமத்தை இடையருது ஓது வோருக்கு நான் அடிமையாவேன். மணம் செய்து கொள் ளாமல், நிறைவுடைய வாழ்க்கை ஒன்றின் துணைகொண்டே இறைவனை அடைய இயலுமேல், ஏன் அவிகள் இறையை உணரவில்லை. கபீர், இக்கேள்வியைக் கேட்டு இறைவனது நாமத்தை நினையாவிடில், வீடுபேறு பெறலரிது என்கின்ருர். இறைவன், உனக்கு உணவும், உயிர்ப்பும் தந்தவன். அவனை மறத்தல் ஏனே! என்று நானக் கேட்கிருர். நாவி ஞல் இடையருது அவன் நாமத்தை ஓதினலன்றி பல பிறப்புக்கள் எடுக்க நேரிடும், துன்புற நேரிடும். நாமனை வரும். எளிய பணிவுள்ள பணியாட்களாவோம். இறை வனே நம்மைக் காத்தல் வேண்டும். நமக்குப் பெருந்தூண், காப்பு, இறைவனின் நாமமே ஆகும். எவனெருவன் உள்ளம் இறையின் நாமத்தால் நிறைந்து விளங்குகிறதோ, அவனே தூயோனுவான். ஆதலால், "இறையின் நாமத்தை நினைதல் உனக்குப் புனிதமான உயர்ந்த கடமையாகும்" என்று குருநானக் அறிவுறுத்துகிருர். நாமத்தை மறவாதவரையே இறைவன் ஏற்றுக்கொள்கிருன். இன்னல்கள் பல வந்து நம்மை அடும்பொழுது, உதவுவோரின்றி வருந்துகிறேம். நண்பர்கள், பகைவர்களாக மாறிய பின்னர், உறவினர் நம்மை புறக்கணித்த பின்னர், எவ்வித உதவியும் இல்லை என்று நாம் அறிந்த பின்னர் இறை-நாமத்தை நினைத்தால் எவ்வித துன்பமும் நம்மை அணுகாது. எவனெருவன் இடையருது இறைவனது நாமத்தை நினைக்கின்ருனே உள்ளன்போடு

முழுமனதுடன் நினைக்கின்றனோ அவனுக்கு மாயை அடிமையாகும். அம்மாயை அவனது ஏவல்வழி நிற்கும். தலைவனை மறந்தவர்கள், பரந்த மணற்பரப்பிலே, திரிந்து, மண்ணோடு, மண்ணாய் மடிவர்.

ஒருவன் அழகிய உடல் வாய்க்கப்பெறலாம். ஆனால் இறைவனது நாமத்தை நினையாத நிலையில், அவன் அழகற்றவனாவான் என்று கபீர் கூறுகின்றார்.

ஒருவன் அழகிய விலையுயர்ந்த ஆடைகளை அணியலாம் ஆனால், இறை-நாமத்தை மறப்பானானால் அவன் வயல்வெளியில், காக்கை, குருவிகளை ஓட்ட வைத்திருக்கும் பொம்மையைப் போல்வான். ஒருவனுக்கு நல்ல இல்லாள் வாய்க்கலாம்; மாளிகையில் குடியிருக்க நேரிடலாம். ஆனால் இறை நாமத்தை நினையாத நிலையில், அவன் வாழ்க்கையை இழந்தவனாவான். ஒருவன், புறக்கணிக்கப்பெற்ற பாழடைந்த குடிசையில் வாழலாம். அவனது ஆடையும் கந்தையாக இருக்கலாம். அவனுக்குப் பாரம்பரியம் என்று கூறத்தக்க, முன்னோர் தக்கவராக அமையாது போகலாம். பெயரும் புகழுமின்றி வறிதே திரியலாம். நண்பர்கள், உறவினர்கள் எவரும் இல்லாதிருக்கலாம். ஆனால் அவனது உள்ளம் இறைநாமத்தில் சூழ்ந்து, தோய்ந்து இருக்குமேல், அவன் இவ்வுலகில் மன்னன்போல்வான். இறைவனது நாமத்தை நினைத்தால், பாவங்கள் அனைத்தும், இப்பிறவியிலன்றி, முன்னர் அமைந்த பிறவிகளில் ஈட்டிய பாவங்களும் தொலைந்துபோகும். ஒரு தீப்பொறி, மரக்குவியலைத் தீய்த்து விடும். தலைவன்'உள்ளத்தில் இருப்பானேயானால், துன்பங்கள் யாவும் நீங்கும். இறையை நினையாதவர் அழுக்கில் புரளும் புழுக்களை ஒத்தவராவர். இறையின் புகழைப்பாடுவோன், இன்பத்தையும், துன்பத்தையும் சமமாக மதிப்பவன். இறையின் நாமம் நமது உள்ளத்தில் இல்லாவிடில் பெருஞ்செல்வம் ஈட்டியதால் யாது பயன்? மாயையின் வயப்பட்டு, அழிந்தொழிவோம். இறையின் நாமத்தை மறந்து மரபுவழி அமையும் சடங்குகளைச்செய்வோன் மீண்டும் மீண்டும் பிறப்புகட்கு உட்படுவான். நானக் கூறுவது:

"உண்மை நாமமே எனக்கு ஆதாரம்;
எனது உணவும் நீரும்"
எனது பசி எவ்வகையினதாயினும் தீர்க்கும்.
(நாமம்) நெஞ்சில் நிறையும்போது, எனது விருப்பங்கள் நிறைவேறுகின்றன.

எனக்கு அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன." இறைவனின் நாமமே, விலங்குலகைக் காக்கின்றது. நாமத்தால் பிரபஞ்சம் முழுமையுமே காக்கப்பெறுகின்றது.

தடாகத்திலுள்ள தாமரை, தட்பம் எய்தாதிருப்பதுபோல ஓடையில் உலாவும் நீர்க்கோழி, நனையாதிருப்பதுபோல, மனிதனும், உலகில் வாழ்ந்து, உலக இன்ப துன்பங்களால் தொடக்குறாது இருக்கவேண்டுமானால், மேலான தலைவனாகிய இறைவனின் திருநாமத்தைத் தியானித்தல்வேண்டும். இறைவன் நமக்கு மாறாத இன்ப அன்பு தரவேண்டும் என்றால்' (விடியற்காலை) பொழுது புலர்வதன்முன்னர் இறைவனின் நாமத்தை தியானித்தல்வேண்டும். நானக் மேலும் கூறுகிறார்: " உனது நாமத்தை நவின்று, யான் வாழ்கின்றேன், உன்னை மறந்து மடிகின்றேன், உனது நாமம் பயிலுதல் எத்துணை அருமையுடையது, இறைவனது நாமத்தின் சுவையை உணராத நாக்கு பயனற்ற பேச்சில் ஈடுபடுவதாகும். நம்மோடு (துணையாக) வருவது இறை நாமமே!

இறை-நாமத்தின் பெருமையினை நாம் உள்ளன்புடன் ஓதுதல்வேண்டும் இயந்திரம்போல, வாய் ஓத, மனம் வேறொன்றை நினைத்தல் தகாதது ஆகும். நாவினால் புகழை ஓதுதல்வேண்டும். செவிகளால் அவனது புகழைக் கேட்டல் வேண்டும். நமது உள்ளமும், உடலும் இறைக்கென்றே அர்ப்பணிக்கப் பெறல்வேண்டும், கணப்பொழுதும் வறிதே கழிக்காமல் இறையை நினைக்கவேண்டும். நாம் மேற்கொள்கின்ற செயல்களனைத்தும் இறைநினைவோடு அமைதல்வேண்டும். இறைநாமமே நமக்கு வைப்பு—நிதியாகும்.

மேலே கருதியன யாவும், இறை நாமத்தின் பெருமையை நமக்கு உணர்த்துவன. இறைவனின் நாமம், இறைக்குச் சம

மானது. நாமம், பெருமையுடையதாதலால், நாம் பற்றி உய்ய துணைசெய்வது ஆகும். நமது கருவி, கரணங்கள் யாவும், இறை-திருநாமத்தை நினைதலிலேயே பயன்படுத்தப்பெறுதல் வேண்டும். ஒரு அனுபூதிச்செல்வர் குறித்ததுபோல, நாம் வாழ்வதும், இயங்குவதும், எல்லாம் இறைநினைவிலே அமைய வேண்டும். (To live, move and have one's being in God) குருநானக் கண்ட இறைக்கொள்கையைச் சிறிது விரிவாகவே கண்டோம். குருநானக் காலத்திற்கு முன்னர் ஹிந்து சமயத்தில் தோன்றிய வேத, உபநிடதக் கருத்துக்கள் குருநானக்கால் ஏற்கப்பெற்றன. ஆனால், அவர் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப, இறைவனின் கலந்த நிலையை, சகுணநிலையை நன்கு எடுத்தியம்பினர், இறையொருமை வலியுறுத்தப்பெற்றது. பக்திநெறியே, சீக்கியம் என்று துணிந்து கூறலாம். ஆனால் ஏனைய பக்திநெறிகட்கும், சீக்கியத்திற்கும் உள்ள வேறுபாடுகளை மறத்தலாகாது. மற்ற பக்தி நெறிகளில், விக்ரஹ வழிபாடு இடம்பெறும். சீக்கியத்தில் விக்ரஹ வழிபாடு அறவே நீக்கப்பெற்றுள்ளது. மூடநம்பிக்கைகள் அனைத்தும் களைந்த நிலையில் சீக்கியம் உருவாகியுள்ளது. சமயத்தின் உயிர்ப்பு, உள்ளீடு, நன்கு சீக்கியத்தால் விளக்கம் பெறுகிறது எனல் வேண்டும். அகவாழ்வு, தூய்மை குறைந்ததாக இருக்குமேயானல், புறவழிபாட்டால் யாது பயன்? நமது உடல், கருவி கரணங்கள்யாவும் இறைவனுக்கென்றே அர்ப்பணிக்கப்பெறல் வேண்டும் இறைவனுக்குத் தொண்டுசெய்ய ஒருப்படவேண்டும். இன்னோரன்ன உண்மைகள், இப்பகுதியில் விளக்கப் பெற்றுள்ளன.

## குருநானக்—அநுபூதிச் செல்வர்

வேதகால ரிஷிகள் தொடங்கி இந்த நூற்றாண்டுவரை, பலப்பல அநுபூதிச்செல்வர்களை இந்த நாடு கண்டுள்ளது. அநுபூதிச்செல்வர் குறித்தவொரு காலத்தில், இடத்தில் தோன்றினும் அவர்கள் வழங்கிய நற்செய்தி அன்று பொருந்தியதுபோல, இன்றும் பொருந்துவதாகிறது. அவர்களது பாடல்களில் இன்றும் நாம் ஏற்கதக்க உண்மைகள் உள அவர்களது வாய்மொழிகளினூடே ஒற்றுமையைக் காண இயலும்.

அவர்களது உபதேசங்கள், அனுபவங்கள், மனித சமுதாயத்தின் பொதுச் சொத்தாகும். அநுபூதிச்செல்வர் அகில உலகில் எங்கும், எக்காலத்திலும் தோன்றியுள்ளனர். அவர்களது கருத்துக்கள் பொதுமை நோக்குடையவை, மேலும் அவர்கள் ஒத்தநிலையில் பல உண்மைகளை உரைத்துள்ளனர். அவர்கள் தாம்கண்ட உண்மைகளை வெளிப்படுத்திய மொழியும் ஒற்றுமையுடையதாகும். இவ்வாறு அமைந்துள்ள வாக்கியங்களை நற்செய்திகளை நாம் பயில்வதனுல், நம்முடைய உணர்வு, விரிவடைகின்றது. உபதேசங்களின் இன்றியமையாமை நன்கு புலப்படுகின்றது.

நானக், கற்றறிந்தவராவர். அவர் சில மொழிகள் அறிந்திருந்தார். அவர் முறையாகப் பள்ளிசென்று, ஆசிரியரை அடுத்து பயின்றிலர். ஆனல், இறையருளால் பல அரிய உண்மைகளை உள்ளுணர்விஞலே உணர்ந்தார். இவ்வாறு தாம் உணர்ந்தவற்றை, நாடெங்கும் சுற்றி பரப்பினர். சமத்துவம் சகோதரத்துவம், இறையுண்மை, மாருத பக்தி நேரிய ஒழுகலாறு போன்றவை, அவரது உபதேசங்களில் மிகச்சிறந்தவையாகும். இக்கருத்துக்களை, இவரது முன்ஞேர்-அருளாளர் உபதேசித்திருந்தாலும், இவர் உபதேசித்தகாலம், சிறப்பு வாய்ந்ததாகும். அவரது காலத்தில் மக்கள் சடங்குகளில் அழுந்திய பற்றுடையவராக விளங்கினர். சமயத்தின் உட்கிடையே மறந்திருந்தனர். இவ்வுண்மை ஹிந்து, இஸ்லாம் ஆகிய இரு சமயங்கட்கும் பொருந்துவதாகும். மேலும் ஹிந்துகளும், இஸ்லாமியரும் தம்முள் பொருது நின்றனர். ஒருவரையொருவர் வெறுத்தனர்; அழிக்கமுற்பட்டனர். முஸ்லீம்களில் சிலர் அரசு ஓச்சியவர், தமது அரசு பலத்தால்-ஹிந்துக்களைப் பழித்தனர். ஹிந்து ஆலயங்களை அழிக்கவும் முற்பட்டனர். ஹிந்து, முஸ்லீம் ஆகியோரிடைப் பிளவுநீக்க இணைக்கும் இயக்கம் அல்லது மனப்பாங்கு கபீர்காலந்தொடங்கி வளர்ந்து வந்தது. இவ்வியக்கம் குருநானக் காலத்தில் நிறைவு பெற்றதுஎன்று கூறவேண்டும். பல்வேறு முறைகளைப்பின்பற்றிய சாதுக்களோடு, நெருங்கிப்பழகி, அவர்களது உள்ளன்பையும் மதிப்பையும் நானக் பெற்ருர். பரம்பொருளை அறிவாற்றல் கொண்டோ, நூல்களைப் பயில்வதாலோ, மதிநுட்பத்தாலோ

அறியவொண்ணாது. நூல்களைப்படிப்பதால், இலக்கண நுட்பங்களை விவாதித்தலால், நாளொன்றிக்கு மும்முறை தொழுவதால், ஏது பயனும் விளையாது என்று ஆணித்தரமாக நானக் கூறுகிறார்.

இறைவன் உருவமற்றவன் என்பதை நானக் நன்கு வற்புறுத்துகிறார். இதன் காரணமாக, விக்ரக வழிபாட்டை எதிர்த்தார். உருவமற்றநிலை, கடந்தநிலையாகும். ஆனால், இறைவனின் கலந்தநிலையைப் பெரிதும் நானக் விரித்துப்பேசுகிறார். ஆதலால், நானக் இறையின் இருநிலைகளையும், கடந்த கலந்த நிலைகளை, ஏற்றார் எனல்வேண்டும். இறைவனது நாம மகிமையை மிகவும் சிறப்பாக எடுத்தோதியுள்ளார். மக்களை இறையின் பெருமையை உணருமாறு அறைகூவுகிறார். உணர்வதற்கு அவர் காட்டிய நெறி, இறைவனின் நாமத்தை இடையறாது ஓதுதலாகும். புகழைப் போற்றுதலாகும், நானக் அவர்கள் துணிவு மிக்கவர். அவரது துணிச்சல், உள்ளத்திலும், உடலிலும் நன்கு நிலைத்திருந்தது. அன்று, அவர்காலத்தில், நிலவிய சமயங்களுள் இரண்டு - ஹிந்துசமயம், இஸ்லாமிய சமயம் திருத்தம் பெற்றன. காலத்திற்கு ஏற்றநிலையில் நெறிப்படுத்தப்பெற்றன. ஒரு சமயம் ஆற்றல் சான்ற மொகலாய அரசர் பாபர் பஞ்சாப்மீது, (1521) படையெடுத்தார். நானக் சிறைபடுத்தப்பெற்றார். அவரைப் பாபர் முன்னர் நிறுத்தினர் அவர் சிறிதும் அஞ்சாது, உள்ளம் கலக்குறாது, மன்னனுக்கு அறிவுரை வழங்கினார்.

"நியாயமான தீர்ப்புகளை வழங்குங்கள்; தோற்றவரிடம் இரக்கம்காட்டுங்கள்: இறைவனை உண்மையாகத் தொழுங்கள்." இவ்வறிவுரையைக் கேட்ட மன்னன், வியப்பில் ஆழ்ந்தான். உடனே நானக் அவர்களை விடுதலை செய்யுமாறு பணித்தான். இந்நிகழ்ச்சி, நானக் கூறிய அறிவுரை. அவர் பொது மக்களின் நலனில் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றை நன்கு வெளிப்படுத்துகிறது. ஏழை, எளியவரிடத்தில், நானக் மிகுந்த கருணை காட்டினார். அவர்களிடையே பணிசெய்தார். அவர்களது நலனே அவரது குறிக்கோளாகும். துன்புற்றோருக்கு ஆறுதல் கூறுவதையே தமது கடமையாகக் கொண்டார். தூய, ஒளிசான்ற நல்வழியை வகுப்பதிலேயே கண்

னும் கருத்துமாய் இருந்தார். தாழ்ந்தவருக்கும், வழிதவறிய வர்கட்கும் இறையுண்மையை, பெருமையை எடுத்துச் சொன்னார். பாக்தாத் என்னும் இடத்தில், குருநானக் கூறியது, "மாந்தர்க்கு வழிகாட்டவே, நான் தோன்றியுள்ளேன். உட்பிரிவுகளனைத்தையும் நான் மறுத்தொதுக்கிறேன். இறைவன் ஒருவனே என்பது யான் அறிந்தது. அவ்விறைவனை நான் இந்நிலவுலகிலும், விண்ணிலும், அனைத்து திக்கிலும் அறிகிறேன்."

சீக்கிய சமயம், மற்றவர்கட்குத் தொண்டு செய்வதைக் கடமையாக வற்புறுத்துகிறது. இத்தொண்டின் மூலம்தான், நாம், மற்றவர்களிடம் கொண்டுள்ள அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்த இயலும். இத்தொண்டை, 'குருதுவாரங்கள்' நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன. சமத்துவம், சகோதரத்துவம், (தோழமை), அன்பு, என்பன சீக்கிய சமயத்தின் அடிப்படைகளாகும் இறைவனிடத்தில் தளராத நம்பிக்கை கொளல், எல்லோரையும், சமமாகக் கருதப் பழகுதல், என்ற இவ்வடிப்படையிலேயே நமது ஒழுகலாறு அமைய வேண்டும். ஒழுக்கம்தான், உயிர்நிலை. நேரிய ஒழுகலாற்றை நானக் பெரிதும் போற்றினர். மக்கள் போற்றி ஒழுகவேண்டும் என்பது நானக்கின் வேணவா. அனைவரையும் சமமாக நடத்துபவனே சமய நெறியில் நிற்பவன் ஆவான் என்பது நானக் கொண்ட உறுதியாகும். தெய்வ ஒருமை, மக்களிடையே தோழமை ஆகிய இவ்விரண்டும், நானக்கின் உபதேசங்களுள் தலையாயவை. மனித சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டே இறைவனை உணர முடியும் என்றார். அவ்வாறே அவரது ஒழுகலாறு அமைந்தது. அன்பின் மூலமே இறையை உணர முடியும் என்று வற்புறுத்தினர். நானக் உணர்த்திய சமயம், இதயத்தை, உள்ளத்தைப் பண்படுத்தி நன்னெறியில் உய்ப்பது; மூளையை வளம்படுத்துவதன்று. கருத்தியல்பான சிந்தனைகளை நெடிது ஆய்ந்து அவர் தனது காலத்தை வறிதே கழிக்கவில்லை. நம்பிக்கைகள் பல கொள்வதைவிட, நோக்குகளை நாம் காணுவதும், கடைபிடிப்பதும், மிகவும் தேவை என்று வலியுறுத்தினர். குறிக்கோள்களை வாயளவில் கொள்வதைவிட, அவற்றை ஏற்று, ஒல்லும் வகை,

ஓவாதே போற்றி ஒழுகுவதே சிறந்தது என்பது, நானக்கின் உட்கிடையாகும். மரபு பிறழாமல் ஒழுகுவதைவிட, காருண்ய மிக்கவராக நாம் விளங்குவது நன்று என்று கூறினர். நானக் பாடியருளியது: "இறையறிவு உனக்கு உணவாகட்டும்; காருண்யம் உனது பொருட்காப்போளுகட்டும் உயிர் தொறும் விளங்கும் குரல் உண்டிக்கு அழைக்கும் குரலாகட்டும்." நானக், இறைவனை ஒவ்வொரு மனிதரிடத்திலும் கண்டார். "சம்கதா பிரம்ம நிவாஸ" தம்முள்ளும், தமது சூழ்நிலையிலும் யாண்டும், தெய்வத்தின் இருப்பை, இறையின் உண்மையை அவர் உணர்ந்தார். இதன் காரணமாகவே அவர் சிறந்த மனிதாபிமானியாக, மனிதர் நலன்களில் நாட்ட மிக்கவராக விளங்கினர். இறை பற்றிய உறுதி, நானக் அவர்கட்கு, அறிவு கொண்டு ஆராய்ந்ததாலோ, சமய நூல்களை நுணுகிப் படித்ததாலோ புகழ் வாய்ந்த குருமார் களிடம் பாடம் பயின்றதாலோ, ஏற்படவில்லை.

நானக், ஷத்திரியனுக, ஹிந்துவாகப் பிறந்தார். ஆனல், அவரருளிய முதல் உபதேசம் "ஒருவன் ஹிந்துவுமல்லன்; முஸ்லீமும் அல்லன்" என்பதாகும். இவ்வுபதேசத்தின் பொருள் யாது? உண்மையான முஸ்லீமோ அல்லது உண்மை யான ஹிந்துவோ காண்டற்கரியவன் என்று பொருள் படலாம். பிறிதொரு பொருளும் கொள்வதற்கு இடமுண்டு. மனிதர்களை, இறைவனது மக்களை சமய அடிப்படையில் ஹிந்துவென்றும், முஸ்லீமென்றும் பிரித்தல் தவறு என்பதாகவும் மற்ருேர் கொள்ளலாம். மேலும் உண்மையான சமயநெறி நின்று ஒழுகுதல் வேண்டுமெனில், ஒருவன் ஹிந்துவாக அல்லது முஸ்லீமாக இருக்க வேண்டுமென்பது இல்லை. இறைவன் ஒருவன் உளன் என்று கொண்டு அவனை அடையும் நெறி நின்ருல் சாலும். சமயங்கள், மக்களை மென்மேலும் பிரித்து, அவர்களிடையே வேறுபாடுகளைப் பெரிதாக்கி, இகலி நிற்கின்ற நிலைக்குக் கொண்டு விடுகின்றன. மக்கள் பெரும்பாலும், புறத்தோற்றங்களையே கொண்டு, அவரவர் சமயங்களை முடிவு செய்கின்றனர். ஆதலால் குருநானக் மேற்கொண்ட உடை, இடத்திற் இடம் வேறுபட்டது சில சமயங்களில் முஸ்லீமைப்போல உடுத்தினர். வேறு சில சமயங்களில்

ஹிந்துவைப்போல உடுத்தினர். ஆனல் பொதுவாக அவரது உடையைக் கொண்டு, அவரை எளிதில் முஸ்லீமென்றோ ஹிந்துவென்றோ கருத இயலும். பலர் நானக் அவர்களை அணுகி, அவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்று கேட்டனர். அப்போது அவருக்கு தனது நிலையை விளக்குவதற்கு நல்லதொரு வாய்ப்பு கிட்டியது. சமய அடிப்படையில் மக்களைப் பாகுபடுத்தி, குறித்ததொரு சமயம் சார்ந்து ஒழுகுவோர் நேரிய நெறி நின்று ஒழுகுவோரென்றும், வேற்றுச் சமயம் சார்ந்து ஒழுகுவோர் அல்லாதாரென்றும் கொளல் தீது என்று உரைத்தார்.

ஈண்டு எழுகின்றகேள்வி யாதெனில், சமயங்களிடையே உண்மையான வேறுபாடுகள் உளவா? என்பதாகும். இதற்கு மறுமொழி கூறுவதுபோல் அமைந்துள்ளது அவரது உரைகள் தீர்க்கதரிசிகள், அவதாரங்கள் ஆகியவைகளின் மூலம் இறைவன் மக்களை நெறிப்படுத்துகிருன். வெவ்வேறு காலங்களில் தோன்றிய தீர்க்கதரிசிகளும், அவதாரங்களும் அவ்வக் காலச் சூழலிற்கு ஏற்ப உபதேசங்களைச் செய்தனர். இவற்றிடையே எவ்வாறு வேறுபாடு காணுவது இயலும்? இவ்வாறு நானக் கூறியதை ஏற்க, மக்கள் மனப்பக்குவமின்றி வாழ்ந்து வந்தனர். விடாப்பிடியாக தாம் தாம் மேற்கொண்டுள்ள சமயங்களே சரியானவை என்றுகூறியவர்கள், நானக் உபதேசத்தை ஏற்றல் அரிதாகும். ஆனல், இவர்களால் நானக்கிற்கு எவ்வித இடைஞ்சலும் நேரிடவில்லை. மக்கள் அனைவரும் சமமெனில், அவர்கள் ஒழுகும் சமயவொழுக்கமும், நேரிய ஒழுக்கமும், ஒன்றே ஆதல்வேண்டும். விக்ரக வழிபாட்டையும், பொருளற்ற சடங்குகளையும் நானக் மறுத்தார்.அவை அறிவிற்குப்பொருந்தி வருவனஅல்ல என்று கொண்டார். மனித குறிக்கோள்களை நிறைவேற்றும்வகையில் நானக் சில அடிப்படை உண்மைகளை வகுத்தார். அவற்றுள் ஒன்று, "உனது கடமையைச்செய், இறைவனது திருநாமத்தினை நினைவில்வைத்துச் செயற்படுக. உனது உணவினைப் பகிர்ந்து உண்க" என்பதாகும்.

நானக் வாரணசி, கயா, பூரி, போன்ற முக்கியமான நகரங்கட்கு யாத்திரை சென்றுர். முஸ்லீம் யாத்திரிகனைப்போல, உடுத்திக்கொண்டு, திருக்குரானை கையில் ஏந்தி, மெக்காச்

சென்றார். ஹிந்து சமயமோ, இஸ்லாமிய சமயமோ, அவருக்கு மன அமைதியை, நிறைவைத் தரவில்லை. அவர் கூறியது வருமாறு. "நான்கு வேதத்தையும் பயின்று பார்த்தேன். ஆனால், இவை இறைவனது முழுத்தன்மையை உணர்த்தில, இஸ்லாமியரது நான்கு நூல்களையும் பயின்று பார்த்தேன். ஆனால், இறைவனது தகுதியை, பெருமையை இவை விளக்கி சொல்கின்றில. ஆறுகள், நீரோடைகள் இவற்றின் அயலே வாழ்ந்தேன். அறுபத்து எட்டு புனித தலங்களில் நீராடினேன்" இவ்விரு சமயங்களும் மக்கள் போற்றி ஒழுகியநிலையும் அவருக்கு மனநிறைவு தந்தில, குறிப்பாக இருசமயத்தாரிடையேயும் விளங்கிய புரோகிதர்கள் தந்த விளக்கங்களும் அவர்களது வாழ்வும் சமய உண்மைகளை விளக்குவனவாக அமைந்தில புரோகிதரது வாழ்க்கையில் தூய்மை குறைவாக இருப்பதைக் கண்டார். அவர்கள் உள்ளொன்றுவைத்து, புறமொன்று வாழ்ந்தனர். உலக உடமைகளிலும், இன்பங்களிலும் அவர்களது நாட்டம் மிகுந்து இருந்தது. சமயநூல்களைப் பயின்றனரே அன்றி அவற்றின் உட்கிடையை உணர்ந்தாரிலர் இறைவன் ஒவ்வொருவரது இதயத்திலும் மறைய நின்றுளன் என்பதை உணர்ந்திலர். ஆகவே, புதியதொரு நெறியை நானக் வகுக்கலானர்.

நானக் கண்ட நெறி, அணுகியமுறையில் புதுமையானது. ஹிந்து, இஸ்லாமிய சமயங்களில் அடங்கியிருந்த இன்றியமையாத கூறுகளை இணைத்தார். அவர் ஹிந்து சமயக் கொள்கையாகிய மறுபிறப்புண்மையையும், மாயைக்கொள்கையையும் ஏற்றார். தெய்வத்தின் ஒருமையை இஸ்லாம் சமயம் மிகவும் வற்யுறுத்துவதால், அக்கருத்தை ஏற்றார். சீக்கிய சமயத்தின் உயிர்நாடியாக விளங்குவது இறையொருமைக் கொள்கையாகும் கரும நியாயத்தைவிட இறைவனது சித்தம் மேலானது என்பது இஸ்லாமியத்தின் கருத்தாகும். இக்கருத்தும் நானக் அவர்கட்கு உடன்பாடாகும். விக்ரக வழிபாட்டை நானக் வன்மையாகக் கண்டித்தார். இக்கண்டனம் இஸ்லாம் சமயத்தின் ஈர்ப்பால் விளைந்ததாகும். ஆனல், அவரது உருவமற்ற 'நிராங்கார்' என்னும் இறைக்கருத்து, இந்து சமயத்தில் நிலவிய பலவித கொள்கைட்கு இடமளித்தது. இறைவன் ஒரு

வனே! அவனது நாமமே உண்மையாகும் என்பது நானக்கின் தலையாய கருத்தாகும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நடுவராகக் குரு விளங்குகிருர் என்று கூறி குருவின் சிறப்பை வலியுறுத்திஞர். குருவின் உபதேசம் வேதமாகும். குருவே, சிவன், கோரக், விஷ்ணு, பிரம்மா, பார்வதி தந்தை தாயாக விளங்குகின்ருர். குருவின் துணையின்றி, எவரும் இறையை அறிய இயலாது. இறைவனை அவனது நாமத்தின் மூலம் அறிய இயலும். இறையும், நாமமும் ஒன்றேயாகும். இவ்வுண்மை வைணவரிடையே, சிறப்பாகப் போற்றப் பெறுகின்றது. வைணவ சமயத்தின் இந்த கருத்து நானக் அவர்களைப்பெரிதும் ஈர்த்தது, கபீர், நானக் போன்ருேர் இறைவனின் நாம மகிமையையும் அதை இடையருது ஓதுதலின் சிறப்பையும் நன்கு பரப்பியிருந்தனர். நானக் நன்கு பரவியிருந்த ஒன்றை ஏற்ருர். ஹிந்து சமயமும். இஸ்லாமும் ஒன்றிற்கொன்று துணை செய்வதாகும். இவை இணைந்த நிலையிலே முழுச்சமயம் என்று பெயர் பெறும்· இதன் காரணமாக நானக் இருசமயத்தாராலும் மதிக்கப்பெற்ருர். இறையுண்மையிலும், இறையொருமையிலும் நானக் அவர்கட்கு இருந்த உறுதிப்பாடு. நூல்களைக் கற்றறிந்தாலோ, நுணுகி ஆராய்ந்ததாலோ ஏற்பட்டதன்று. நானக்கிற்கு இவ்வுண்மையை இறைவன் வெளிப்படுத்திஞர் என்றே கொள்ள வேண்டும். இவர் பிறந்த சிலஆண்டுகள் கழிந்தபின்னர், தாம் குறித்தவொரு கடமையை நிறைவேற்ற பிறந்திருப்பதாக உள்ளுணர்வில் உணர்ந்திருந்தார். இவருக்கு மானிட உருவில் எவரும் குருவாக வாய்க்கவில்லை. குருமார்கட்கெல்லாம் குருவாக விளங்கும் ஹரியே, இவருக்கு குருவாக விளங்கிஞர். ஒருசமயம் கானகத்தில், தனித்திருந்து தியானம் செய்யும் போது, நானக் இறையுண்மையை உணர்ந்தார். மின்னல் போன்று, இவ்வுண்மை அவரது உள்ளத்தில் பளிச்சிட்டது. அவர் கானகத்தினின்று நாடு திரும்பியபிறகு, அவர் கூறியது ஹிந்து, முஸ்லீம் திருநூல்களைக் கடந்து விளங்குகின்றவன் இறைவன். ஹிந்து சமயமோ,இஸ்லாம் சமயமோ, இறைவனைப் பற்றி முடிவான உண்மைகளை உணர்த்திவிட்டன என்று கூற இயலாது. இறைவனை உணர்வதற்கு ஹிந்து,ஹிந்து மதத்தைக் கடக்கவேண்டும். முஸ்லீம் இஸ்லாம் சமயத்தைக் கடக்க

வேண்டும் என்பதாகும். கானகத்தில் நானக் பெற்ற ஒளி, அவரது உடல் முழுமையும் பரவியது. இதனால் இறைவனின் எல்லாம்வல்ல தன்மையும், எங்கும் நிறைந்த தன்மையும் அவருக்கு நன்கு புலப்பட்டன. பின்னர், இவர் வாணாள் முழுமையும், இறையின் உண்மையையும், பெருமையையும் தொடர்ந்து உணர்ந்தார். இறைவனின் இருப்பைஉணர்ந்தார். இவ்வுணர்வு தாம் பெற்றமைக்கு இறைக்கு எவ்வாறு நன்றியுரைப்பது என்று அறியாது திகைத்தார்.

இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்து விளங்குவதை நன்கு உணர்ந்தநிலையில் பல பாக்களில் இவ்வுணர்வை வெளிப்படுத்தினர். ஆதிகிரந்தத்தில், குருநானக் அவர்களது பாடல்கள் இறைவனது உள்ளார்ந்த நிலையை நன்கு விளக்குகின்றன.

"உன்னைப்புகழ்வோர் புகழ்கின்றனர்
ஆனால் உனது பெருமையினை உணர்கின்றிலர்
ஆறுகளும் ஓடைகளும் கடலில் கலக்குகின்றன
ஆனால் அவை கடலின் பரப்பை அறிகின்றில.

"கடலைப்போன்று பரந்துள்ள நாடுகள், மலையைப்போன்று குவிந்துள்ள செல்வம் ஆகியவை, இறைவனை மறவாத புழுவிற்கு சமமாகா"

"இறையின் நன்மை எல்லையிறந்தது – அவனது
புகழும் எல்லையிறந்தது ஆகும்.
அவனது செயல்கள், வெகுமதியாகத் தந்துள்ளான்
யாவும் எல்லை கடந்தவை ஆகும்
அவனது காட்சி, கேள்வி ஆகியவற்றிற்கு எல்லை ஏது?
அவனது உள்ளத்தின் ஆழத்தை அறிதல் இயலாது.
அவனது படைப்பிற்கும் எல்லை இலது.
... ... ... ... ... ... ... ... ... ... ...
நாம் கூறக்கூற, கூருதாவை எஞ்சி நிற்கும்."

ஜப்ஜி-23,24

"அளந்து, இத்துணையன் என்று கூற இயலாத அளவிற்கு நூல்களை நான் பயின்று, அந்நூல்களில் அடங்கியுள்ள கருத்துக்களில் நான் வல்லவனாக, தேர்ச்சியுடையவனாக விளங்கி,

காற்றின் வேகத்தோடு பேனு கொண்டு என்றும் வற்ருத மை கொண்டு, எழுத முற்பட்டாலும் இறைவனின் முழுப்பெரு மையை நான் உணர்த்த இயலாது. இறைவா! உனது மதிப்பு யாது என்றே, உனது நாமத்தின் பெருமை இத்தன்மைய தென்றே நான் கூற இயலாது."

(ஸ்ரீ. ராக். 14)

அளக்கலாகா பெருமையுடையவன் இறைவன் என்பதை யாண்டும் அனுபூதிச்செல்வர் உரைத்துள்ளதுபோன்று, குரு நானக் அவர்களும் உணர்ந்து உரைத்துள்ளார். இறைவனின் பெருமை அளவிடற்கரியது என்ற பேருண்மை, நூல்களின் பயிற்சியால், சிந்தனை திறத்தால் உணர்வதன்று. பெருமை யினை உணர்ந்தவரே அதன் அளன்பருந்தன்மையினைக் சுட் டுவர். இவ்வகையில் குருநானக், அளக்கலாகாப்பெருமையன் இறைவன் என்று எடுத்தியம்பியுள்ளது சிறந்த அநுபூதி யுண்மையாகும். இறைவன் அளவிடற்கரியவன் என்று கூறும் போது, குருநானக் அவர்களது எளிமை, தாழ்வெனும் தன்மை நமக்கு நன்கு புலப்படுகின்றது.

மனிதர் இறைவனிடத்து, இறைஞ்சி பிரார்த்தித்த பாடல் கள் எண்ணிலவாகும். எண்ணிறந்த திருநூல்கள் சமயந் தோறும் நமக்குச் சாட்சி வழங்குகின்றன. எண்ணிலடங்கா துறவிகளும், தூயோரும் இறைவனை நாடி அறிய முற்பட்டுள் ளனர். ஆயிரமாயிரம் பக்தர்கள் இறைவனது புகழை ஓதியுள் ளனர். உண்மையைப் போற்றியுள்ளனர். அவனது பெருங் கருணையை வியந்துள்ளனர். இந்நிலையில் நானக் தன்னைக் குறித்துக் கூறும்பொழுது தாம் சிறு புழுவென்றும் அவ்வகை யில், படைப்பின் பரப்பை, வியப்பை கூற இயலாது என்கிருர். இதனல் அவர் தன்னை மிகவும் தாழந்தவனுகக் கூறிக்கொள் கிருர். இத்தாழ்வெனும் தன்மை, இறையின் பெருமையை உணர்ந்தோர்க்கின்றி மற்றையோருக்கு அமைதல் இயலாது என்பது புலனுகின்றன. உபநிடதங்கள் இறையுண்மையை அவனது கடந்த நிலையை உணர்த்தும்போது, எதிர்மறைச் சொற்களையே பயன்படுத்தின. உபநிடதங்கள், 'நேதி' நேதி' என்ற வழக்கை-இதுவன்று, இதுவன்று, நமக்கு நன்ருகப் புலப்படுத்தியுள்ளது. நானக் அவர்கட்கு இறையுண்மை

யானது, எதிர்மறைச் சொற்களால் குறிக்கவேண்டுவதொன் றன்று. உடன்பாட்டு முறையிலேயே இறைவனைக்குறிக்க இயலும் என்பது அவர் கண்ட முடிவாகும். இவ்வாறு உடன் பாட்டு முகத்தான் இறையை உணர்த்தல் என்பது அனுபூதிச் செல்வர்கட்கே உரிய ஒன்றாகும். இறைவன் உளன், அவன் மனித உயிர்தோறும் விளங்குகின்றான் என்று அறுதியிட்டு கூறுகிறார். பிற அனுபூதிச்செல்வர்கள் அனைத்து உயிர்தோ றும் இறை விளங்குதலைக்கண்டனர். குருநானக் தாம் வாழ்ந்த காலத்தின் .தேவையையொட்டி, மக்கட் சமுதாயத்தில் இறை வனின் இருப்பை உணர்த்தினால் சாலும் என்று கருதியிருக்க லாம்.

இறைவன் வடிவமற்றவன்; காலங்கடந்தவன், நாமம் அற்றவன், அளப்பரும் பெருமை வாய்ந்தவன் என்னும் இவ் வியல்புகள் ஒருபுறம் வற்புறுத்தப்பெற்றாலும் அவன் உண் மையானவன்; உயிர்களை உள்நின்று இயக்குபவன், கருணை மிக்கவன், உயிர்கட்குத் தலைவன், துன்பங்களைக் களைபவன், நன்னெறியில் உயிர்களை உய்ப்பவன் என்று மற்றொருபுறம் நானக் கூறுவதால் அவரது இறையனுபவம் நமக்கு நன்கு விளங்குகின்றது.

வேதாந்திகளுள் அத்வைத நெறி நிற்போர் இறைவனது கடந்தநிலையையே பெரிதும் வற்புறுத்துவர். இறைவனின் கடந்தநிலையால் உயிர்கட்கு யாது பயன்? இறைவனின் கலந்த நிலையினால்தான் உயிர்கட்குப்பயன் உண்டு. ஆதலால் துன்பங்களனைத்தையும் நீக்குகின்றவன், நன்னெறியில் உயிர் களை நிறுத்துபவன் என்று கலந்த நிலையை நமக்கு நானக் விளக்கியுள்ளார். எல்லா உயிர்களையும் உள்ளிருந்து இயக் குபவன் என்ற உண்மை உபநிடதங்களால் குறிக்கப்பெற் றாலும் குருநானக் அவர்களால் சிறப்பாக எடுத்து ஓதப்பெறு கிறது. இவ்வுண்மையும் அவரது அனுபவத்தினின்று முகிழ்த்த ஒன்றாகும்.

இறைநெறியில் பணிவு மிகவும் இன்றியமையாதது. பக்தன், பணிந்து இறையிடம் யாதுபணி தான் புரிய வேண்டும் என்று இறைஞ்சி, இறைவனின் சித்தம் இவ்

வுலகில் நிறைவேறும் வகையில் பணிபுரிதல் வேண்டும். பணிவு ஒருவனது வாழ்க்கையில் அமைந்து விடுமேல், அவன் ஆரவாரச் செயல்களில் ஈடுபடான். நமது துன்பங்களில் பல, வீண்மையினுலும், செருக்கினுலும் நேர்வனவாகும். நானக் கூறுவது, "மனிதன் விலங்கு போல்வான்; அகந்தை யானது (அவனுக்கு) இறைச்சி விற்பனைக்காகக் கொலை செய்பவனை ஒத்ததாகும்." ஆகவே, அகந்தை ஒருவனை கொல்லும். இறையிடத்து உண்மையான அன்புடையவன் அகந்தை கொள்ளான். அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத் தாலன்றி, நாம் எல்லாம் வல்ல பரம்பொருளிடத்துச் சரண் புகுதல் இயலாது. இவ்வகந்தை நீங்கினுலன்றி, நம்மை இறையிடத்தினின்று பிரிக்கும் குறுக்குச் சுவரை நாம் தகர்த்தல் இயலாது.

இறையை அணுகுதலை நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அணுகுவதற்கு, அன்பு பூணுவதற்கு புனித யாத் திரை, தீர்த்தயாத்திரை, கடுந்தவம், வேள்விகள் முதலியன துணை நிற்கமாட்டா. இம்முறைகளைக் கொண்டு இறை யோடு உறவு கொள்ளல் இயலாது. உறவு அமையாவிடி னும், மன அமைதியேனும் ஏற்படுமா? என்ருல் ஐயமே! ஆன்மப்பசி தணிதலும் இல்லை என்று நானக் பல இடங் களில் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். உண்மையான வாழ்வு என்பது அகவாழ்வே என்பது நானக் கருத்தாகும், இறை யோடு கொள்கின்ற உறவும், அகநிலையினதே ஆகும். உல கிடையே வாழ்ந்து, உலகப் பற்றுகளில், ஈடுபாடின்றி, இறையையே நினைந்து, உருகி, வாழ்தல் இயலும் என்பது குருநானக் கண்ட உண்மையாகும். தாமரை, தடாகத்தில் மூழ்காது நிற்பதைப் போல, வாத்து, நீரில் நீந்தினுலும், தட்பமுருது இருத்தலைப் போல, ஒருவன் இவ்வுலக வாழ்வு வாழ்ந்து கொண்டே இறையுணர்வு கைவரப் பெறலாம்....

ஒழுகலாறு இறைவாழ்வினின்று முகிழ்த்தல்வேண்டும். இறையிடத்து இடையருது அன்பு அமையுமேல் சீரிய ஒழுக்கம் அமைதல் உறுதி. தன்னை முற்றிலும் இறைவ னிடத்து ஒப்புவித்து, ஒழுகுதலே, தலையாய அறம் என்று நானக் கூறுகிருர். தன் செயலற்று, யாவும் இறைவன்

செயலே என்று வாழ்வதே ஒழுக்கத்தின் இலக்கணம் என்று அவர் விரித்துக் கூறுகிருர். தலைவன் (இறைவன்) ஆணைப்படி, நடத்தலே, நமது தலையாய கடனாகும். "நற்செயல்கள் யாவும் மரம் போல்வதாகும்; இறைவனின் நாமம் அம்மரத்தின் கிளைகளாகும்; சமயம், பூக்களாகும்; இறையறிவு, அதன் பழம், பயனாகும்." (**ராக் பசந்**) என்ற கருத்தைக் காண்கிறோம். நற்பண்புகளே நம்மைக் கட்டுப் படுத்துவன; நல்லதும் தீதும் ஒருங்கே நம்மை பந்திப்பன என்ற கருத்து, ஹிந்து சமயத்தில் நிலவி வருகின்ற ஒன்ருகும். நானக் கூறுவது, நற்பண்புகளின் ஆட்சிக்கு நம்மை உட்படுத்திக் கொள்ள வேண்டும். கொண்டால் உண்மை யான மகிழ்ச்சி ஏற்படும் என்பதாகும். நற்பண்புகள் அமையாத வாழ்க்கையில் மகிழ்விற்கு இடமில்லை. நல்ல செயல்கட்கு நாம் அடிமையாதல் வேண்டும். நற்செயல்கள் நம்மீது ஆட்சி செலுத்தினலன்றி உண்மையான மகிழ்ச்சி அமையாது. (**ராக் கௌரி**) — என்ற பாடலில், நானக் நற்செயல்களை இறைவனேடு ஒற்றுமைபடுத்துகிருர். மேலும் நான்க், நற்செயல்களையே தாம் மணந்துள்ளதாகவும் கூறு கிருர். புனித வாழ்வின் அடிப்படை, நற்செயல்களேயாகும். மனநிறைவு, தூய உள்ளம், இரக்கம், பொறுமை, அறநெஞ் சம் ஆகிய நற்பண்புகள், நானக் அவர்களால், நூல் முழு மையும் எடுத்து இயம்பப்பெறுகின்றன. தீய பண்புகளை அறவே ஒதுக்கி நன்னெறியில் வாழத் தலைப்படல் வேண் டும் என்று பல இடங்களில் நானக் வற்புறுத்துகிருர், ஆகவே, ஆன்மீக முயற்சியில் ஈடுபடுவோன், நற்பண்புகளை யும், சீலத்தையும் போற்ற வேண்டும். பல இடங்களில், தீய பண்புகள், போலி ஒழுக்கம், வஞ்சகம் போன்றவற்றை நானக் கடிகின்ருர்.

பக்தி நெறியின் புறக்கூறுகளாகிய அருச்சனை, பூசை செய்தல், வந்தனை, வழிபடுதல் போன்றவை, குருநானக் அவர்களால், சிறப்பாகக் குறிக்கப்பெறுவதால் சீரிய குருவை அடுத்து இறைவனைப் பற்றிப் பேசக்கேட்டல். புகழை இடையருது ஓதுதல், பாடுதல், மறவாது போற்றுதல் இறைக்குத் தொண்டு உகத்தல், நேசம் கொள்ளுதல்,

தன்னையே அர்ப்பணித்தல், போன்றவை வற்புறுத்தப் பெறுகின்றன. நல்ல மனைவி, தனது கணவனிடத்துக் கொள்ளும் அன்பைப்போல, பக்தன், இறைவனிடத்துக் கொள்ள வேண்டும். ஆன்மாவின் தீர்க்க முடியாத நோய், இறைவனை மறத்தல் ஆகும். கண நேரங்கூட மறந்தறியாதவன் போற்றுதற்குரியவன். இறைவனை நினையாத வாழ்வு, வறிதே, வீணே கழிகின்றது என்பது, நானக் கருத்தாகும். நானக், தம்மை இறைவனது அடியார்களது அடியவன் என்று கூறிக்கொள்கிறார். இது நானக் அடியவரிடத்துக் கொண்டிருந்த அன்பைப் புலப்படுத்துவதோடு அவரது பணிவையும் நன்கு வெளிப்படுத்துகிறது. நட்பு, நட்பு கொண்டோரை, இறுகப் பிணிக்கின்றது. இறைவனை நண்பனாக, தோழனாகக் கொள்கின்றபோது இந்நெருக்கம் தோன்றுகிறது. "இறைவனைப் போன்றதொரு சீரிய நண்பனை நான் கண்டிலேன்," பெற்றிலேன். என்பது நானக் வாக்காகும்.

உலகெங்கணும், அநுபூதிச் செல்வர்கள், மேற்கண்ட அநுபூதி நெறிகளைக் கைகொண்டுள்ளனர். ஆண்டான்-அடிமை, தோழமை, தந்தை-மகன் உறவு, நாயகன்-நாயகி உறவு போன்ற நெறிகள், அநுபூதிச் செல்வர்களால் பயிலப்பெற்றுள்ளன. இந்நெறிகளுள், நாயகி-நாயக முறை, அநுபூதிச் செல்வர்களால், பெருவழக்காகக் கொள்ளப்பெற்றது. நானக் பாடல்களில், கீழ்வருவனவற்றைக் காணலாம்.

மகளிர், சந்தனம், குங்குமம் தலையில் வகிர்தலுக்காக சிவப்பு ஈயம் போன்றவற்றை வாங்குகின்றனர்.

மேலும், வெற்றிலை, கற்பூரம் போன்றவற்றை பெருமனவில் வாங்குகின்றனர்.

இவற்றை வாங்கினாலும், மகள் தனது மணாளனை மகிழ்விக்காவிடில், அவள் ஆயத்தமெல்லாம் பயனற்றன; அவளது மகிழ்ச்சியெல்லாம் வீண்; அவளது அலங்காரமெல்லாம் வறிதே மேற்கொள்ளப்பெற்றனவாகும். (அவளது மணாளனுக்கு உகந்த வகையில் ஒழுகாவிடில்) (**மெக்காலிப் 1. ப. 263**) இறைவனைத் தனது நாயகனாகக் கொண்ட மகள்

அழகுடையவளாவாள். (மெக். 1. ப. 269) அவளது கொழுநன் இன்பத்தின் நிலைக்களம்; என்றும் இளையன் உண்மையானவன். அவன் பிறப்பு இறப்பில்லாதவன். அவன் என்றென்றும், தனது கற்பு மிகுந்த மனைவியொடு மகிழ்ந்திருப்பான்; அவள், கீழ்படியும்போது உண்மையான பார்வையை அவன், அவள் மீது செலுத்துகின்றான். கூந்தலை வகிர்தலுக்காக உண்மையைப் பயன்படுத்துகிறாள்; அவளது தூய அன்பையே அணி, ஆடைவகைகளாகக் கொள்கிறாள்.

இறைவன் உள்ளத்தில் இடையறாது இருத்தலையே இறைவனிடத்து மாறாத அன்பு செலுத்துதலையே சந்தன மாகக் கொள்கிறாள்.

இறையின் திருவார்த்தையே, ஒளிவிளக்காகக் கொள் கிறாள். இறைவன் திருநாமத்தையே, (தான்) கழுத்திற்கு அணியாகக் கொள்கிறாள்.

அவள் அன்பையே நெற்றித் திலகமாகக் கருதுகிறாள். அவள் மகளிருள் அழகியவளாகத் திகழ்கிறாள். அவளது அழகும், ஞானமும், நம்மை ஈர்ப்பனவாகும்.

அவளது எல்லையற்ற அன்பு, உண்மையாகும். அவள் தனது மணாளனையன்றி வேறு எவரையும் அறியாள்.

(மெக்காலிப் 1. பக்கம். 268)

இளைய மணமகளாகிய இவளுக்கு இரவு துன்பத்தைத் தருகிறது. அவள் துணையின்றி, அவனுக்குத் துயில் கொள்வதரிதாகிறது.

அவன் இல்லாதபோது, துன்பத்தால் வாடுகிறாள் அணிவகைகள், சுவையான உணவு, புலனின்பங்கள், யாவும் அவளுக்கு (அவனில்லாதபோது) வீணாக அமைந்துள்ளன போல் தோன்றுகின்றன. அவற்றை அவள் பொருட்படுத்த வில்லை. (மெக்காலிப் 1. பக்கங்கள் 302-3)

எனது தோழிகள் என்னைச் சந்தித்து, எனது திருமணத் திற்கு ஏற்பாடு செய்தனர்.

இவ்விளையாட்டை நான் பார்த்தபோது எனது உள்ளம் மகிழ்ந்தது. மணமகன் என்னை மணக்க முன் வந்தான்.

மகளிரே, மணப்பாடலை விவேகத்துடனும், ஞானத்துடனும் பாடுங்கள்.

இவ்வுலக வாழ்வு, எனது இல்லத்திற்கு மணமகன் வடிவில் வந்துள்ளது.

எனது திருமணம், எனது குருவின் மூலம் ஏற்பாடு செய்யப்பெற்றதால், எனது கொழுநனைக் கண்ட அளவில் நான் இன்னாரென்று தெரிந்துகொண்டேன்.

அவரது வார்த்தை மூவுலகையும் நிரப்புகிறது. எனது அகந்தை அகன்றபோது, எனது உள்ளமும் மகிழ்ந்தது.

**(மெக்கா. 1. பக்கம். 306)**

மணமகனை அணைக்காத கையைத் தீக்கிரையாக்குங்கள்.

**(மெக்கா. 1. பக்கம் 327)**

உண்மையான இறைவனை நேசித்தால், எல்லாக் காலங்களும், நல்லனவே, உகந்தனவே ஆகும்.

**(மெக்கா. 1. பக்கம். 361-3)**

மேற்கண்ட பாடல்கள், நாயகி-நாயக பாவனையில் பாடப்பெற்றனவாகும். இவ்வாறு ஆன்மா தன்னை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் கருதுவது அநுபூதிச் செல்வர் அனைவரும் கொள்வதேயாகும். குருநானக் இந்நெறிக்கு விலக்காகார். பக்தி நெறியின் சிறப்பியல்புகள் அனைத்தும் சீக்கியரிடத்தில் விளங்கக் காண்கிறோம். ஆனால் சில பக்தி நெறிகளில் மூட நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இறையொருமை உறுதியான அடிப்படையாக அமைகின்றது. இறையுண்மையை, உள்ளுணர்வில் உணர்ந்தாலல்லது, பயனின்று என்பதும் வலியுறுத்தப்பெற்றுள்ளது. இறையுண்மை, நானக் அவர்கட்கு, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்கியது. அநுபூதிச் செல்வர், தாம் உண்பதும், உயிர்ப்பதும், வாழ்வதும் இறையிடத்தே என்பர். குருநானக் அவர்களும் இறையைச் சிறுபொழுதும் மறவாத பெருவாழ்வு வாழ்ந்த அநுபூதிச் செல்வராவர்.

## குருநானக் இருபெரும் சமயங்களின் இணைப்பாளர்

குருநானக் ஐந்நூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர். இன்று அவரது பெருமையை நாம் நடுவு நிலைமையினின்று பிறழாது அறிதற்கு இயலும். அவர் வாழ்ந்த காலத்திற்கும், நமது காலத்திற்கும் இடையே நேர்ந்த மாறுபாடுகள் பலப்பல. அவர் வாழ்ந்த சூழ்நிலையும் வேறு, நாம் இன்று வாழும் சூழ்நிலையும் வேறு. ஆதலால், அவர் ஆற்றிய தொண்டினை நாம் நன்கு உணர்தற்கு இயலும். அவர் வகுத்த கொள்கைகளைச் சார்பின்றி சரியான நோக்கைக் கொண்டு அறிதற்கு இயலும்.

இந்திய வரலாற்றில் நாம் பல பெரியார்களை அடுத்தடுத்துக் காண்கிறோம். இப்பெரியார்கள் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள். மனு, சட்டங்களை வகுத்தார்; வேத வியாசர், சிறந்த ஒரு இதிகாச-கவியாவர்; புத்தர் தெளிவு பெற்றவர்; அறிவுக் கூர்மை மிக்கவராக சங்கரர் விளங்கினர்; பின்னே, 15ம் நூற்றூண்டில், குருநானக் தோன்றி, ஹிந்து மதம், இஸ்லாமிய மதம் ஆகிய இரண்டு மதங்களின் குறைகளைக் களைந்து நிறைகளை இணைத்துப் புதியதொரு சமயம்-சீக்கியம், நிறுவினர், நமது இந்திய சமய தத்துவ மரபுகளை நோக்க, குருநானக் புதியதாக எதையும் சொல்லவில்லை. ஆனல், காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப தொன்று தொட்டு நிலவி வருகின்ற உண்மைகளைத் தெளிவுபடுத்தினர்; சில பழக்கங்களை வன்மையாகக் கண்டித்தார்; சில சாதனைகளை வற்புறுத்தினர். இவ்வாறு, குருநானக் அவர்கட்கு இருபெருஞ் சமயங்களினின்று இணைக்கத் தக்க கூறுகளை இணைத்த பெருமை என்றும் உண்டு. வரலாற்றுப் புகழ் படைத்த சில ஆசிரியர்களே நமது நாட்டு மக்களது மனத்தினை ஈர்த்து, செயற்படுத்துகின்ற திறமை உடையவராவர். இத்தகைய திறன் மிக்கவர்களே, புதிய சமயத்தை வகுக்கின்ற நிலைக்கு உயர்ந்தப்பெறுவர். இப்புதிய சமயமாகிய சீக்கியம் இணைப்பின் அடிப்படையில் தோன்றியது.

ஹிந்து, சமயம், தனியொருவரால் நிறுவப்பெற்றதன்று. பௌத்தம், சமணம், கிறித்தவம். இஸ்லாம் போன்ற சமயங்களை நிறுவிய பெரியவர்களை நாம் அறிவோம். ஹிந்து

சமயத்தின் *பேருண்மைகள், நெடுங்காலமாக நின்று நிலவி வருவனவாகும். இதனாலன்றோ, ஹிந்து சமயத்தை 'சனாதன தருமம்' என்று வழங்குகின்றோம். ஹிந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளினின்று வேறுபட்டவர்கள் கூட, உபநிடத உண்மைகளை ஏற்று தமது கொள்கைகளை விரிவு படுத்தியுள்ளனர். ஹிந்து சமயம், காலந்தோறும் மாறுதல் கட்கு உட்பட்டு வந்துள்ளது. ஆனால் அடிநிலையுண்மைகள் மாற்றம் கொள்ளவில்லை. ஹிந்து சமயம் வளர்ந்து வருகின்ற நிலையில், புறத்தே சில வேண்டாதனவும் தோன்றுவ துண்டு இத்தகைய களைகளைக் களைந்து, இச்சமயத்தைப் புத்துயிர் பெறுமாறு பலர் செய்துள்ளனர்; ஆதலால், இன்றும் இச்சமயம் நம்மிடை வாழ்கின்ற ஒன்று ஆகும்.

இஸ்லாம், அராபிய நாட்டில், தோன்றியது. குருநானக் தோன்றுவதற்கு ஆறு நூற்றாண்டுகட்கு முன்னர், இஸ்லாம் 'சிந்து' என்னும் பகுதியில் வியாபாரம் காரணமாக—பரவி யது. பதினோராம் நூற்றாண்டில்தான், ஆப்கானிஸ்தான் நாட்டினின்று, வடமேற்கு கணவாய்களின் மூலம், இஸ்லா மிய மன்னர்கள், நமது நாட்டின்மீது படையெடுத்தபோது தான், இஸ்லாம், ஹிந்து சமயத்தினோடு தொடர்புகொண்டு, ஊறு விளைக்க தொடங்கியது. இந்திய நாட்டில், அரசி யல், சமயம் ஆகிய இவ்விரு துறைகளிலும் ஒற்றுமையானது குலைய தொடங்கியது. கஜினி, கோரி மன்னர்களது படை யெடுப்புகளால் ஹிந்துமதம் தாக்குண்டது. பல இஸ்லாமிய மன்னர்கள் டில்லியினின்று ஆட்சி செய்தனர். அவர்கள், இந்நாட்டு மக்கள், தம்சமயத்தை தழுவவேண்டும் என்று கட் டாயப்படுத்தினர். வடஇந்தியா, போர்களமாகியது. இரா ஜஸ்தான், மத்திய இந்தியா—பகுதிகளில் வாழ்ந்த வீரஞ்செ றிந்தவர்கள் இஸ்லாமிய போர்வீரர்களோடு போர் புரிந் தனர். இப்பகுதிகளில் வாழ்ந்தவர்களில் பலர் வெற்றி கண் டனர். இஸ்லாமியர்களில் பலர், வலுவிழுந்தவர்களாயிருந் தனர். கொடுங்கோலர்களாக விளங்கினர்.

இஸ்லாமிய சமயம் நமது நாட்டில் பரவியபொழுது, விளைந்த மாற்றங்கள் பல திறத்தன. இவற்றுள் சிலவற்றை ஈண்டு குறித்தல் பொருத்தமாகும். வங்கநாட்டில், சைதன்யர்

ஓர் அநுபூதிநெறியை வகுத்தார். அவர் சாதிபாகுபாடு களால் விளைந்த ஏற்றதாழ்வுகளை எதிர்த்தார். தென்னிந்தியாவில் இராமானுஜரும், வல்லபரும், பக்தி நெறியைப் பெரிதும் தழுவினர். இந்நெறி இறையினிடத்து முற்றிலும் சரண் புகுதலை வற்புறுத்தியது. இராமானந்தர், சமயங்களிடையே ஒற்றுமை நிலவுவதை எடுத்துக்கூறினர், பரப்பினர். இவர்களுள் எல்லாம் தலையாயவர் என்று குறிக்கத்தக்கவர் கபீர் ஆவர். இவர் நெசவுசெய்து வாழ்க்கையை நடத்தியவர். கல்வி கேள்விகளில் சிறந்தவரல்லர். இஸ்லாம் சமயத்தைச்சார்ந்தவர். ஆனால், இராம்-இரஹீம் என்ற இருசொற்களும் ஒரே தெய்வத்தைக்குறிப்பன என்று கொண்டார். ஹிந்து, இஸ்லாம் சமயங்கள் அவர்கள் காலத்தில் சமயவெறியோடு விளங்கின இவ்விரண்டும் பிடிவாதமான போக்குடையனவாகக் காணப்பெற்றது. ஹிந்து மதம் விரிந்த மனப்பாங்குடையது. இரக்கத்தைப் பெரிதும் வலியுறுத்தியது என்றாலும் வடமேற்கிலிருந்து வந்து புதியதாகப் பரவிய இஸ்லாமிய கொள்கைகள் நிலவியபோது, இச்சமயம் குறுகிய மனப்பான்மை உடையதாகவும், சிறிதும் மாற்றங்கட்கு இடந்தராததாகவும், புறநிலைச் சடங்குகளையே வற்புறுத்துவதாகவும், மாற்றம் கொண்டது. இஸ்லாமிய சமயம், மக்கள் மனத்தினை மூடநம்பிக்கைகளின் ஆட்சியினின்று, பிடியினின்று நீக்குதற்பொருட்டே தோன்றியது என்றாலும், பகைவர்களை வலியுறுத்தித் தமது சமயத்தைத் தழுவ வைக்கவேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியிருந்தது. இவ்வார்வம் காரணமாக சமய பகை பெருகிற்று. வல்லவப, இராமானந்தர், கபீர் போன்றவர்கள் அறிவிற்கும், சமயப்பொறைக்கும் முதலிடம் கொடுத்தனர் என்றாலும், இவர்கள் அன்று கண்ட சூழ்நிலை, புறச் சமயங்களின்மீது, வெறுப்பும், பகைமையும், வளர்ந்திருந்த ஒன்றாகும். முஸ்லீம் முல்லாவும், ஹிந்து பண்டிதரும் தத்தம் பணிகளை விடுத்திருந்தனர். சமயம், உண்மையான நிலையில் விளங்கவில்லை.

குருநானக், அனுபூதி பெற்ற பின்னர், முதன்முதலாக வெளியிட்டவுண்மை. ஹிந்துவெனவும், முஸல்மானெவும், தனித்தனியே எவரும் விளங்கவில்லை என்பதாகும். இவ்விரு பெருஞ் சமயங்களின்று சிறந்தன யாவற்றையும் எடுத்து

இணைக்க முற்பட்டார். இவ்விரு சமயங்கட்கு அயலாகவுள்ள பிற சமயக் கூறுகளையும் எடுத்துக்கொண்டார். நானக் இந்தியாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் அதிகமாகப் பயணஞ் செய்தவர். மத்திய கிழக்கு நாடுகளில் இஸ்லாமிய கலாச்சாரம் நன்கு பரவியிருந்ததைக் கண்டார். அன்று அவர் நாளில் நிலவிய பல்வேறு கருத்துக்களையும் அறிந்தார். அவர் வகுத்த புதுச்சமயத்தின் கூறுகளையும் நன்குதேர்ந்து எடுத்து இணைத்தார். அவர் கொண்ட முறையானது, இயைபுடைய கூறுகளையே இணைத்ததாகும். ஆதலால் புதிய சமயத்தின் கூறுகளை நோக்கும்போது, எவ்வெவ்கூறுகள் எவ்வெவ் சமயங்களைச் சேர்ந்தனவாகும் என்று சொல்வது அருமையாக இருந்தது. புகழ் வாய்ந்த சீக்கிய எழுத்தாளர் கூறுவது "ஹிந்து சமயமும், இஸ்லாமும் மணந்தன; இத்திருமணத்தினல் தோன்றியதுதான், சீக்கியம்" என்ருர். செழுமையான இக்குழந்தையினிடத்து பெற்ருேரது கூறுகள் எவை எவை என்று கூறுதல் இயலாது ?" என்பதாகும்.

சீக்கியத்தில் நாம் காணுவது, வியக்கத்தக்கதும், மகிழ்ச்சியூட்டுவதுமான, சிந்தனை, செயல் முறைகளின் கலவையாகும். சீக்கியம், ஹிந்து சமுதாயச் சூழலில் தான் வளர்ச்சிக் கண்டது. ஹிந்து சமயத்தின் அடிப்படையான, கர்மா–மறுபிறப்பு கொள்கையை நானக் ஏற்ருர். ஹிந்து சமயம் முத்திப்பேறு அடைவதற்கு ஞானம், செயல், சரணகதி, பக்தி என பலமுறைகளை வகுத்துள்ளது. இவற்றுள் பக்தி முறையையே நானக் மேற்கொண்டார். சீக்கியருக்கு ஜபம்செய்யும் முறையின் சிறப்பையும், பிரார்த்தனைகளை இடைவிடாது செய்தலால், ஏற்படும் மேன்மையையும் நன்குப் போதித்திருந்தார். இறைவனின் நாமத்தை மீண்டும் மீண்டும் செபித்தலால், ஒருவனது ஆணவம் அழிகிறது. விடியற்காலையில் இறைவனது புகழைப்பாடும் கீர்த்தனங்களைக் கேட்டலால், இறைநினைவு நீங்காது நிற்கும், சக்தி வாய்ந்த இறைவனிடத்துச் சரண் புகுந்தாலன்றி அகந்தை அறவே நீங்காது என்று வற்புறுத்தினர். சரண் புகுந்து, தன்செயலற்று நிற்றலால். இறையொடு ஆன்மா, முடிவில் கலக்கும் என்பது நானக் அவர்களின் துணிபாகும். இறையை உருவமற்றவர்

என்று குறிக்க அவர், "ஓங்கார்" என்றார். இறையே நமக்கு 'பிதா' என்றும், நாம் விரும்பி நேசித்துப் பூரணமாக நமது அன்பு முழுமையும் செலுத்தத்தக்கவர் என்றும் அவரே நமக்குத் தலைவன் 'கசம்' என்றும், நமக்கு அனைத்தையும் தருகின்ற 'தாதா' என்றும் பலவாறாக புகழ்ந்துள்ளார். இந்த பக்திமுறையை சரண் புகுகின்ற முறையை நானக் எடுத்து சிறப்பாக வற்புறுத்தியதலால் அவர் வடக்கே மீராபாய், தெற்கே இராமானுஜர் போன்றோரின் போதனைகளை ஏற்றவ ராகிறார்.

ஹிந்து சமயத்தில் நானக் ஏற்றவை எவ்வெவை என்று மேலே குறித்தோம். அவர் மறுத்தவையும், ஏலாதவையும் உள. கடுந்துறவு, உடலை வாட்டுதல், புலன்களை ஒறுத்தல் போன்றவற்றை வன்மையாக நானக் கண்டித்தார். இதில் புத்தர் பெருமானது அருளுரைகளின் சாயலை நானக்கின் சீக்கியத்தில் காண்கிறோம். துறவி, இறுதியில், இல்வாழ் வானை நம்பியே வாழவேண்டியுள்ளது என்பதை நானக் நன்கு சொல்லியுள்ளார். உலகில், பல தூய்மையற்ற செயல்கள் உள. அவற்றினின்று நீங்கி தூய்மையோடு வாழுதலே சிறந்தது என்பது நானக்கின் கருத்தாகும். உலகில், மனைவி, மக்களோடு வாழலாம். ஆனால், பற்றின்றி வாழ்தல் வேண்டும். இறை நினைவு மாறாமல், உலகிடை வாழலாம் என்பது நானக் கண்ட முடிபு ஆகும்.

பக்தி நெறியை நானக் வற்புறுத்தியபோது உலகக் கட மைகளின்று நீங்கவேண்டும் என்பது அதற்குப் பொருளாகாது. 'செயற்படுக; சிந்தனையோடு நில்லாதே' என்பது அவர் அறிவுரையாகும். வருந்தி, உழைத்து பெறுகின்ற ஊதியத் தால் உண்ண வேண்டும் என்பது நானக் வலியுறுத்திய மற்றொரு உண்மையாகும். சரியான வழியை அறிந்தவர்கள் தம் வியர்வை நிலத்தில் வீழ உழைத்து உண்பவர்கள்; பிறரோடு, தாம் பெற்றதைப் பகிர்ந்தும் உண்பவர்களாம் என்பதும் நானக் கருத்தாகும். வீடுபேறு என்பது, நற் பணிகள், நல்லொழுக்கம் என்ற அடிப்படையில், நிர்ண யிக்கப்பெறுகிறது என்று நானக் கூறுகிறார். சொற்களால், திறமையான பேச்சால், ஒருவர் தூயோராக முடியாது;

செயல்களாலேயே ஒருவன் பிறரால் போற்றத்தக்கவனாகிறான். சீக்கியர்கள், செயலையே பெரிதும் மதிக்கின்றவர்கள்; செயல் நோக்குடையவர்கள் என்றே கூறலாம். மிகவும் நுணுக்க மான, சமய சம்பந்தமான வாதங்களில் பொழுதைக் கழிக் காது மரபு வழி பிறழாமல் வாழ்ந்து, வறிதே காலத்தைக் கழிக் காதவர்கள் சீக்கியர்களல்லர்.

இஸ்லாம் சமயத்தினின்று, சிறந்த சில கூறுகளை நானக் ஏற்றார். பல கடவுட் கொள்கையை ஹிந்து சமயத்தில் பலரும் ஏற்றிருந்த காலத்தில், நானக், கடவுள் ஒருவரே என்று ஆணித்தரமாக வலியுறுத்தினார். இக்கடவுள் ஒருமைக் கொள்கையானது இஸ்லாமிய சமயத்தின் சிறப் பாகும். இறைவனை உருவமற்றவொருவராக நானக் குறித் ததும், இஸ்லாம் சமயத்தின் சிறப்பான மற்றொரு கருத்தை ஏற்பதாகும். உருவமற்றவரென்றும் யாண்டும் நிறைந்தவர் என்றும், அவர் இருப்பை நாம் உணர்தல் இயலும் என் றும் கூறினார். கடந்த நிலையில் கருதும்போது, நமக்குத் தொடர்பற்றவர்போல இருக்கும். கலந்த நிலையில் கருதும் போது, நமக்கு இறையுண்மை நன்கு புலப்படும். விக்ரக வழிபாட்டை எவ்வகையிலும், நானக் ஏற்க மறுத்தார். இவ்விக்ரகம் ஹிந்து கோயிலிலுள்ள சிலை வடிவமானாலுஞ் சரி, கறுப்புக்கல்லாக வைத்து, இஸ்லாமியர்—மெக்காவில் போற்றுகின்ற வடிவமானாலுஞ்சரி, நானக் ஏற்கவில்லை. மெக்காவிற்கு நானக் சென்றிருந்தபோது, தூய, புனிதமான 'காபா'வை நோக்க துயிலும் நிலையில் அவரது கால்கள் நீட்டப்பெற்றிருந்தன. அங்குள்ளவர்கள் நானக்கிடம் இச் செய்கைக்காக கோபித்துக் கொண்டனர். அப்போது அவர் வெகுளாது இறையில்லாத பக்கத்தில் தனது கால்களைத் திருப்பி விடுமாறு வேண்டினார். அவர்கள் யாண்டும் இறைவன் இருப்பதை உணர்ந்தனர்.

இஸ்லாமிய சமயத்தில் நிலவிய, சமத்துவம் நானக் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. பணக்காரன், ஏழை ஆண்டி அரசன் ஆகிய எல்லோரும் இறைவன் முன்னர் சமமானவர்களே. இச்சமத்துவம், மசூதியில், தொழுகையின் போது, போற்றப்பெறுவதை நானக் கண்டார். சீக்கிய

குருத்துவாரத்தில் - 'சத்சங்' நல்லாரிணக்கம் சமத்துவத்தை வற்புறுத்துகிறது எனலாம் குருத்துவாரம் நமக்கு மகுதியின் நினைவைப் பல வகைகளில் எழுப்புவதாகும். தூய்மை துப்புரவு, திறந்த அமைப்பு, விக்ரகங்களின்மை, சடங்குகளின் எளிய நிலை-ஆனல் மதிக்கத் தக்கனவாக அமைதல் போன்றவை நம்மை ஈர்ப்பனவாகும்.

கூட்டுணவு (லங்கர் கானு) என்பது, சாதி, சமய வேறுபாடின்றி, ஒருங்கே அமைந்து உண்ணுதலாகும். இங்கே உணவு கொள்வோர், அனைவரும் சமமாகக் கருதப் பெறுவர். பிறப்பால், பெற்றுள்ள செல்வத்தால், நிலையால் எவரும் தகுதியுடையவராகார். அனைவரும் கூட்டுணவு கொள்ள தகுதியுடையவராவர். இவ்வழக்கு, சூபி, அநுபூதிமான்களிடையே நிலவுவதாகும். குருத்துவாரத்தில் நாம் காணுகின்ற பிறிதொரு காட்சி. நமது உள்ளத்தைப் பிணிப்பதாகும். செல்வ மிக்க சீக்கியன், விளக்குமாற்றை எடுத்து, தரையைச் சுத்தமாகக் கூட்டுவான். இச்செயல் துப்புரவை வற்புறுத்துவதோடு, உழைப்பின் உயர்வையும் நமக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

நானக் பிற சமயங்களிலிருந்தும் சிறந்த தத்துவங்களை ஏற்ருர். பௌத்தத்தினின்று, அஹிம்சைக் கொள்கையை எடுத்து, வற்புறுத்திஞர். கடுந்துறவை, உடலை வாட்டுதலை, கடிதலை பௌத்ததினின்று மேற்கொண்டார் என்று மேலே கண்டோம். காருண்யத்தையும் பண்புடைமையையும் ஏற்ருர் அமைதியான, அறிவுமிக்க பரப்புநராக விளங்கியவர், நானக் ஆவர். அவரது வாழ்வில் அமைதியையும், அன்பையும் சகிப்புத் தன்மையையும் நமக்குப் போதித்தார். ஆனல், அவர் மறைந்த இரு நூற்றுண்டுகளுக்குள், அவரைப் பின் பற்றியவர்கள் தம் சமயத்தைக் காக்கும் பொருட்டு வாளேந்த வேண்டுவதாயிற்று. இது வரலாற்றில் நாம் காணும் வியத்தகு நிலையாகும். நிறுவியவர் குறிக்கோளுக்கு மாருனதொரு சூழ்நிலை உருவாகியதே இதற்குக் காரணம் எனல் வேண்டும். சீக்கிய சமயத்தின் பத்தாவது குரு, எதிர்ப்புணர்ச்சி மிக்க தோழமைக் குழு ஒன்றை நிறுவிஞர். இஸ்லாம்

சமயத்தினர், தம்மை தாக்க முற்பட்டபோது, வாளேந்தி போர் புரிந்து, தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலை தோன்றியது. இந்நிலையில்தான் வாளும் சீக்கியருக்குத் துணை நிற்க வேண்டியதாயிற்று.

காந்தியண்ணல் "உண்மையே இறைவன்" என்று நமக்கு உணர்த்தினார். இது, அண்மைக்காலத்தில் நமக்கு மீண்டும் அறிவுறுத்தப்பெற்ற உண்மைபாகும் இதற்கு முன்னால் குரு நானக், இறைவன் யாண்டும் நிறைத்திருத்தலானது, அவரது உண்மையினை விளக்குவதாகும் என்று கூறினார், இவ்வுண்மையே மனிதரைத் தூய்மைப்படுத்துவதாகும். இறைவன் உண்மையானவன்; இவன் 'அசத்' அல்லன்; மித்தையுமன்று என்று நானக் வற்புறுத்தினார். நானக் கூறிய இக்கருத்தை அவரது காலச்சூழலை நினைவுகூர்ந்து பார்க்கவேண்டும். அன்று சமுதாயம் மிகவும் குழப்பமான நிலையில் இருந்தது. சமுதாயப் பண்புகள் போற்றப் பெறவில்லை. ஆதலால் தான் அடிப்படையான ஒன்றை வலியுறுத்த எண்ணிய நானக், இறைவன், உண்மை வடிவினன் என்றார். 'சத்' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். 'சத்' என்ற சொல்லிற்கு உண்மை, உள்ளது என்ற இரு பொருளும் உண்டு. இறைவன் யாண்டும் நிறைந்து விளங்குகின்றான் என்று கூறி, நாம் நன்னடத்தையுடன் ஒழுகுதல் வேண்டும் என்றார். உண்மையை நம்புங்கள். உண்மை உங்கட்கு விடுதலை நல்கும் என்றார் நானக். இவ்வடிப்படை உண்மையை நானக் வற்புறுத்திய காரணத்தால் சீக்கியம், வன்மையுடையதாய், உயர்வு உடையதாய், விறுவிறுப்புடையதாய் இன்றும் விளங்குகிறது.

குருநானக், கிராமப்புறச்சூழலிலே வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தார். இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தார். அவர் போதனைகளுள் வீட்டு வழக்கிலுள்ள உவமைகளும், கதைகளும் சிறந்த உண்மைகளை விளக்கப் பயன் பட்டன. அவர் பயன்படுத்தியமொழி, அன்றுடம் மக்கள் வழக்கிலிருந்த பஞ்சாபி மொழியாகும். ஹிந்துக்கள், சமஸ்கிருதத்தைச் சிறந்த தத்துவக் கருத்துக்களைப்போதிக்க பயன் படுத்தினர். அராபிய, பெர்சிய, உருதுமொழிகள் இஸ்லா

மியரால் தத்துவ விளக்கங்கட்குப் பயன்படுத்தப் பெற்றன. இந்நிலையில், மக்கள் யாவரும் எளிதில் புரிந்துகொள்ளும் பஞ்சாபி மொழியைச் சிறந்த போதனைகட்காக நானக் பயின்றது போற்றத்தக்கதாகும்

நானக் எளிய வாழ்வு வாழ்ந்தார். தூய்மையான அவரது வாழ்வே சிறந்த படிப்பினையாக அமைந்தது. அவர் போதித்த கருத்துக்களின் எளிமை மக்களைப் பெரிதும் ஈர்த்தது. அவர் உயர்ந்த தத்துவ நுணுக்கங்களைப் போதிக்கவில்லை. மக்கள் எளிதில் புரிந்து, ஏற்று, நடக்கக்கூடியவைகளையே போதித்தார். அவரது அறிவுரைகள் எளியன. நேராக உணர்த்துவன. "பணிசெய். நாமத்தை ஜெபம் செய், பகிர்ந்துண்" போன்றவை அவரது உபதேசங்கள். ஒளிமிகுந்த அவரது ஆளுமைத் திறன் பலரையும் கவர்ந்தது. அவரது சமகாலத்தவரையும் ஈர்த்தது. சீக்கியம் ஆற்றல் வாய்ந்த சமயமாக வளர்வதாயிற்று. இன்னும் சீக்கியம் தோற்றகாலச் சிறப்பு குன்றாது நிலவி வருவதற்குக் காரணம் சில அடிப்படை உண்மைகளை நானக் நன்கு வற்புறுத்தியமை என்று துணிந்து கூறலாம். சீக்கியர்களும் அவ்வடிப்படைகளைப்போற்றி ஒழுகி வருதலாகும்.

ஐந்நூறு நூற்றாண்டுகள் கழித்து, நாம் குருநானக் அவர்களது வாழ்க்கையை நோக்கும்பொழுது, அதில் விளங்கும் பல்வகைச் சிறப்புகளையும் நன்கு உணரலாம். அவரது வாழ்வில் உயர் ஞானம், பணிவுடைமை, பொதுமக்களும் ஏற்று ஒழுகத்தக்க சீரிய பண்புகள், மிளிர்வதைக் காணலாம். அவரது உபதேசங்களுள், கீர்த்திமிக்கது, அவர் வேறுபட்ட பல கொள்கைகளை இணைத்து புதிய கொள்கையாகச் சீக்கியத்தை வழங்கியமையாகும். இச்சமயம் முற்றிலும் புதியதன்று என்றாலும், இதுகாறும் நிலவிவந்த சமயங்களின் வேறானது ஆகும். மேலே விளக்கியதைப்போல இரு பெருஞ் சமயங்களினின்று, மக்கள்போற்றி, ஒழுகத்தக்க உயர்ந்த கூறுகளை இணைத்து புதியதொரு சமயத்தை — சீக்கியத்தை நானக் வகுத்தது, போற்றத்தக்க தொண்டாகும். வேறுபடுவனப்போலத் தோன்றும் கருத்துக்களை இணைத்து, புத்தர்–கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் "பௌத்தம்" என்று பின்னாளில் வழங்குகின்ற சமயத்தை நிறுவினார். பின்னர் கி. பி

ஏழாம் நூற்றாண்டில் ஆதிசங்கரர், ஹிந்து சமயத்தின் உட்பிரிவுகளனைத்தையும் இணைத்து, ஷண்மதங்களை ஸ்தாபித்தரர். ஹிந்து சமயத்தின் சிறப்பு நன்கு விளங்குவதற்கு சங்கரரது ஷண்மத நிறுவனம் பெரிதும் உதவியது எனல் வேண்டும். பிரம்மசூத்திரப்பேருரை, அத்துவித முடிபை நன்கு வலியுறுத்தியது. அவரது ஏனைய,நூல்கள் தத்துவ உலகில் தனி சிறப்புடையன. மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவை அவரது பக்திப் பாடல்களாகும். ஹிந்து சமயத்தின் உட்பிரிவுகளை நன்கு நிறுவிய காரணத்தால், இவ்வுட்பிரிவுகளைச் சார்ந்தோர் யாவரும், தத்தம் நெறிநின்று, ஒழுக ஏதுவாயிற்று. சங்கரருக்குப்பின் ஏறக்குறைய ஏழு நூற்றாண்டுகள் கழித்து குருநானக் சமயவுலகில் சிறந்ததொரு பணியினை ஆற்றினர். ஹிந்து சமயத்திலுள்ள குறைகளை நீக்கினர். அந்நாளில் புதியதாகப் பரவிய இஸ்லாம் சமயத்தை இந்தியமக்கள் ஏற்கும் வகையில் அச்சமயத்தின் சிறந்த கூறுகளை ஏற்றார். இரு வேறு சமயத்தவர்களும், பகைமை நீங்கிச் சிறப்பாக வாழ்வதற்கு, இரு சமயங்களின் இணைப்பு தேவையாயிற்று. ஆதலால் இணைத்தார். இவ்விணைப்பிற்கு அரசியல் சூழ்நிலை முதற்காரணமாயிற்று. இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியில் இருந்ததால், ஹிந்துக்கள் பல கொடுமைகட்குள்ளானர்கள். மக்கள் புறச்சடங்குகளில் ஆழ்ந்து சமயத்தின் உள்ளீட்டை மறந்திருந்தனர். அவர்களது வாழ்வும் தூயதாக அமைந்திலது. ஆதலால், நானக் சிறந்த அற அடிப்படையை நிறுவினர். இறையொருமையை வலியுறுத்தினர். ஜபம், புகழை ஓதுதல், முதலியனகொண்ட சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தார். முன்னர் குறித்ததுபோல, ஹிந்து சமயமும், இஸ்லாம் சமயமும் மணந்தநிலையில், பிறந்த வளமான சேய்தான் சீக்கியமாகும். ஆனல், பெற்றோரது கூறுகள் இவ்விவை என்று சுட்டலாம். இருப்பினும் சீக்கியத்தில் பெற்றோரிடமுள்ள குறைகளைக் காணமுடியாது. ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரே, சமயப்பொறையை வற்புறுத்திய பெருமை, நானக் அவர்கட்கு உண்டு. சமயப் பகைமை தோன்றிய காலத்தில் சமயங்கள் இணங்கி வாழ வகை செய்தார். புதியதொரு சமயம் வகுத்த காரணத்தால், இச்சமயத்தைப்போற்றி வாழத் தலைப்பட்டோர் பலராவர்.

இன்றும் இச்சமயம் தனது சிறப்பு குன்றாது வாழ்வதற்குக் காரணம், நானக் வகுத்த முறையாகும். சீக்கியத்தின் சிறப்புக்களைத் தனியே அறிவோம்.

## சீக்கிய சமயம்

சீக்கியர் இன்று தமது சமயத்தைச் சீக்கியம் என்று கூறுகின்றனர். இச்சமயம் குருநானக் அவர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பெற்றது. குருநானக்கின் காலம், பதினைந்தாம் நூற்றாண்டாகும். நானக், சீக்கியத்தின் அடிப்படைக் கொள்கைகளை வகுத்தார். பின்னர் தோன்றிய குருமார்களும் சீக்கிய-சமயத்தின் வளர்ச்சிக்கு அரண் செய்தனர். இந்த ஐந்து நூற்றாண்டுகளிலே சீக்கியம் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது.

'சிக்' என்ற சொல், சீடன் என்ற பொருளைத் தரும். எச்சமயத்திலும், புதிய வளர்ச்சி ஏற்படும்பொழுது, அவ் வளர்ச்சி ஏற்கெனவே இருந்து வரும் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் நிலையிலேயே அமையும். பஞ்சாபில் இருபெருஞ் சமயங்கள், நானக் காலத்தில் நிலவின. அவை ஹிந்து, இஸ்லாம் ஆகிய இரண்டாகும். சீக்கிய சமயம் ஹிந்து, இஸ்லாம் சமயக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. மேலும், இவ்விரு சமயங்களின் குறைகளை, புலப்பட்டுத் தோன்றியனவற்றைக் களைகிறது. அன்று நிலவிய அரசியல் சூழ்நிலையும், சீக்கியம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது குருநானக், புதியதொரு சமயம் வகுத்து, மக்களை நன்னெறியிற் புகுத்த நினைத்தார். அவரது இளமையினின்றே மரபுகளை எதிர்த்து, அவற்றின் உட்பொருளை விளக்குகின்ற நிலையை நாம் காண்கின்றோம். நபிகள் நாயகம் தீர்க்கதரிசி, முகமது, அவர்கள் தனது உறவினர் ஒருவருடன் சிரியா பகுதியில் பயணஞ் செய்து கொண்டிருந்தார். அப்போது, அவர், கிறித்தவர்கள், மும்மைக் கொள்கையைக் குறித்து விவாதம் செய்துகொண்டிருந்ததைக் கேட்டார். அப்போதுதான் அவர் தனது எதிர்ப்புக் குரலை முதன் முதலாக எழுப்பியதாக அறிகிறோம். 'இறைவன் ஒருவனே' என்பது அக்குரல். இதே போல,

குருநானக் அவர்களும், தமக்குப் பூனூல் அணிவிக்கும்போது, அச்சடங்கின் உட்பொருளை உணர்த்தினர். சடங்கினைச் செய்த பிராமணனை நோக்கி நானக் கூறியது.

இரக்கம் பஞ்சு; மன நிறைவு நூல்; சீலம் அல்லது சிறந்த ஒழுக்கம்-முடிச்சு, உண்மை இந்நூலுக்கு முறுக்கேற்றுவது; இத்தகைய நூலை எனது ஆன்மாவிற்கு அணிவிப்பதானல் அணிவிக்கலாம். இந்நூல் அறுபடாது, அழுக்கேருது; எரியுண்ணுது, தொலையாது. இத்தகைய நூலை அணிந்து செல்பவன், புண்ணியவான்". இந்நிகழ்ச்சி, சடங்கின், புறநிலைகளைக் கடந்து, அவற்றின் உண்மைப்பொருளை நமக்கு உணர்த்துகிறது. மேலும், இளைஞராகிய குருநானக்கின் உள்ளத்தில், சாதிப்பகைமை, புரோகிதரது செருக்கு போன்றவையும் உறுத்தியிருக்க வேண்டும். குருநானக்கின் இளமைப் பருவத்தில்தான் இஸ்லாம் வடமேற்கினின்று, மெல்ல, இந்தியாவில் வேரூன்ற ஆரம்பித்த காலமாகும். ஆதலால், இஸ்லாமிய சமயம், இவரை இளமையில் ஈர்த்தது. அன்று நானக் வாழ்ந்த மாநிலத்தின் ஆளுநராக விளங்கியவர், இஸ்லாம் சமயத்தைத் தழுவிய ஒருவராவர். அவர் நன்கு கற்றிருந்த முஸ்லீமாக விளங்கியவர். நானக் பாரசீக மொழியினைப் பயின்ருர். இம்மொழியின் வாயிலாக இஸ்லாமியரது, சமய நூல்களைப் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. குருநானக் தமது இளமையில் யாத்த கவிதையொன்றில், "சமயப் பகைமையை நீக்குக! ஷரியத்படி ஒழுகுக!" என்று கூறியுள்ளார். 'ஷரியத்' என்பது இஸ்லாமிய சட்டமாகும். இந்த புதிய இஸ்லாம் சமயமும் நானக் அவர்கட்கு மனநிறைவைத் தரவில்லை. இருசமயங்களாகிய ஹிந்து, இஸ்லாம் ஆகியவற்றுள் விளங்கிய சடங்குகளும், வெறித் தன்மையும், இவரது உள்ளத்தைப் புண்படுத்தின. இக்குறைகளைக் களைந்து, அனைவரும் வீடுபேறு அடைவதற்குரிய நெறியினைக் காண, நானக் அவாவினர். எச்சாதியினராயினும், எந்நிலையினராயினும், எத்தொழிலராயினும், ஆணுக இருந்தாலுஞ்சரி, பெண்ணுக இருந்தாலுஞ்சரி, யாவரும் இறைவனை அடைதற்குரிய நெறியினைக் காண முயன்ருர்; வெற்றி பெற்ருர்.

இஸ்லாமிய சமயத்தின்படி, மகளிர்க்கு ஆன்மீக வாழ்வு மேற்கொள்ளும் இயல்பு இன்று பிராமண புரோகிதர்கள் மகளிரும், சூத்ரர்களும் வேதம் பயிலுதல் ஆகாது என்று வாதிட்டனர். நானக் இதை எதிர்த்து, மக்களாய்ப் பிறந் தோர் யாவரும் சமமானவர்களே என்று ஆணித்தரமாகக் கூறினர். இருபாலாரும், ஆன்மீக வாழ்வு வாழ்வதற்குரிய வர்கள் என்றார். கடுமையான நோன்பு முறைகளை எதிர்த்து வாதாடினர். குடும்ப வாழ்வை, அனைவருக்கும் வற்புறுத்தி னர். குருநானக் அவர்களும் மணமானவர், இரு புதல்வர் கட்குத் தந்தையாவார். இவர் பின் தோன்றிய குருமார் களும் மணமானவர்களேயாவர். மது, மயக்கந்தரும் மருந்து கள், புகையிலை, ஆகியவற்றைப் பயன்படுத்துதல் தகாது என்று அறிவுறுத்தினர்.

சீக்கியர் (அவரது சீடர்) காலையில் துயில் நீத்தல்வேண் டும். குளிர்ந்த நீரில் நீராடி, பக்திப் பாடல்களைப்பாடி இறை வனைத் தொழவேண்டும். புனிதயாத்திரை, ஏதும் மேற் கொள்ள வேண்டுவதிலது. தீர்க்கதரிசியின் உள்ளத்துறுதி யோடு நானக் கூறியது, ‘இறைவன் ஒருவனே’ என்பதாகும். இறைவன் நாமத்தை இடையறாது ஓதுதலாகிய ஒரே சடங்கு தான் உகந்தது பரம்பொருள். ஒருவன் உளன். ஏனைய தெய்வங்களெல்லாம் இறைவனது ஆணையை ஏற்றுத் தொழில் புரிவோராவர். பிறப்பு — இறப்பு என்றும் சுழற்சியினின்று, நாம் எளிதில் விடுபடலாம் என்று நானக் கூறினர்.

நானக் தமது உடையாகக் கொண்டது, பிறரை எளிதில் கவரக்கூடிய ஒன்றாகும். இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப, அவர் தமது உடையினை மாற்றி அமைத்துக்கொண்டார். இவ் வுடையில், ஹிந்து, இஸ்லாமிய சமயத்தோர் மேற்கொள்ளும் கூறுகள் விளங்கின. இந்திய நாடெங்கும் அவர் சுற்றி, தமது கொள்கைகளைப் பரப்பினர். மர்தன என்பவர் அவருடன் எங்கும் சென்றார். அராபிய நாட்டில் தோற்றம் கொண்டதாகக் கருதப்பெறும் ரெபக் அல்லது தபாப் என்னும் இசைக்கருவி யினை மர்தன என்பவர் இசைப்பார். இவ்விசைக்கேற்ப, பாடல்களை அவ்வப்பொழுது யாத்து, நானக் அவர்கள் பாடி

யருளினர். சிங்களநாட்டிற்கும் சென்றார், மெக்காவரை மேற்கே சென்றார் என்று அறிகிறோம். ஆங்காங்கே ஹிந்துக்களும், முஸ்லீம்களும் இவரது உரைகளைக்கேட்டு மனம் மாறினர் என்று அறிகிறோம். 1538ல் குருநானக் மறைந்தபோது, தமக்குப்பின் அங்கத் என்பவராகிய சீடர் தமது இடத்தில்வைத்து மதிக்கத்தக்கவர் என்று கூறினர். குருநானக்கைத் தொடர்ந்து தோன்றிய நான்கு குருமார்கள், அங்கத் (1538-1552) அமர்தாஸ் (1552-1574) ராம்தாஸ் (1574-1581) அர்ஜுன் (1581 1606) சீக்கிய சமயத்தின் அடிப்படைகளை நன்கு நிறுவிய பெரியோராவர். இவர்கள் ஆற்றிய தொண்டினைச் சிறிது காணுவோம்.

அங்கத் என்னும் குரு. தனித்த எழுத்துக்களைக்கண்டு, பஞ்சாபி மொழியினைத் தழுவியநிலையில், 'குருமுகி' என்ற எழுத்துமுறையினை வகுத்தார். இவ்வெழுத்துக்களைக் கொண்டே சீக்கிய, புனித இலக்கியம் முழுமையும் எழுதப் பெற்றது. குருநானக் காலத்தில் ஏற்பட்ட **'லங்கர்'** என்ற நிறுவனம் மக்கள் யாவரும் ஒருங்கே உண்ணக்கூடிய பொதுவான இடமாகும். இங்கே உணவு இலவசமாகவும் தரப் பெற்றது

அமர்தாஸ்—குருமார் வரிசையில் மூன்றாவதாகத் தோன்றியவர் இவர். சீக்கிய சமயத்தின் தலைமைபீடத்தை 'கோய்ன்ட்வால்' என்னும் இடத்தில் அமைத்தார். இவரது காலத்தில் சீக்கிய சமயத்தின் நிறுவன அமைப்பு சிறப்பாக அமைந்தது. சீக்கியர் கடுமையான தவமுறைகளில் நாட்டம் கொள்ளாத வகையிலும் இம்மை வாழ்க்கையைவிடுத்து, மறுமை வாழ்க்கையில் நாட்டம் கொள்ளாத வகையிலும், மக்கள் மனிதனை நானக் அவர்களது போதனைகளில் பதியுமாறு செய்தார். கடுமையான தவத்தைப்போற்றுவோர் தனியே பிரிக்கப்பெற்றனர். இவர்கள் நானக்கின் மகன், திரு. சந்த் என்பவரைப் பின்பற்றினோராவர். 'லங்கர்' அமைப்பு மேலும் சிறப்பு மிகுந்தது. சீக்கியரிடையே ஒற்றுமையுணர்வை வளர்ப்பதற்கு லங்கர் பெருமளவில் துணைசெய்தது. சாதிப்பாகுபாடுகளால் கட்டுண்டு கிடந்தோர், பொதுவாக ஒருங்கே உண்ணுகின்ற

பழக்கம் மேற்கொள்வாரயினர். இதனால் சாதிக் கட்டுப் பாடுகள் மெல்ல குறையலாயின. சீக்கிய புனித யாத்திரைத் தலமாக, 'கோவிந்த் வால்' கட்டப்பெற்றது. இங்கே, படி யிறங்கி கை கால்களைச் சுத்தம் செய்து செய்து கொள்ளும் வாய்ப்பு அமைந்த கிணறு ஒன்று தோண்டினர். ஆண் டொன்றிற்கு மும்முறையேனும் சீக்கிய சமூகம் ஒருங்கே ஓரிடத்தில் கூடுகின்ற பழக்கத்தை ஏற்படுத்தினர். சீக்கிய ருக்கென்றே, மணவினைகள், ஈமச்சடங்குகள் முதலியன வகுக்கப்பெற்றன. இவை, பிறசமயங்களினின்றும் வேறு பட்டன. ஆதலால், சீக்கிய சமயத்திற்குத் தனித்தன்மை தோன்றுவதாயிற்று. சமுதாய கேடுகளாகிய, சதி (கணவனை இழந்த மனைவி, அவனுடன் உடன்கட்டை ஏறுதல்) மதுப் பழக்கம், ஆகிய இவ்விரண்டும், கேடு பயப்பவை என்று வெறுத்தொதுக்கப்பெற்றன. சீக்கிய சமயம் விரைந்து, மக்களிடையே பரவிற்று. ஹிந்து, முஸ்லீம் ஆகிய இவ்விரு சமயத்தவர்களினின்றும் பலர், சீக்கிய சமயத்தைத் தழுவ லாயினர். அமர்தாஸ், இருபத்தினன்கு வட்டங்களை (மஞ்சாக்கள்) ஏற்படுத்தி, ஒவ்வொரு வட்டமும் ஒரு பக்த னின் தலைமையில் இயங்குமாறு செய்தனர். இவ்வட்டங்கள் இயங்கிய இடங்களிலேதான், பொதுவான வழிபாடு நிகழ்ந் தது. சமயக் கொள்கைகள் பரப்பப்பெற்றன.

அமர்தாஸ் என்னும் குருமார் காலத்திலேயே தொடங் கிய பணியானது, அடுத்துத் தோன்றிய ராம்தாஸ் அவர் களது காலத்தில், தொடர்ந்து நடைபெற்றது. ராம்தாஸ் என்பவர், 'அமிர்த்சரஸ்' என்னும் குளத்தை வெட்டுவ தற்கு ஆரம்பித்துத் தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டார். இப்பணி இவரது மகன், குருஅர்ஜுன் காலத்தில்தான் நிறைவேறியது. பொதுமக்களிடத்திலிருந்து நிதி திரட்டி, இப்பணி, நிறைவேற்றப்பெற்றது. பொது மக்களது ஆதர வும் நிதியுதவியும் பெறுவதற்கு நிருவாகத் திறன் தேவை. இத்திறன், ராம்தாஸ் அவர்களிடம் மிகுதியாக இருந்தது. இந்நிலையில், குருபரம்பரை என்பது முன்னிருந்த குருவின் மகன் அடுத்து பீடம் ஏறுகின்ற நிலைக்கு வந்தது; அதாவது பாரம்பரியமாக, குருமார்கள் தலைமைப்பீடத்தில் அமர்வதா

யினர். குருஅர்ஜுன் இவ்வகையில், ராம்தாஸ் அவரது மகனுவார். இவர், சீக்கிய சமயத்தின், திருநூலாகிய ஆதிகிரந்தத்தைத் தொகுத்துத் தந்தார். இது மிகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததொன்ருகும். சீக்கிய சமூகத்தினர் தமது, மனவொருமைப்பாட்டிற்கு, இக்கிரந்தத்தை ஏற்றனர். இந்நூல் புறநிலையில் அச்சமூகத்தினரது ஒருமைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. குருஅர்ஜுன் 1581-ல் குருவானுர். இவரது தலைமையில்தான், சீக்கிய சமூகத்தினர், பெரு மாற்றங்கட்கு உட்பட்டனர். இவரது காலம் வரையில், சமயப் பகையின் காரணமாக சீக்கியர் எவ்விதத் தொல்லைகட்கும் உட்படவில்லை. ஹிந்துக்களும் இஸ்லாமியரும் சீக்கியர்களைத் துன்பப்படுத்தவில்லை. இவர்கள் பொறையோடு ஒழுகினர். மிகவும் சுறுசுறுப்பாக அரசியலில் பங்கேற்றவர், குருஅர்ஜுன் ஆவார். ஜெயசாங்கீர் என்னும் மன்னனை எதிர்த்து அமைந்த போராட்டத்தில், குருஅர்ஜுன் ஈடுபட்டார்; சிறைபட்டார்; ஒறுப்புக்கட்டணம் கட்ட மறுத்த காரணத்தால் தூக்கிலிடப்பெற்ருர். முன்னர் கூறியதுபோல இப்பொழுது சீக்கியருக்கு என்று, தனி, எழுத்து மொழி (குருமுகி) தோன்றிவிட்டது, இந்த லிபி கொண்டே ஆதிகிரந்தம் தொகுத்து எழுதப்பெற்றது. தனித்த மொழி, தனித்த திருநூல், பெருபான்மையான சீடர்கள், குறிக்கத் தக்க செல்வம், ஆகியவை தோன்றிய காரணத்தால், சீக்கிய சமயம் விரைந்து வளர்வதாயிற்று. சீக்கியருக்கென்று புனித நகரம் தோன்றும் காலமும், அணித்தே இருந்தது. இவ்வாறு புதியதொரு சமயம் தோன்றுகின்ற நிலை, அக்பரது செவிக்கு எட்டியது. அவரது கருத்து அதன் மீது படர்ந்தது. ஹிந்துகளும் இஸ்லாமியரும் ஒருங்கே சீக்கிய சமயத்தைக் குறித்து, அது தெய்வ பக்தியற்றதொரு சமயம் என்று குறை கூறினர். ஆதிகிரந்தத்திலும், வழக்கிலும் நிலவிய சீக்கிய சமயப் பாடல்களை அக்பர் ஆராய்ந்தார். குறைகள் ஆதாரமற்றன என்று கண்டார். அக்பர் தாமே, குருஅர்ஜுனைத் தரிசித்தார். ஆனுல், அக்பரது மகனுர்காலத்தில், சமயப்பகை தலை விரித்தாடியது. இதன் கொடுமைக்குக் குருஅர்ஜுன் இரையாயினர். ஜகாங்கீர், வாதத்திற்கு இடம் தருகின்ற பாடல்கள்

அனைத்தும் ஆதிகிரந்தத்தினின்று எடுபடல் வேண்டும் என்று ஆணைபிறப்பித்தார். குருஅர்ஜுன் மறுத்தார். மறுத்ததால் பல கொடுமைகட்கு உள்ளானார். இவற்றின் விளைவாக 1606-ல் காலமானார். இவ்வாறு சீக்கிய குருமார்களுள் ஐந்தாவதாக அமைந்த குருஅர்ஜுன் சமயப்பகைக்குப் பலியானார். இவரது மகனார், ஹர்கோவிந்த், பின்னர் குருவாகப் பணிபுரிந்தார். குரு-அர்ஜுன் அவர்கட்குப் பிறகு சீக்கிய சமூகம் அரசியலில் ஈடுபாடு கொண்டது; சமய சார்புகளை நீக்கியது; மனித சமுதாய நலன்களைப் பேணுகின்ற தணித்த சமூகமாக, இந்த சீக்கிய சமூகம் விளங்கியது. இது எதிர்த்துப் போராடுகின்ற சமூகமாக வளர்வதாயிற்று. குருகோவிந்த்சிங் காலத்தில், சீக்கிய சமூகம் மொகலாயர்களது ஏதேச்சதிகாரத்தையும், கொடுங்கோன்மையையும் எதிர்த்துப் போரிட்டது. வாளேந்திய சீக்கிய சமூகம் என்ற பெயரால், சீக்கியர்களுள் ஒரு தனிப்பிரிவு, கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடியது. இச்சமூகத்தை **'கல்சா'** என்று அழைத்தனர். கல்சா சமூகத்தில் உறுப்பினராதற்கு மிகவும் விரிவான சடங்குகள் வகுக்கப் பெற்றன. இச்சமூகத்தில் நுழைவதற்கு-ஐந்து வகையான அடையாளங்கள் குறிக்கப்பெற்றன.

**ஐவகையான அடையாளங்கள்:**

1) வெட்டப்பெறாத தாடி

2) சிங் என்னும் நாமத்தை ஏற்றல்

3) சாதி பாகுபாடின்றி தீக்கைக்கான பொதுவான கோப்பையினின்று அமிர்தத்தை அருந்துதல்

4) ஹிந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய இரு சாராருடனும் கூடாதிருத்தல்

5) சீக்கியத்தின் பொருட்டு, வீரமரணம் புகுவோர் தனியானதொரு மேலுலக நிலையை அடைதல் என்னும் நம்பிக்கை. குருகோவிந்தசிங் என்பவர் செயல்வீரர். அவரது மக்கள் அனைவரும் மொகலாயரை எதிர்த்தே இறந்தனர்.

குருநானக் அவர்களைப் பின்பற்றியவர்கள் அமைதியை நாடியவர்கள். அமைதியாக தமது சமயத்தை வளர்த்தனர். ஆனால், ஆறாவது குருவின் காலத்தில் சீக்கியர் எதிர்ப்பார்வ மிக்கவர்களாயினர். போர் விருப்பமுள்ளவர்களாயினர். பின்னே இவ்வகையில் போரில் ஈடுபடுத்திய குருமார்கள் குரு கோவிந்சிங் அவர்களும் பத்தாவது குருவுமாவர். இளைஞர்களாக விளங்கிய சீடர்களனைவரையும் தோழமைமிக்க எதிர்ப் பார்வமுடைய சமூகமாக மாற்றியவர் பத்தாவது குருவாவர். இச்சமூகத்திற்குத் தனித்த அடையாளங்கள் மேற்குறித்தவாறு கொடுக்கப்பெற்றன. சமயவினைகள் வேறு வகுக்கப்பெற்றன. குருதேக்பகதூர் என்பவரை அவுரங்கசீப் என்னும் மன்னர், தம்முன்நிறுத்தி இஸ்லாம் சமயத்தை அவர் சேர்ந்தால் மரணத்தைத் தப்பலாம் என்றார். குரு, தன் மரணத்தை வர வேற்பதாகக் கூறி, மரணத்தை ஏற்றார். அவர் விடுத்த செய்தி "நான் எனது தலையைக் கொடுத்தேனே தவிர, எனது நம்பிக்கையை, சமயத்தை இழக்கவில்லை" என்றார். சமயத்தைக் காக்க இவரது புதல்வர் நால்வரும் உயிரிழந்தனர்.

*1669*-ம் ஆண்டு புத்தாண்டு பிறந்த நாளன்று குரு கோவிந்தசிங், ஐந்து சீடர்கட்கு சமயதீக்கை செய்தார் இவர்களைப் "**பஞ்சபியாராக்கள்**" என்று வழங்கினர். இவர்கள் மிகுந்த அன்பிற்குள்ளானவர்கள். இவ்வைவர் தான் கல்சா அல்லது தூய சமூகத்தினராகக் கருதப்பெற்றனர். இவ்வைவருள் ஒருவர் பிராமணர்; மற்றொருவர் ஷத்திரியர்; பிறர், கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்கள். சமுதாயத்தில் அனைவரும் ஒத்த நிலையினர் என்பதை நிறுவவே, ஐவரும் ஐந்து வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். இவ்வைவரும் ஒரே கோப்பையினின்று அருந்தினர். இவர்கட்கு வேறு வேறு பெயர்கள் தரப் பெற்றன. ஆனால் ஐவருக்கும் பெயர் முடிபில், சிங் (சிங்கம்) என்ற விகுதி சேர்க்கப்பெற்றது. இவர்கள் ஐவகையான உறுதிகளை ஏற்றனர். ஒன்று, முடியினை நீக்காது அணிதல், தாடியை எடுக்காது இருத்தல். அடுத்து, சீப்பு ஒன்றை தலைமுடியில் எடுத்துச் செல்லல்; எஃகு என்னும் உலோகத்தால் செய்த வளையமொன்றை வலது கையில் அணிதல்;

அரைக்கால் சட்டை அணிதல்; வாள் ஏந்துதல்; இவ்வைந் தும் உறுதியாக அவர்கள் ஏற்று ஒழுகப்பெற்றவையாகும் மேலும் நால்வகை ஒழுக்கச் சட்டங்களை அவர்கள் தவறாது பின்பற்றுதல் வேண்டும். முடியினையோ, தாடியினையோ, வெட்டாதிருத்தல், புகை பிடிக்காதிருத்தல், போதைத்தரும் பொருள்களைப் பயன்படுத்தாதிருத்தல், குறித்தவகையில் அவர்களது சமயம் ஏற்காத விலங்கின் ஊனை உண்ணாதி ருத்தல், ஒழுக்கம் குன்றாதிருத்தல் என்னும் நான்கு ஒழுக் கம் குன்றாதிருத்தல் என்னும் நான்கு ஒழுக்கங்களையும் போற்றுதல் தலையாய கடனாகக் கொண்டிருந்தனர்.

முன்னர் குறித்தது போல, இரண்டாவது குரு, புதிய லிபியைத் தந்தார். அடுத்து வந்தவர் ஆதிகிரந்தத்தைத் தொகுத்து வழங்கினர். புதிய அடையாளங்களும் சடங்கு களும், சீக்கியத்திற்குத் தனிநிலையை ஏற்படுத்தின. வழி பாட்டு இடங்கள் காணப்பெற்றன. இவையாவும், சீக்ய யத்திற்குப் புதியதொரு வடிவத்தைத் தந்தது. இவ்வாறு ஹிந்து சமயத்தினின்று, மாறுபட்ட கொள்கையுடையோர் புதிய கொள்கையொன்றை வகுப்பாராயினர். சீக்கியத்தைச் சுருக்கி உரைப்பதானல், மூன்று கூறுகளை அது கொண்டி ருந்தது என்று கூறுதல் தகும். குருமார்கள் அடுத்தடுத்து பதின்மர்வரை அமைந்த அமைப்பு; ஆதிகிரந்தம் என்னும் திருநூல் உடைமை; சீக்கியரனைத்தும் தோழமைக் கொண்டு உடன்பிறவா சகோதரர்களாக விளங்குதல் என்னும் மும்மை சீக்கியத்தின் சிறப்பாகும். குருமார்கள் யாவரும் நம்மைப் போன்று பிறந்தவர்கள்; இறந்தவர்கள். சீக்கியம் இறை வன் திருவுரு எடுத்துப் பூமியில் பிறக்கின்ருன் என்ற கொள்கையை மறுக்கின்றது. குருமார், மனிதப் பிறவி எடுத்தவர்களே என்பது புலனாகின்றது. ஆதிகிரந்தம் மனிதர் அறவாழ்வு வாழ வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளது. சிக்கிய சமூகம், யாவரும் ஒத்த நிலையினர் என்பதை வற்புறுத்துகிறது. கட்டுப்பாடான சமூகம் என் பதையும் நிலைநாட்டுகிறது.

நமது நாட்டில், சீக்கியர் அரசியலில் சிறந்த பங்கு ஏற்ற காரணத்தால் 'அகாலி' இயக்கம் தோன்றியது. இது ஒரு சிறந்த சீர்திருத்த இயக்கமாகும். சமயம் எந்த அள

விற்குச் சமுதாய மாற்றத்தை விளக்க இயலும் என்று நமக்கு எடுத்துக் காட்டியுள்ளது. அரசியலில், சீக்கியருக் கென்றே பஞ்சாப் மாநில அமைப்பு தோன்றுவதற்குக் காரணமாக அகாலி இயக்கம் விளங்கியது. சமயம் என்றால், பொதுவாக மாற்றத்தை ஏற்காதது, மாற்றங்கட்கு எதிர்ப் பானது, மரபுவழி அமைவனவற்றைக் காப்பது என்று பொருள் கொள்கின்றனர். இப்பொதுக் கருத்து பிழை யானது என்று, நமக்குச் சீக்கிய சமுதாய வரலாறு சிறப் பாக உணர்த்துகின்றது. பொதுவாக இந்திய வரலாற்றி லும் சமயங்கள் பல சமுதாய மாற்றங்கட்குக் காரணமாக விளங்கியுள்ளன. ஆரிய பிரம்ம சமாஜங்கள் நமது இந்தி யாவில் சமுதாய தீமைகளை ஒழிக்க அரும்பாடுபட்டுள்ளன என்பதை நாம் அறிவோம்.

இதுகாறும், குருமார்கள் பதின்மரும் சீக்கியத்தின் வரலாற்றில் கொண்ட பங்கினைச் சுருக்கி உணர்ந்தோம். இனி, சீக்கிய சமயத்தின் சிறந்த கூறுகளைக் காண்போம்.

இறைவன் ஒருவனே என்பது சீக்கியத்தின் உயிர் நாடியான கொள்கையாகும். இறைவன், கடந்து விளங்கு கின்றவன்; உருவமற்றவன் எனினும், இயற்கையினூடே விளங்குகின்றான். இறையின் கடந்த கலந்த நிலைகளை நன்கு சீக்கியம் வற்புறுத்துகின்றது. சிறந்த முறையாக, இறை-நாமத்தை இடையறாது ஓதுதலைக் குறிக்கின்றது. இறைக் கொள்கையையும், இறையின் நாமத்தின் பெருமையினையும் முன்னர் கண்டோம்.

இறைவனை இடையறாது தொழுவோர் புனிதராவர் இறையின் ஆசீர்வாதத்தைப் பெற்றவராவர். உள்ளத்து எழுகின்ற ஆவல்களை எல்லாம் இறையிடம் விண்ணபித்துக் கொள்ளுதல் நன்று. நமது உடல், ஆன்மா, யாவும் இறையின் உடைமையாகும். ஆதலால், இவ்வுறுப்புக்களை தொழுதலிலே பயன்படுத்த வேண்டும். ஒருவனது தொழுகை எந்நாளும் வீண்போகாது. நாம் ஒரு செயலில் வெற்றியை விரும்பினால் இறையிடத்து தொழுதல் வேண்டும். நமக்கு நேர்கின்ற இடர்பாடுகளையும் இறையினிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

நமது குறைகளை எடுத்துக்கூறி இறையருளிற்கு இறைஞ்சுதல் நன்று. இறையிடம் சரண்புகுந்தாலன்றி நமக்கு உய்வில்லை விக்ரக வழிபாட்டை சீக்கியம் வன்மையாகக் கண்டிக்கின்றது. வன்மையான உரைகளுட் சிலவற்றை முன்னர் குறித்துள்ளோம். இறைவன் திருவுருக்கொள்ளுதல் இல்லை என்பதையும் நாம் முன்னர் கருதியுள்ளோம். அவன் போக்கும் வரவும் இல்லாத புண்ணியன். வெவ்வேறு காலங்களில் தோன்றி குருமார்கள் தீர்க்கதரிசிகளாக விளங்கியுள்ளனர் இவர்களை இறைவனின் அவதாரம் என்று குறிக்கின்றோம் இவர்கள் சாட்சிகளாக விளங்கி, இறைவன் தொலைவில் இல்லை, அணித்தே விளங்குகிறான் என்று நமக்கு உணர்த்துகின்றனர்.

ஆன்மா, என்றுமுள்ளது; அழிவற்றது, ஆன்மா, எடுக்கும் உடலே அழியுந்தன்மையது, அது அழியாது என்றும் விளங்குவது. ஆன்மா, என்றும் சாதலில்லை; அதை அழிக்கவும் இயலாது.

இறைவனின் ஆணையின் வண்ணம், ஆன்மா, பல பிறவி எடுக்கின்றது; கூடுவிட்டு கூடு பாய்கின்றது; பேராசையும் காமமும் உடையோர் வழிதவறியவர்களேயாவர். அவர்கள் பல பிறப்புக்கள் எடுத்து, தூய்மை பெறுகின்றனர். காமமும் வெகுளியும் இவ்வுலகில் ஆட்சிசெய்கின்றன. ஆதலால், பிறப்பு, இறப்புகட்கு ஆன்மா உட்படுதல் தவிர்க்க இயலாத தொன்றாகும். பாலை நிலத்தில், மனிதர் வாழாத காட்டுப் பகுதியில், பல பூக்கள் மலர்கின்றன. இவ்வாறு மனிதர் நடமாட்டம் இல்லாத இடத்தில் மலர்ந்த காரணத்தால், மணம் வீணாகின்றது இதுபோல மனிதன் பலப்பல பிறவிகள் எடுத்து, வீணாக்க் கழிக்கின்றான். இறைவுணர்வுடையோர் இறை நாமத்தாலேயே வாழ்கின்றனர். அவர்களுக்கு அச்சம் நீங்குகின்றது. பிறந்து இறந்து, உழலும் நிலையும் இறை நாமத்தை இடையறாது ஓதுதலால் கழிகின்றது. இறைவனின் பொருள் சேர் புகழை நாம் ஓதினால், இம்மையில் துன்பமின்றி வாழ்வதோடு, பிறவிப்பிணியினின்றும் நீங்கலாம்.

நமது வாழ்க்கை, முன்னரே வரையறையுற்றவொன்றாகும். எந்த ஆண்டு, எத்தருணம், மரணம் ஒருவனுக்கு நேரிடும் என்பது வரையற்றயானதாகும். மரணம் எப்போது நிகழ்ந்தாலுஞ்சரி அன்பின் பெருக்கத்தால், நாம் வாழ்க்கையைச் செவ்வையாக வாழ இயலும்.

இறைவன் நமக்கு விதித்துள்ளவாறே யாவும் அமையும். நமக்கு அமையாத ஒன்றை எவ்வாறு முயன்றாலும் பெற இயலாது. நமக்கு வறையறையுற்றதை நாம் மாற்ற இயலாது. எத்துணையளவு நாம் முயன்றாலும், இறையின் ஆணையின் வண்ணம்தான் யாவும் நிகழும். குரு நமக்கு வாய்ப்பதும், இறையின் ஆணையின்படியே ஆகும். குரு அமைந்து, அவரிடத்து பெருகிய அன்பினைச் செலுத்தினால் நாம் உய்யலாம்.

இறைவனின் திருவுள்ளப்படி யாவும் நிகழட்டும் என்று நாம் நமது கவலைகளை, இடர்பாடுகளை இறையிடம் ஒப்படைத்து வாழ்தல், சமய வாழ்வாகும். இவ்வாறு தெய்வ சித்தம் நிறைவேறட்டும் என்று வாழ்வோன், இறையைத் தனது உள்ளத்தில் கண்டு கொண்டவன் ஆவான். இறைவனின் புகழை ஓதுவோமேயானால், அவனது ஆணைகள் நமக்கு இனியனவாகும். இறைவனின் திருவடியினை இறைஞ்சுவோருக்குத் துன்பம் ஏது? நாம் நமக்கு கிடைத்ததை மணமுவந்து ஏற்று நன்றியுணர்வுடையோனாக விளங்க வேண்டும். இறையின் ஆணைகட்கு கீழ்படிந்து நிற்றலே நமது கடமையாகும். பிற யாவும் இறைவனின் விருப்பம்போல் நிகழும் முற்றிலும் ஒப்படைத்த வாழ்வு, இறைவனின் ஆணையின்படி நடக்கட்டும் என்று எண்ணி, ஆர்ப்பணித்து வாழ்தலாகும்.

பாவச் செயல்களை அறவே நீக்கி, நற்செயல்களை நாம் மேற்கொள்ள வேண்டும். பாவச் செயல்களை நினைந்து கழிவிரக்கம் காட்டுதல், நம்மைக் காக்கும். நிகழ்ந்த அறமல்லாத செயல்களை நோக்கி, நாம் உண்மையாக வருந்த வேண்டும். ஒருவன் தெரியாது பல பிழைகள் செய்ய நேரிடலாம். செய்தபின் பிழையென அறிந்தால் அறியாத நிலையில் ஆற்றிய

செயல்கட்கு வருந்தி, மீண்டும் செய்யாதிருத்தலே நமது கடமையாகும். மாயையின் ஆட்சிக்குட்பட்ட நாம், நல்லது தீயது என்று பகுத்து உணரும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் விடுதலை பெறுவதற்குத் துறவு மேற்கொள்ள வேண்டாம் என்பது சீக்கியக் கருத்தாகும். துறவியை நோக்கிக் குருநானக் கூறுவது "சொகுசான வாழ்க்கை, ஆடம்பரம் மிகுந்த வாழ்க்கை, வெகுளி, காமம் ஆகியவற்றைத் துறத்தலே பாராட்டிற்குரியது" என்பதாகும். இல்லத்தை, மனைவியை, மக்களைத் துறத்தல், துறவன்று என்பதும் அவர் கருத்தாகும். மனிதன் அறியாமை வயப்பட்டு தனது இல்லத்தைத் துறக்கின்றான். ஆனால் அவன் பிறரது இல்லத்தை நோக்கி, உணவிற்காக, உடைக்காக வாழ்கின்றான். இது பேதமையாகும். மனை, மக்கள், உற்றார் உறவினரோடு வாழ்ந்துகொண்டே, பரம்பொருளை நினைத்தல் கூடும் அடுத்தடுத்து நானக் தருகின்ற உவமையை மீண்டும் நினைவு கூறலாம் தாமரை, தடாகத்தில் மலர்ந்தாலும், அது தனது வேர்களைச் சேற்றில் செலுத்தியுள்ளது. தாமரையைப்போல் நமது சிந்தனை மேல் நோக்கி அமைதல் வேண்டும். குடும்பச் சேற்றில் நாம் இருந்தாலும் தொடக்கின்றி வாழ்தல் இயலும். என்பதாகும் பலவகையான துறவுக் கோலங்களைப் பூண்டு உலகெங்கும் திரியலாம். ஆனால் உள்ளம் தூயதாக இல்லையானால் பயனென்ன? அகந்தூய்மை குன்றுமேல், மீண்டும் மீண்டும் பிறப் பிறப்புகட்கு உள்ளாவோம். ஆதலால் மனைவியோடும், மக்களோடும் வாழ்ந்தாலும், மனம் பற்றின்றி இருத்தல் வேண்டும். இறைவனின் புகழை ஓதுவோமேயானால், நாம். புனிதராவோம். பரம் பொருள், நமது அகத்தே விளங்குகின்றது: இப்பொருளை நாம் கானகத்தே தேடி பயனென்ன? துன்பங்களை ஆற்றாது, அல்லலுற்று, அலமந்து வீட்டை விட்டு ஒருவன் வெளியே போகலாம். தான் பிறந்த பதியை விட்டு வேறொரு பதியை சேரலாம். ஆனால் அவன் எங்கு சென்றாலும் அவனுடன் அவனது தீமைகளும் உடன் செல்கின்றன. பசிப்பிணி அவனை வாட்டுகிறது. அவன் ஒரு

இல்லத்திற்குச்சென்று உணவிற்காக இரந்து நிற்கின்றான். தனது மனையாளை விட்டு வந்தவன், பிற மாதரைக் காமக் கண்களோடு நோக்குகின்றான். இறைவனைப் புறக்கோலங்களால் அடைய இயலாது. புறம் அகத்தோடு இயையாவிடில், அவன் அடைவது பெருகிய துன்பமேயாகும். அகமும் புறமும் ஒத்த வாழ்வே உயர்ந்த வாழ்வாகும். இறைவனைத்தேடி, காட்டிற்குப் போவானேன்? இறைவன் யாவர் உள்ளத்திலும் வீற்றிருக்கின்றான். உள்ளந்தோறும் உறைபவன் இறைவன் என்றாலும், அவன் தனித்து விளங்குகின்றான். நம்மிடத்தும் உள்ளான். மலரிடத்து மணம் பொதிந்து விளங்குதல் போல, கண்ணாடி உருவத்தைப் பிரதிபலிப்பது போல, இறைவன் உள்ளார்ந்த நிலையில், எல்லாப் பொருள்களிடத்தும் விளங்குகிறான். ஆதலால் இறைவனை நமது இதயத்திலே நாடுதல் வேண்டும். காடே திரிந்து, கந்த மூலாதிகளை உண்டாலும் மனத்தின் இயற்கையை மாற்றாவிடில் பயனில்லை. இல்லையேல் தீயமனம் நம்மை தீமையில் உய்த்துவிடும்.

இறைவன் நமது உள்ளத்துள் இருக்கின்றான் என்ற உணர்வின்றி நாம் மேற்கொள்ளும், தியானம், தவம், உண்ணாநோன்பு, வழிபாடு போன்றவை பயனற்றனவாகும். குருநானக் கூறுவது, "நான் ஹிந்துக்களைப்போல விரதங்களை அனுஷ்டிப்பதில்லை; இஸ்லாமியரைப்போலும் நோன்பைக் காப்பதில்லை. நான் இறைவன் ஒருவனுக்கே ஆட்பட்டுள்ளேன். அவனே எனது புகலிடமாவான். மௌனவிரதம் மேற்கொண்டு, இலையில் உண்ணாது, உள்ளங்கையால் உணவை உண்டு, ஆடையின்றி கானகத்தே திரிந்து, புனித தலங்களைத் தரிசித்து வாழ்ந்தாலும் இருமையுணர்வு நம்மை விட்டு நீங்காது.

சமய நூல்களை ஓதலாம். மூச்சைக் கட்டுப்படுத்தி, அக உறுப்புகளை யோகப் பயிற்சிகளால் தூய்மைசெய்யலாம். ஐவகையான அவாக்களை அகற்றுதல் அரிதாகும். ஆனால், இதற்கு மாறாக ஒருவன் அகத்தே, வளரும் பூக்கள் கொண்டு இறைவனைப் போற்றலாம். மரக்கட்டையைப்போல

தெய்வங்களின் முன்பு வீழ்ந்து வணங்கலாம். சாத்திரங்கள் கூறுகின்ற அறுவகையான செயல்களைப் புரியலாம். ஆனல் அகந்தையின் பிடிப்பினின்று நாம் நீங்குதல் மேற்கண்ட செயல்களால் இயலாது. ஆதலால் செருக்கை ஒழித்து, இறையைப் பணிதலே நமது கடனாகும். சித்தரைப்போன்று ஒருவன் யோகம் பயிலலாம். எண்பத்துநான்கு வகை ஆசன முறைகளைப் பயிலலாம். இவற்றால் ஒருவன் பெறுவது நீடித்த வாழ்வாகும் நெடிது வாழ்ந்தாலும், அவன் பிறந்து இறந்து உழல்வானே தவிர இறையை உணரான். நீண்ட வாழ்வு இறையை அடைவதற்காகப் பயன்படுமேல், அது சிறந்ததாகும்.

உலைக்கலத்திலிட்ட இரும்பு படுகின்ற துன்பங்களைப் போல, உனது உடம்பை வருத்தாதே! வாட்டாதே! நெருப்பிற்கு உனது எலும்பை இறைச்சியாக இடாதே; தலை கீழாக தொங்குதல் எதற்காக? உள்ளே, இறைவனைத் தேடுக! நீ அமைதியை அடைவாய். ஏன் பசியோடும் ஆடையில்லாமலும் திரிய வேண்டும்? கடுமையான நோன்புகளால், மரணத்தை நாம் வரவேற்பவராகின்றோம். இல்வாழ்வின், சிறப்பை நாம் மறந்தவர் ஆகின்றோம். வாழ்வினல் அடையத்தக்கப் பயனை இழந்தவராகின்றோம். குருநானக், இரந்து வாழும் ஒருவனைக் குருவாக ஏற்காதே என்று எச்சரிக்கின்றார். இறையுணர்வோடு இருப்பவன் இரந்து உயிர் வாழ்தல் வேண்டுவதில்லை. மகிழ்ந்து வாழ விரும்புகின்றவன், எல்லையில்லாத் துன்பம் அடைகின்றான். அவன் பலருக்கு அடிமையாக நேரிடுகின்றது. நாய்போல, அவன் வீடுதோறும் இரக்க வேண்டுவதாகின்றது. இறைவனை ஒருபோதும் அவன் அடைய இயலாது. குருநானக் கூறுவது; "நான் எனது தலைவனாகிய இறைவனுக்கே தொண்டு புரிவேன், வேறு எவரிடமும் யான் இரக்க மாட்டேன்"; "இரந்து வாழ வேண்டிய நிலை நேரிடுமேல் எனது ஆவியை நீக்கிவிடு" என்று பிறிதோரிடத்தில் வேண்டுகிறார். இறையிடமே, வேண்டுவன யாவற்றையும் வேண்டிப் பெறுதல் வேண்டும் என்பது நானக்கின் கருத்தாகும்.

கஞ்சனின் செல்வத்தால் யாது பயன்? கஞ்சன் காவற்காரனைப் போல்வான். அறியாமை காரணமாக, அவன் தான் ஈட்டிய பொருட்கட்குத் தானே உடையவன், என்று எண்ணுகின்றான். இது மயக்கத்தால் விளைவதாகும்.

நமது உடலின்கண் ஐவகைக் கொள்ளைக்காரர் குடியிருக்கின்றனர். காமம், வெகுளி, பேராசை, பற்று, செருக்கு ஆகியவை. நம்மைக் கொள்ளையடிக்கின்றன. மனவெழுச்சிகட்கு அடிமையாகின்றவன், மூடனாவான். பேராசை காமம், செருக்கு ஆகியவை நம்மை மூடனாக்குகின்றன. மேற்கண்ட ஐவகையான குற்றங்களைச் செய்பவன் ஒரு நாளும் இன்பம் அடையான் அவா, பற்று, ஆசை முதலியன தீ போன்றவை. உலகு முழுமையும் இத்தீயில் இரையாகின்றது. செருக்கு, பேராசை, அகந்தை, ஆகியவை ஆட்சி செய்கின்றன. மனவெழுச்சிகள். நம்மை மூழ்கடித்து விடுகின்றன. இம்மையையோ, மறுமையையோ, நாம், நினைத்தல் இயல்வதில்லை. ஐவகையான குற்றங்கள், மென் மேலும் குற்றங்களைச் செய்ய நம்மைத் தூண்டுகின்றன, இக்குற்றங்களுடையவன், அமைதியை அடைய இயலாது. குற்றங்களின் ஆட்சிக்குட்பட்டவன் இறைவன் திருநாமத்தின் பெருமையை மறக்கின்றான். காமம் என்னும் போதை வயப்பட்டவன், மனவெழுச்சிகட்கு அடிமையாகி, நல்லது எது, தீயது எது என்று பிரித்தறியும் ஆற்றலை இழக்கின்கின்றான்.

கபீர் கூறுவது: ''காமம், வெகுளி, ஏமாற்றம் முதலியனவற்றால், நான் சிந்தையை இழந்து, பலகாலம் வீணே கழித்து விட்டேன்; புறங்கூறுதலிலே, எனது வாழ்வு கழிந்துள்ளது. இறையின் நாமத்தை மறந்தவனானேன்'' மனவெழுச்சிகளை அடக்காமல், கட்டுப்படுத்தாமல், ஒடுக்காமல் இறைவனை உணர்தல் யாங்ஙனம்.

பணிவுடைமையைப் போற்றினோர், மகிழ்ந்து வாழ்வார்கள் செருக்கு அடைந்தோர் பலர். தமது செருக்குக் காரணமாக தரைமட்டமாக்கப் பெற்றுள்ளனர். செல்வமுடையோன், தனது செல்வம் காரணமாக செருக்குக் கொள்

கிறான். நிலமுடையோனும் இவ்வாறே பெருமை கொள்கிறான். உடலழகில் செருக்குக் கொள்வோனும் நோய்க்கிடமாகி நலிகின்றான், இறையருளால் எவனது உள்ளத்தில் பணிவு இடம் பெறுகின்றதோ, அவன் இம்மையில் விடுதலை பெறுவதோடு; மறுமையில் பேரின்பமடைன்கிறான். செருக்கொழித்து, இறைவன் முன்பு வீழ்ந்து வணங்குதல் நன்று. உண்மையான குருவிற்குத் தொண்டு செய்தால் செருக்கு ஒழியும். சற்குரு வாய்க்கப் பெற்றாலன்றி, செருக்கு நம்மை விட்டு நீங்காது. படைக்கப்பெற்ற நாம் எதைக்கொண்டு செருக்கு கொள்ளுதல் கூடும்? படைத்தோன் ஒருவனுக்கே கொடுக்கும் திறன் உண்டு. நாம் அனைவரும். அவனை நோக்க இரப்பவர்களே ஆவோம்.

தீமைகளுக்கெல்லாம் பிறப்பிடம் வீண்மையாகும் வீண் ஆரவாரத்தால் வாழ்விழந்தோர் பலராவார். தன்னை மதித்து பிறரை இழித்துக் கூறுபவன், நடப்பவன், நரகம் புகுவான் அவர்களது எண்ணம், சொல், செயல் யாவுமே செருக்கினால் விளைந்தவையாகும்.

செல்வ செழிப்பால் பகட்டான வாழ்க்கை வாழ்வோரால் நமக்கு யாது பயன்? முறையில்லாத முறைகளால் தீய வழிகளால், ஈட்டிய செல்வத்தால் நாம் பெறும் பயன் யாது? உலகத்தில் நாம் பெறும் செல்வமனைத்தும் நிலையற்ற மூலதனமாகும். எத்தருணத்திலும் இழக்க நேரிடலாம் ஒருவனுக்குத் தான் சேமித்து வைத்த செல்வமே நஞ்சாகின்றது. இறுதியில் அவனைக் காப்பது செல்வமன்று இறைவனின் புகழை ஓதுவோரது குடிசை புனிதமானது. இறையை மறந்தவரது மாளிகை பயனற்றது. பெருஞ் செல்வம் படைத்தாலும், நிலையான அமைதியைப் பெற இயலாது.

மாயையின் ஆட்சிக்குட்பட்டோர் மாயையினாலே அழிவார்கள். குருநானக் கூறுவது; "குருவின் அருளால் இறைவனிடத்து அன்பு மீதூரப் பெறுகின்றவன் மாயையின் இடையே இறைவனைக் காண்பான்." இறையிடத்து மாறாத பக்தி உடையவன், மாயையினால் மயக்குறான். மாயையின்

இயல்புகள் இத்தன்மையன என்று அறிவான், இறைவனின் இரக்கத்துள்ளானேன் - அவனது அடியார் கூட்டத்தினுள் வசித்து, மாயையை எளிதில் கடக்க இயலும். மாயையினுடைய ஆட்சிக்குட்பட்டவன் எளிதில் அதன் பிடியினின்று மீள இயலாது. மாயை கடலனையது; அதன் ஆழத்தை எளிதில் காண இயலாது. கனவு போன்று ஒருவனை மாயை மயக்கும். இறைவனை நாளும் ஏத்துவோர், மாயையின் பிடியினின்று தப்புவர். பேராசை, காமம், செருக்கு ஆகிய குற்றங்களைப் புரிபவர், மாயையின் பல்வேறு மயக்குகளில் ஈடுபடுவோராவர். இம்மயக்குகளில் ஆழ்ந்த பெண் வழிதவறுகிருள், அறியாமையால் அல்லலுறுகிருள்; தனது கணவனாகிய இறைவனை மறக்கின்ருள்; மனத்தைப் பல்வேறு திக்குகளில் அலைக்கழிப்பது மாயை, மாயையினல் சிதறுண்ட மனம், பல தொல்லைகளுக்கு உட்படுகின்றது. மாயையினின்று நம்மைக் காத்துக் கொண்டால் அன்றி நாம் உய்தல் இயலாது, இறைவனின் திருநாமமே மாயையெனும், கடலினுள் நீந்த உதவும் புணையாகும். இறைவனிடத்து இறைஞ்சி, மாயையைக் கடத்தல் வேண்டும், இறைவனின் ஆணையின் வண்ணம் வாழ்பவன், மாயையினல் ஏமாற்றப்படான். காமம் என்னும் ஈட்டி அவன் மீது பாயாது. மாயை என்ருல் யாது? எவ்வெவ் செயல்கள் மாயையின் பாற்படும்? இன்பதுன்பங்கட்கு கட்டுப் பட்டவன் அகந்தை கொள்பவன் மாயையினல் பிணிப்புற்ருேன் ஆவன் இறைவனின் திருநாமத்தை இடையருது எண்ணுவோர். மாயையின் நிலையற்ற தன்மையை உணர்வார்கள். மேகங்களின் சாயையாக, பெருகிவரும் வெள்ளமாக, வைக்கோல் பிரியின் நெருப்பாக மாயையை உணர்வோர், இறைவனை உணர்ந்தோராவர்.

இவ்வுலகில் காண்பன யாவற்றையும் நாம் ஒரு நாள் விடுத்துச்செல்ல வேண்டி வரும். உலகு மாற்றம் கொள்வதை, அது அழிந்து, மாறி மாறி வருவதைக் கண்கொண்டு காணலாம், மாயை என்பது நிலையற்றது, நிலையான பரம்பொருளைப் பற்றினல், நிலையுதல் இல்லாத மாயையைக் கடக்க இயலும். இப்பிரபஞ்சம் முழுமையும் தாற்காலிகமாக விளக்குவதே ஆகும், நிலைபேறற்றதாகும்.

புகைமண்டலம் நம்மைச் சூழ்ந்தால் காட்சி அமையாது. மாயையாகிய புகை யாண்டும் பரவி நிற்றலால், காட்சி அமைவதிலது. உயிர் நீத்த உடலை, சவத்தை எவரும் முற்றத்தில் வைத்திருக்க விரும்புவதில்லை. பல வாசனைத் தைலங்கள் இட்டுக்காக்கும் இவ்வுடல் சாம்பலாவது திண்ணம். இவ்வுலகில் உள்ளன யாவும் நிலையற்றவை யாதலால், இறைவனிடத்து நான் வேண்டத்தக்கது யாது? யாவும் நிலையற்றன ஆதலால் நாம் எப்பொருளினிடத்தும் பற்று வைத்தல் ஆகாது. உலகிடையே திறமைமிக்க வாணிபஞ் செய்பவர்களைக் காண்கிறோம் அவர்கள் இலாபம் பெறுகின்ற வாணிபத்தையே மேற்கொள்வர். இதேபோல் நாமும் நமக்கு ஆன்மலாபம் தருவனவற்றையே போற்றுதல்வேண்டும். இறந்தபின் நம்மைத் தொடர்வன எவையோ அவற்றைச் செய்தல்வேண்டும். அறச்செயல்களே நம்மை மரணத்திற்குப்பின் தொடர்வனவாகும். மரணத்தினின்று யாவராலும் தப்புதல் இயலாது. கதிரவனின் செலவு, நாட்களாகக் கணிக்கப்பெறுகின்றன. கழிகின்ற ஒவ்வொரு பகலும் இரவும் நமது வாழ்நாட்களில் கழிந்த பகுதியாகும். எஞ்சியிருக்கும் பகுதியும் விரைவில் கழிய இருப்பதாகும். ஆதலால், விழிப்புடன் நமது குருவின் ஆணையின் வண்ணம் நாம் ஒழுகுதல் வேண்டும். தோன்றிய இவ்வுடல், மண்ணுவது உறுதியாகும். பற்கள், கால்கள், கண்கள், காதுகள் இவை நாளடைவில் பழுதாகி, உடல் வருந்துகின்றது. நமக்கு உற்ற துணையாக விளங்கியவர்கள் மறைகின்றனர். சரிந்துவிடும் இவ்வுடலை நிலையானது என்று எண்ணி மயங்குதல் கூடாது. நிலையாத இவ்வுடலை நிலைபேறுன இல்லம் என்று எண்ணி, வீண்போதல் கூடாது.

மன்னன் செல்வம்மிக்கவன், வறியோன் ஆகிய எல்லோரும் இவ்வுலகில் என்றென்றும் நிலைத்திரார். கனவனைய இவ்வுலகினிடத்துப் பற்று மிகவும் வைத்திருக்கின்றோம் நமது வாழ்வு முழுவதும், உலகின்பங்களை நாடி கழிகிறது. இரவு உறக்கத்தில் கழிகிறது. பகற்போது, உண்பதில் கழிகிறது. அரும்பொருளாகிய இவ்வாழ்வை அற்பமான ஆசைகட்காக, நாம் இழக்கின்றோம். மாயையின்

வயப்பட்டோர், வாழ்நாளை மறக்கின்றனர். மனிதன் பிறக்கின்றான், வளர்கின்றான், பின்னர் மடிகின்றான். உலகு முழுவதும், 'மாற்றங்கட்குட்பட்டு மறைந்து வருவதைக் கண்கூடாகக் கண்டும், இவ்வுடலை எனது உடல் என்று நாம் சொல்லிக்கொள்ள கூசுவதில்லை. குருநானக் கூறுவது இவ்வுலகு புகையினாலாகிய மாளிகை என்று "நான் தேடிக் கண்டு கொண்டேன்". மற்றோரிடத்தில், "இரவு தங்கி விடியற்காலை செல்லும் விருந்தினனைப்போல, நாம் இருக்கின்றோம், நமது புறப்பாடு எப்போதும் அமையலாம். இந்நிலையில் வீட்டைப்பற்றி நாம் மிகுந்த அக்கறையாக இருப்பது ஏன்? இன்பப் பூங்கா என்றுமிராது." நமது காட்சியிற் அமைவன யாவும் நிலையுதல் இல்லாதன; நிலைத்தது என்றுமுள்ளது பரம்பொருளே! இறைவனது நாமத்தை இடையறாது ஓதுதலினால், நமது வாழ்க்கைப்பயணம் இனிதாக அமையும், மாயையினின்றும் நாம் கடக்கலாம்.

சுவர்க்கம், மேலுலகம், மோட்சம் என்று பலவாறாகப் பேசப்பெறும், மறுமை வாழ்வு பற்றி குருநானக் கூறுவது: "மேலுலகம் என்பது, தூயோர் வாழுமிடமாகும்". இறைவனின் திருநாமம் எங்கெங்கே ஓதப்பெறுகிறதோ, அவ்விடமெல்லாம் மேலுலகமாகும். இறைவன் நம்மை எங்கு இருத்துகின்றானோ, அங்கே நாம் மறுமை வாழ்வைக் காண வேண்டும். இறைவனாகிய தலைவனை நினைவோர், நரகத்தில் இடர்படமாட்டார்கள். தூயோர், நரகத்தையும், மோட்சத்தையும் ஒருங்கே கண்டனஞ் செய்கின்றனர்; நாம் நாட வேண்டுவது, குருவின் அருளாகும்.

மூடநம்பிக்கைகள் அனைத்தையும் விட்டு ஒருவனாகிய இறைவனிடத்து மாறாத அன்போடிருக்க வேண்டும். மூடநம்பிக்கைகளினின்று விடுபட்டவன், மரணத்திற்கு அஞ்சான் உண்மையான குரு தனது சீடனுக்கு இறைவனது திருநாமத்தை நல்குகின்றான். இந்த நாமம் கோள்களின், கிரகங்களின் தீய செயல்களினின்று நம்மைக் காக்கும். மூடர் நாகரீகமற்றவர், வாரநாட்களையும், பிற சந்திரனுக்குரிய நாட்களையும் தொழுவார்கள். நல்ல நேரம் எது? நல்ல நாள் எது? என்று கணிக்க முற்படுகிறோம். இறைவன், நல்ல நேரத்தின்

விளைவுகளை எல்லாம் கடந்தவன் என்று நாம் மறந்துவிடு கின்றோம், நன்னிமித்தமும், தீய நிமித்தங்களும், இறையை வழிபடாதவனைத் தொல்லைகட்கு உட்படுத்தும்.

தீய புத்தேளுருக்கள் காமம், வெகுளி, செருக்கு ஆகிய வற்றின் பிடியினின்று தப்பாமல், மாயையினுள் ஆழ்ந்தவர் களே யாவர். காமம் முதலியனவே தீய ஆற்றல்களாகும், இவற்றிற்கு அயலாக வேறு தீய ஆற்றல்கள் இல என்று குருநானக் கூறுகிறார். இறையிடத்து அன்போ, இறை வனுக்குத் தொண்டோ பூண்டு ஒழுகாதோர், தீய ஆற்றல் களனையர்; தீய செயல்களைப் புரிபவனை, புத்தேளுரு எனலாம். தலைவனாகிய இறைவனை மறந்தோராவர்.

இறந்தோர் பக்கலில் அமர்ந்து ஏன் நாம் அழுதல் வேண்டும்? நாம் இழந்தவர்களை நினைந்து அழுகின்றோம். இறந்தோர் நமது அழுகையைக் கேட்க மாட்டார்கள். வாழ் வோரே கேட்பவர்கள். பிறந்தவன் இறப்பான் ஆதலால், துயருழத்தல் ஏன்? இறைவனின் சித்தப்படி யாவும் நடை பெறுதலால், நாம் இழப்பை நினைந்து அழுதல் எதற்காக? ஆன்மா என்றும் உள்ளது; என்றும் இருக்கப்போவது. ஆதலால் நாம் இறந்தவர்களைக் குறித்து அழுதல் தகாதது. அழுதலால் பெறத்தக்கப் பயன் யாது? இத்தகைய பய னற்ற செயல்களை நாம் தவிர்க்க வேண்டும்.

இறைவன் தனது பெருங்கருணையினால் உனக்கு அருளி யுள்ளவற்றையே வியத்தகு செயல்களாக நீ மதித்தல் வேண்டும். நீ சற்றும் எதிர்பாராத நிலையில் உனக்கு இறைவன் தருகின்ற போது அதை வியத்தகு செயல் என்று கருதுக வியக்கத்தக்க செயல்களைப் புரிகின்ற ஆற்றல்களைப் பெற நீ முயற்சிப்பது தூயதல்லாத பற்றாகும். இத்தகைய ஆற்றல்களை நீ உனது இதயத்தினின்றும் நீக்கி விடுதல் வேண்டும். இல்லையேல் இறைவன் திருநாமத்தை மறக்க நேரிடும்

இறையை வழிபடுவோர் யாவரும் இறையால் காக்கப் பெறுவர். ஆனந்தத்தின் நிலைக்களம், இறைவனின் திருநாமமே ஆகும். இத்திருநாமம், வழிபடுவோர் உள்ளத்தில் தங்கி

யிருக்கிறது. குருநானக், இறைக்கும், திருநாமத்திற்கும் வேறு பாடிலது என்கின்றார். புனிதன் ஆகிய இறைவனை இடையறாது நினைந்து புகழ்தலால், நாமும் புனிதராவோம். எவனொருவனது உள்ளத்தில் இறை தங்குகிறதோ, அவன் உயர்ந்தவருள் எல்லாம் உயர்ந்தவன், தூயோருள் தூயோன் ஆவான். என்றுமுள்ள, எங்கும் நிறைந்த இறையை உணர்ந்தோர் யாண்டும் மதிக்கபெறுவர். இறையைப்பற்றி அறியாதவன் செத்தவருள் ஒருவராகக் கருதப்பெறுவான். இறைவனாகிய தலைவனுக்கும், அவனது பக்தர்களுக்கும் வேறுபாடு கிடையாது. கடலலைகட்கும், அவற்றுள் எழுகின்ற நுரைக்கும் வேறுபாடில்லாதது போல, இறைக்கும், அவனை வழிபடுவோருக்கும் இடையே வேறுபாடு கிடையாது. பிறிதோரிடத்தில், பொன்னிற்கும், பொன்னினாலான அணிவகைகட்கும் வேறுபாடு, பொருட்தன்மையில் கிடையாது; தோற்ற அளவில் தான் உண்டு என்று குறித்து, பக்தனும், இறைவனும் ஒரே நிலையினர் என்று ஆதிகிரந்தத்தில் குறிப்பிடுகின்றனர்.

சீடன், துன்பத்தைப் பொருட்படுத்தமாட்டான். துன்பம் வந்து அவனைத் தாக்கினாலும், மனந்தளரான். இன்பம் வந்து அவனை அடைந்தாலும், மகிழான். அச்சம் ஏதுமின்றி வாழ்வான். இத்தகைய சமநிலை வாய்த்தவன் ஓடையும் பொன்னையும் ஒக்கவே நோக்குவான்; எவரைப் பற்றியும் குறைகூறமாட்டான்; எதனிடத்தும் பற்று வையான்; பேராசை, மனவெழுச்சி, வெகுளி போன்ற குற்றங்களினின்று நீங்கியவன்; குருவின் ஆசியைப்பெற்றவன். நீர், நீரில் கலத்தலைப்போல, இறைவனோடு கலப்பான் என்று குருநானக் பக்தனின் இயல்புகளை நன்கு தெரிவிக்கின்றார். பக்தன், விடியற்காலையில் எழுதல் வேண்டும். எங்கும் நிறைந்துள்ள இறைவனது திருநாமத்தைத் தியானித்தல் வேண்டும். நீராடி விட்டு அக அழுக்குகளை நீக்குகின்ற முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். குரு அவனுக்கு உணர்த்தியவாறு இறைவன் திருநாமத்தை ஓதுதல் வேண்டும். இவ்வாறு ஓதுதலால் அவன் தனது பாவச் செயல்களை நீக்க இயலும். பின்னர் கதிரவன் எழுகின்றபோது, குரு

உணர்த்திய பாடல்களைப் பாடலாம். எப்போதும் இறைவன் உடன் இருக்கின்றான் என்ற உணர்வை அவன் பழகிக் கொள்ளுதல்வேண்டும். அவன் எந்த வேலையில் ஈடுபட்டாலும், இவ்வுணர்வு நீங்குதல் ஆகாது. இறைவனை இமைப்போதும் மறவாதவன் இறையருளை பெறுகின்றான். அவன் இடையுறாது திருநாமத்தை ஓதுதலால், பிறரையும் ஓதும்படித் தூண்டுகிறான், குருவின் பார்வையிலே வாழ்கின்றவன், அவரோடு நெருங்கியிருப்பவன்; இறைவனின் ஆணையின் வண்ணம் ஒழுகவேண்டும். அவனது செயல்களில் செருக்கு இருத்தல் ஆகாது.

சீக்கிய சமயம், அகநோக்குடையது, அகவாழ்வை தூய்மைப்படுத்துவது, நன்னெறிப்படுத்தி, இறையுணர்வைத் தூண்டுவதாகும். இம்மானிட வாழ்க்கை அமைதல் அரிது என்பதை நன்கு எடுத்துக்கூறி, வாய்ப்பினை இழக்காமல், நாம் இறையை உணரவேண்டும். பல பிறவிகள் எடுத்த பின்னரே மனிதப் பிறவி ஒருவனுக்கு வாய்க்கின்றது. ஆதலால் இவ்வரிய வாய்ப்பினை இழக்காமல் பயன் கொள்ளுதல் வேண்டும். இப்பிறப்புதான் நமக்குக் கிடைத்துள்ள ஒரே வாய்ப்பாகும். ஆதலால், இறைவனைத் தியானித்தல் வேண்டும். அகத்தே, இறைவனைக் காண வேண்டும். இப்பிறப்பில் ஒருவன் இறைவனை அடையாவிடில், அவனது ஏனைய செயல்கள் யாவும் பயனற்றனவாகும். இம்மனித வுடல் அமைதல் அருமையாகும். இவ்வமைப்பு கொண்டு இறையை உணர்தல் வேண்டும். இம்முயற்சியை விடுத்து பிற முயற்சிகளை மேற்கொள்ளுதல் வீணாகும். தூயோர் உறவை நாம் வருந்திப் பெறுதல் வேண்டும்; அவர்களிடையே வாழ வேணடும். இறைவனைத் தியானம் செய்தல் வேண்டும். பிறவிப் பெருங்கடலைக் கடக்கின்றதிலேயே நமது நாட்டம் அமைய வேண்டும். புலனின்பங்களிலும், பிற இன்பங்களிலும் கருத்தைச் செலுத்துதல் ஆகாது.

வாழ்க்கையின் முதற்பகுதி, பயனற்ற ஆசைகளை நிறைவேற்றும் முயற்சிகளில் கழிகிறது. இரண்டாவது பகுதி, ஆழ்ந்த உறக்கத்தில் கழிகிறது. மூன்றாவது பகுதியும் வீணே கழிகிறது. நான்காவது பகுதியில், மரணம்

நிகழ்கிறது. இவ்வுடலையும், வாழ்க்கையையும் நமக்குப் பெருங்கருணையோடு நல்கிய இறைவனை நாம் மறந்து, பிற செயல்களில் ஈடுபட்டு வறிதே காலத்தைக் கழிக்கின்றோம்.

சீக்கிய சமயத்தின் சிறந்த கூறுகளாவன: இறைவன் ஒருவனே, என்பது அடிப்படையான கொள்கை. மனிதனின் குறிக்கோள் இறையை அடைதலாகும். இவ்வாழ்க்கையின் அருமையை உணர்ந்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மனிதனிடத்து அழியாத கூறு, அவனது ஆன்மாவாகும். இவ்வான்மாக்கள் பலவாகும். நாம் வாழ்கின்ற உலகு, பொய்யன்று, மாயையின் மயக்குகளினின்று நாம் நீங்குதல் வேண்டும். நமக்கு இறைவன் அளித்துள்ள உணவை மற்ற ஏழை எளியவர்களோடு பகிர்ந்துண்ண வேண்டும். இறை அருவமாதலால். அவனது திருநாமத்தையே நாம் ஓதுதல் வேண்டும். திருநாமத்தின் மகிமை, வைணவச் சமயத்திற்கு அடுத்தபடியாக சீக்கியத்தில் நன்கு வற்புறுத்தப்பெறுகிறது. விக்ரக வழிபாடு கண்டிக்கப் பெறுகிறது. ஒருவனது ஒழுகலாறு சிறப்பாக அமைய வேண்டும். பேராசை, காமம், களவு, செருக்கு இவை ஒழிந்த வாழ்வே தூயதானது. மூட நம்பிக்கைகளைக் கொள்ளுதல் கூடாது. அகமும், புறமும் ஒத்திருக்க வேண்டும். அகம் தூயதாக இல்லையானால், புறத்தே மேற்கொள்ளப்பெறும் வழிபாடுகள், கோலங்கள் யாவும் பயனற்றன. இல்லற வாழ்க்கையை ஒருவன் துறக்க வேண்டுவதில்லை. இல்லில் வாழ்ந்துகொண்டே, அவன் தனது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வையாக ஆற்றி, ஒருபோதும் இறையை மறவாது போற்றி அவனது திருநாமத்தை இடையறாது ஓதுதல் வேண்டும். குருநானக் வகுத்தது, எளிய நெறியாகும். கடுந்தவங்களை அவர் கடிந்தார். சமயத்தின் உட்கிடையை இன்னது என்று உணர்த்தினார்; புறச்சடங்குகளில் சமயத்தின் உயிர்ப்பு விளங்கவில்லை என்பது அவரது கருத்தாகும்.

இறைவன் கடந்தவன், மேலானவன், உயர்வற உயர்ந்தவன் என்னும் கருத்துக்கள் எந்த அளவிற்கு வற்புறுத்தப் பெறுகின்றனவோ அந்த அளவிற்கு அவனது உள்

ளார்ந்த, கலந்த நிலையும் வலியுறுத்தப் பெறுகின்றன. இக் கருத்து, ஹிந்து சமயத்தைத் தழுவியதே ஆகும் இறை யொருமைக் கருத்து, இஸ்லாமிய கருத்துக்களின் விளை வாகும். ஏனைய சமயக் கூறுகளில் சிலவும் இஸ்லாமிய சமயம் விரைந்து பரவி வந்த காரணத்தால் நேர்ந்தன எனலாம். ஆனால் குருநானக் அவர்கள், ஹிந்துவாகப் பிறந்த காரணத்தால் ஹிந்து சமயத்தை உயர்வாகக் கரு தினார் என்று கூறுதல் இயலாது. இதே போல் இறை யொருமைக் கொள்கையை ஏற்று சிறப்பாக வற்புறுத்திய காரணத்தால், இஸ்லாம் சமயத்தை உயர்வாகக் கருதினார் என்றும் கூற இயலாது, இரு பெருஞ்சமயங்களிலிருந்த குறைகளைக் களைய முற்பட்டார். சிறப்பாக சமய நெறி அக வாழ்வைப் பண்படுத்துவது என்பது, குருநானக்கின் கருத்தாகும். இப்பிறவியின் அருமை நோக்கி, விழுமிய பயனாகிய இறையுணர்வு கைவரப் பெறுதலே சிறந்த பயன் என்று வலியுறுத்தினார். இப்பயன் எய்தும் வகையினையும் நன்கு விளக்கினார். சீக்கிய சமயம் தோன்றிய காலத்தில் இருந்த சூழ்நிலை வேறு. இன்று, இருபதாவது நூற்றாண் டில் எங்கும் சமயப்பொறை பேசப்பெறுகிறது. ஒல்லும் வகை போற்றப் பெறுகிறது. ஆனால் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர், ஹிந்து, இஸ்லாம் ஆகிய இருபெருஞ்சமயத்தவ ரிடையே நேர்ந்த பூசல்கள் பலவாகும். இந்நிலையில், குரு நானக், சமயப்பொறையை வாயளவில் வற்புறுத்துவதை விட, இருசமயங்களிலுள்ள குறைகளைக் களைந்து, அன்பின் அடிப்படையில் இயைபுபடுத்தி, இகல் நீங்கி வாழும் வகை வாழ்ந்து காட்டினார். இன்னும், பெரிதும் மாறுபடா மல், சீக்கிய சமயம் நம்மிடையே நிலவி வருவது, இச் சமயத்தவரிடையே உள்ள கட்டுப்பாட்டை நமக்குப் புலப் படுத்துகிறது. சீக்கிய கருத்துக்கள் யாவராலும் ஏற்று ஒழுகுதற்குரியன.

## குருநானக் கண்ட அறவாழ்வு

### அற – இயல்

நற்பண்புகளை நாம் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். நாம் இவற்றைப் போற்றி ஒழுகுதலோடு சில

மிக்கவரைச் சார்ந்து ஒழுகுதல் நமக்குப் பெரும் பயன் விளைக்கும், தூயோரது அடி — மண் கிடைக்கப் பெற்ருல் தான், அல்லும் பகலும் மகிழ்ச்சியாயிருக்க இயலும் என்று நானக் கூறுகிருர். வாழ்க்கைக்கு நற்பண்புகள் தேவை. இறைவன் பக்தனை ஏற்ருல்தான் அவன் பெருமையடைந் தவனுவான். பிறரை வஞ்சித்து வாழ்வார் அகத்தூய்மை உடையராதல் யாங்ஙனம்? இறைவன் நல்லோரை வாழ் விக்கின்ருன்; தீயோரை ஒறுக்கின்ருன்.

"நீ, விதைத்ததை அறுவடை செய்வாய். உனது உடல், உனது செயல்களின் விளைவு ஆகும்." என்பன போன்ற ஹிந்து சமயத்தின் உயிர்நாடியான, கருமக் கொள்கை, நானக் அவர்களால் ஏற்கப்பெறுகிறது. நமது செயல்கள் தூயனவாதற்கு சிறந்த வழியை நமக்கு நானக் வகுக்குகிருர். இறைவனை மறவாதிருந்தால், நமது செல்யகள் தூய்மை எய்துதல் திண்ணம். இறைவனை மறந்து புரியும் செயல்கள், பிணத்தை அலங்கரிப்பது போன்றதாகும் என்று நானக் கூறுகிருர். நாம், நமது வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் கண்டு துன்புறுகிரேம்; முணுகுகிரேம், இவ்வாறு வருத்தப்படுவது பொருந்தாது. ஏனெனில் நமது துன்பங்கட்கு நாமே காரணமாவோம், நமது செயல்களைத் திற்கும், நாம் பொறுப்பு ஏற்க வேண்டும். மனமெனும் நிலத்தில், நற்செயல்கள் என்ற விதைகளை ஊன்றுங்கள். இறைவன் திருநாமம் என்னும் நீரை அந்நிலத்துள் பாய்ச் சுங்கள். நல்ல விளையுளை எதிர் நோக்கலாம். நற்செயல்க ளற்ற வாழ்வு, வீணன வாழ்வாகும். தீயனவற்றைத் தவிர்த்து நல்லனவற்றையே மேற்கொண்டு ஒழுகுங்கள். நற்செயல்களை நினைந்த மாத்திரத்திலேயே செய்ய முற் படுங்கள், தீயனவற்றைத் தள்ளிப்போடுங்கள்.

நற்செயல்களின்றி வழிபாடு அமையாது. இறைவனைப் புகழ்ந்தாலன்றி செயல்கள் புனிதமுரு! தெய்வத்தைப் பற்றிய அறிவு நற்செயல்களால் வளர்ச்சி அடைகிறது. நமது செயல்கட்கு ஏற்ப நமக்குத் தீர்ப்பு வழங்குவதென்ருல் நாம் உய்வதரிது. இறைவனின் கருணையே நம்மைக் காக்

கின்றது. தூயோரது வாழ்க்கையைப் பின்பற்றினல் இறையின் கருணை நமக்குக் கிட்டும். பாபிகளில் பலர், இறைவனைப் பணிந்து திருந்தித் தூயோராக விளங்கியுள்ளனர்.

## நன்னடத்தையின் இன்றியமையாமை

உள்ளொன்று வைத்து, புறமொன்று ஒழுகாமை வேண்டும் என்பதை நானக், அடிப்படை அறமாக வகுக்கின்றார். ஒருவன் துறவியைப்போல் உடுக்கலாம். ஆனால் அவ்வுடை, அவனது அகத்தை மறைக்காது. அகம் தூயதாக அமையாவிடின், புறக்கோலம் பயனின்று, புராணங்களைப் படித்தலால் யாது பயன்? இறைவனை வழிபடாது பசித்தோர் பசியினை நீக்காது. காமம், கோபம், பொறாமை, புறங்கூறுதல் போன்ற தீய செயல்களைத் தவிர்க்காது. நாம் மேற்கொள்ளும் செயல்கள் பயனற்றனவாகும். இதயம் தூயதாக விளங்காமலிருக்க ஒருவன் மேற்கொள்ளும் செயல்கள் பயன்ற்றன, போலியான புற வாழ்க்கை வாழ்பவன் இறைவனை ஒருபோதும் அறிய இயலாது; உணரமாட்டான். நீர்கொண்டு உடலைச் சுத்தம் செய்யலாம், ஆனல் உள்ளம் ஆசைகளால் நிறைந்து விளங்குமானல், புறத்தூய்மையால் விளையும் பயன் யாது? போலி வாழ்க்கை வாழ்பவன் உண்ணு நோன்பு நோற்பதால் பயனில்லை. யோகியின் உடையில் உலவுதலால், வீடுபேறு அடைய மாட்டான். யோகியை அவனது உடையைக்கொண்டு நாம் அறிவதில்லை. அவன் தூய ஆடையை அணியலாம்; அல்லது அழுக்கேறிய ஆடையை அணியலாம்; அவனது செயல்களே நமக்கு அவனது இதயத்தைப் புலப்படுத்தும். உள்ளத்திலே வஞ்சம் நிலவுமானல், உரை இனியதாக அமைந்தாலும் பயனில்லை. இதயத்தில், வஞ்சம் அனைய எண்ணங்கள் நிலவ, புனித யாத்திரையால், முறை முறையே தொழுதலால் பயன் ஏதும் கிட்டாது.

புனித மந்திரங்களை வாய் முணு முணுக்க பொய் பேசுபவன் குருவை அடுத்து, தூய வாழ்வு அமைய ஆசி பெறுதல் வேண்டும். வேதங்களையும், புராணங்களையும் படித்தலால் யாது பயன்? இது கழுதை குங்குமம் சுமந்த

கதையன்றோ? இறை நாமத்தின் உட்சிறப்பை உணர்ந்தாலன்றி பிறவிப் பெருங்கடலை நீந்துதல் இயலாது. நாம் சொல்லிலே நல்லவர்களாகப் புற நிலையில் வாழ்கின்றோம். நமது செயல்கள் தீயனவாக அமைகின்றன. நமது மனம், கருமை சூழ்ந்து, அகத்தே விளங்குகின்றது; ஆனல் புறத்தே, வெண்மையாகக் காட்சித் தருகின்றது. இறைக்குப் பணி செய்வோரைப் பார்த்து, நாமும் அவ்வாறு செய்வது போல் நடிக்கின்றோம். இத்தகைய, அக-புற, முரண்பாடு நீங்குதல் வேண்டும். அகமும் புறமும் ஒத்து அமைதல் வேண்டும். அகந்தூய்மையே குறிக்கோளாக விளங்குதல் வேண்டும்.

புறங்கூறுதலால் யாது பயன்? புறங்கூறுபவனை, இனங் கண்டு எள்ளி நகையாடுவார்கள். தூய்மையற்றவனுக்குக் காப்பு ஏது? புறங்கூறுபவனுக்குப் புகழேது? எவரையும் பழித்துப் பேசுதலாகாது. பழி கூறுவதனல், பகைமை விளையும். நாம் அல்லும் பகலும் பிறரது குறைகளையே கூறுகின்றோம். நமது குறைகளை உணர மறுக்கின்றோம். ஒருவன் முன்னிலையில் இனிய உரைகள் கூறி, அவனுக்குப் பின்னே, தூற்றுகின்றவன் இதயம் தூயதாகாது; இறைவனிடமிருந்து பிரிந்தவன் ஆவான். நாம் கற்றறிந்தோராக விளங்க வேண்டுமென்றால் புறங்கூறுதலை, குறைகூறுதலைத் தவிர்த்து, அழுக்காறு கொள்ளாது இருக்க வேண்டும், இலதேல் நாம் மன அமைதியை இழக்க நேரிடும்.

பிறருக்கு உரியதை நாம் மறுத்தலாகாது. அவருக்கு உரியதைக் கொடுத்து அமைதியைத் தேடுதல் வேண்டும். பொய்க்கணக்கு எழுதி, நேர்மையற்ற முறையிலே பொருளீட்டினல், நரகத்தின் தீக்கு இறையாவோம் என்று நானக் கூறுகிறார்.

களவு செய்தல் தகாதது. பொருளிழந்தவனுக்கு அப் பொருளை நாம் திருப்பிச் சேர்த்துவிட்டு இறைவனது ஆணைப்படி ஒழுகுவோமேயானல், நமக்கு நலம் பல விளையும். பிறருக்கு உரியதை நாம் பறித்தல் தவறு.

ஹிந்துவிற்கு மாட்டிறைச்சி ஒவ்வாதது. முஸ்லீம் களுக்குப் பன்றியிறைச்சி ஒவ்வாதது. இதேபோல பிறருடைமையை நாம் வெளவுதல் தீதாகும். களவு செய்பவனது வழிபாட்டை புகழ்ச்சியை இறைவன் ஏற்கமாட்டான். திருடன், ஒழுக்கக்கேடுடையவன், சூதாடுபவன், ஆகிய மூவரும் நரகத்தில் இடர்படுவர். திருடுவதால் ஒருவன் பெறும் பொருள் பெரிதானாலும், அவன் உலக மக்களிடையே இழக்கும் பெயர், புகழ், திருப்பிப் பெற முடியாததாகும். பிறர் கொடுக்கும் இலஞ்சத்தை ஏற்று, பொய்க்கணக்கு எழுதுவோன், தன்னை மக்களிடையே தாழ்த்திக் கொள்கிறான்.

ஒழுக்கக் கேடுடையவன் அவமானம் அடைகிறான். மிகுந்த காமத்தோடு, பிறர்மனை நயப்பவன், அழிவான். கடுமையான விடமுடைய பாம்பினோடு துயில்வது போன்றது மாற்றான் மனைவியோடு துயில்வதாகும். ஒருவனுக்கு உரிய மனையாளைப் புறக்கணித்து மற்றொருவன் மனைவியோடு கூடா ஒழுக்கம் புரிவோன், மனச்சான்றைக் கொன்றவனாவான் நல்ல குடும்பத்தில் பிறந்த அழகிய மனைவி வாய்க்கப்பெற்ற ஒருவன், பிறர்மனை நயந்தால், நல்லதையும் தீயதையும் பிரித்துணரும் ஆற்றல் இழந்தவனாவான்; பிறரது செல்வத்தையோ மனைவியையோ நெருங்காதவன், இறைவனுக்கு அண்மையில் என்றுமிருப்போனாவான். தூயோரைப் பழித்து கூறி, கூடா ஒழுக்கம் புரிந்து, ஒருபோதும் இறைவனது புகழைக் கேளாது, பிறரது செல்லத்தைத் தன் பொருட்டு நயந்து, வாழ்வோனது ஆசைகள் ஒருபோதும் அணைய மாட்டா. மேலும் மேலும் கொழுந்துவிட்டு எரியும்.

பொருட்பெண்டிர் தயக்கமின்றி, அறமல்லாத செயல்களில் ஈடுபடுகின்றனர், முறையற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்; முறையல்லாதோரோடு, உடன் வாழத் தலைப் படுகின்றனர். இவர்கள் மானமற்றவர்கள்.

சூது, பொருளிழப்பிற்குக் காரணமாகும். சூதாடுபவன் மிகுந்த கவலைக்குள்ளாகின்றான். சூதாட்டத்தில், திளைப் பவன், தான் சூதில் செலுத்தும் பணத்தை மீட்க இய

லுமோ என்ற அச்சத்தால் அவதியுறுகின்றான். இழக்க இழக்க, சூதில் விருப்பம் வளர்கிறது.

மயக்கம் விளைக்கும் மதுவை ஒருவன் அருந்துதலால், பெருந்துன்பத்திற்கு அவன் உள்ளாவான். மதுவின் மயக்கம் காரணமாக, ஒருவன் பல பாவச் செயல்களைச் செய்ய நேரிடும் என்று குருநானக் எச்சரிக்கை செய்கின்றார். மது அருந்தியவன், தனது நண்பனை, பகைவனின்று பிரித்தறியும் ஆற்றலை இழக்கின்றான் இறைவனை மறக்கின்றான். பின்னர் இறைவனின் தண்டனைகட்கு உட்படுகின்றான்.

எவரிடத்தும் சினம் கொள்ளாதிருங்கள். நமது உள்ளத்தை நாம் அறிய முற்பட வேண்டும். இறைவனது திருநாமம் நமது உள்ளத்தில் நிலைத்து இருக்குமானால் சினமும், வஞ்சமும் விரைந்து அகலும். இறைவனிடத்துக் காதல் பெருகுமானால், சினம், காமம், பேராசை போன்றவை நம்மை நெருங்க மாட்டா, என்று நானக் கூறுகிறார். இவற்றின் ஆட்சியினின்று நீங்க, இறை அன்பு பெருகுதல் வேண்டும். வேதங்களின் தலையாய கருத்து, சினத்தை நாம் ஒழித்தலாகும்.

ஏழைகளை, எளியோரைத் துன்புறுத்துவோன், இறைவனால் துன்புறுத்தப் பெறுவானவான், பிறருக்குத் தீமை செய்ய நினைத்தலாகாது. தீமையை நினையாவிடில், எவரும் நமக்குத் தீமை செய்ய நினைக்கமாட்டார்கள். எவருக்கும் தீங்கு புரிய நினைத்தல் தவறாகும். எல்லோரிடத்தும் இறைவன் இருத்தலால், தீமை செய்ய நினைதல் தகாததாகும். குருநானக் கூறுவது, "எனக்குப் பகைவராகார். எனக்குத் தீமை விளைக்க எவரும் கருதார். எவரும் தீயோரல்லர். குருவிற்குத் தொண்டுசெய்ய விழைகிறேன். எனது தலைவனாகிய இறைவனின் அடிமையாவேன்," அறியாமை வயப்பட்டோரே, பிறரது குறைகளைப் பேசுவர்; பிறர்க்குத் தீங்கு இழைப்பவராவார். அழுக்காறு, பொறாமை முதலியன உள்ளத்தில் இருக்கும் வரை அமைதி ஏற்படுதல் அரிது.

எல்லோரும் தத்தமக்கு நலம் பயப்பதையே நாடு கின்றனர்; பொருள் தேடுகின்றனர். மற்றவர் பொருட்டுத் தியாகம் செய்ய முற்படுகின்றனர். குருநானக் இத்தகைய சுயநலம் மிக்கவரோடு கூடுதல் வேண்டாம் என்கிருர்.

நமக்கு வசதிகள் உளதாகுங் காலத்து, பலரும் நம்மைச் சூழ்கின்றனர். நற்பேறு வாய்க்காதபோது, அல்லலுறும் போது, எல்வோரும் நம்மைவிட்டு நீங்குகின்றனர். எவரும் அணுகுவதிலர். நமது குடும்பத்தினர், நண்பர்கள், உடன் பிறந்தோர் யாவரும் தத்தம் நலன் நோக்கியே நம்மைச் சூழ்கின்றனர். அவர்கட்கு வேண்டுவன கிடைக்காத தரு ணத்தில் நம்மைவிட்டு நீங்குவர். எவனொருவன் தன் னலத்தைத் துறக்கிருனே, அவன் விரும்புவன யாவற்றை யும் பெறுவான்.

பேராவலில், ஒருவன் மூழ்கி, தனக்கு மரணம் என் றேனும் நிகழலாம் என்பதை மறந்துவிடுகிருன். நிலையுதலில் லாதனவற்றுள், பேராவல் காட்டுவதன் விளைவு இதுவாகும். இறைவனின் பொருள்சேர் புகழைப் பாடுவோமேயானல்; பொருமையினின்று நீங்குதல் இயலும். பேராவலின் காரண மாக, சொகுசான, இன்பம் நிறைந்த வாழ்வை ஒருவன் விரும்புகின்ருன். கோபமும், செருக்கும் சேருகின்றன. இவற்ருல் மனஅமைதியை இழக்கின்ருன். காமம் மிகு பொருள் வேட்கை, இவற்றின் ஆட்சிக்குட்பட்டோர் எவ ரேனும் இறைவனை அடைந்ததுண்டா? என்று நானக் கேட்கிருர். ஆதலால், காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும் நமக்கு நோய் செய்வனவாகும். இவற்றைத் தவிர்த்த நிலையிலேதான் அமைதி கிட்டும். பேராவலின் வயப்பட்டோன், தனக்கு உகந்தது எதுவென்று அறியும் ஆற்றலை இழக்கின்ருன். ஆவல், என்றும் பெருகும் இயல் பினது, அது எளிதில் தணியாது. உலகப்பொருட்களில் நாட்டம் மிகுந்து, அவற்றை அடைய ஆவல் கொள்கின் றவன், எளிதில் மீள்வதில்லை. அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும், பெருமையில்லை. இறந்த ஒருவனது செல் வத்தை விரும்பி, செயல்களில் அச்செல்வத்தைப் பெறும் வகையில் ஈடுபடுவோன், தனது பொன்னன வாழ்க்கையை

வீணாக்கியவனாவான். ஒருவனது கண்ணொன்றில் ஒளி குன்றினாலும், நீண்ட ஆயுளுக்காக முயல்கின்றான். பேராவல் என்பது பொங்கிவரும் ஆறு போன்றது. இப்பேராவல் என்னும் நதியில், ஓடம்கொண்டு கடத்தலாகாது. ஓடம் நீரில் மூழ்கிவிடும். பித்தேறிய நாய், அலைவதைப்போல பேரார்வம் கொண்டோன் அலைவான், இப்பித்தால், ஏனைய நற்பண்புகள் அழியும். உண்மையான அன்பு, பேராவலின் அடிப்படையில் தோன்றாது.

ஒருவனுக்கு இறைவனிடத்து அன்பு, காதல் மீதூறி நிற்குமானால் அவன் பிறரைக்கண்டு பொறாமைக் கொள்ளான்.

நாம் என்றும் உண்மையையே பேசுதல் வேண்டும். கலப்பற்ற உண்மையையே நாம் உரைத்தல் வேண்டும். என்றும் பொய் பேசுதலாகாது. எல்லாவிதமான தீமைகட்கும், கழுவாய் அல்லது மருந்து உண்மையாகும். எல்லாப் பாபங்களையும் உண்மை நீக்கும். எவரெவர் உள்ளத்து உண்மை குடிகொண்டுள்ளதோ, அவர்களை நானக் வணங்குவதாகக் கூறுகிறார். பொய் பேசுதலானது நஞ்சை உண்பதற்குச் சமமாகும். பொய்பேசுவோர் என்றும் உள்ளத்தூய்மை உடையவராக இருத்தல் இயலாது. ஒருவன் மிகுந்த விழிப்புடன் இருந்து பொய்பேசுதலைத் தவிர்க்க வேண்டும். உண்மை இறுதியில் வெல்லும். யாவற்றையும்விட உண்மை மேலானது உண்மையைவிட, உண்மையான வாழ்வு மேலானது. இக்கருத்து நானக் அவர்களால் பெரிதும் வற்புறுத்தப் பெற்றது. நேரிய வாழ்வு, சீலம் மிக்க நடத்தை மிகவும் இன்றியமையாதது என்பது குருநானக் கருத்தாகும். பொய் பேசுபவனுக்குப் பெயரில்லை. எங்கும் மதிப்புஇல்லை. கருங்காக்கைத் தூய்மையாக இருத்தலரிது. இதேபோல் பொய்பேசுபவன் தூயவனாதலரிது. சொற்காவாதானை எவரும் நம்புவதில்லை அவன் உள்ளீடு அற்றவன். அவன் பொய்யன் ஆதலால், என்றும் பொய்மையையே புரிகின்றான். உண்மையே அனைத்துத் துன்பங்கட்கும் மருந்தாகும். உள்ளத்து மாசுகளை உண்மையே நீக்கும். உள்ளந்தூயரை, உண்மையைக் கடைப்பிடிப்போரை, குருநானக் விரும்புவதோடல்

லாது, அவர்கட்டுத் தொண்டும் செய்ய விரும்புகிருர். உண்மை என்றும் பழையதாதல் கிடையாது. உண்மை என்றும் வெல்லும்.

இறைவன் எப்போதும் நம்முடன் இருக்கின்ருன் என்று நம்புங்கள் என்று குருநானக் கூறுகிருர். இறைவனின் இருப்பை, துணையை நாம் உணர்வதற்கு, நாம் பணிவுள்ள வர்களாக, நடந்து கொள்ள வேண்டும் என்று வழிகூறு கிருர். பணிவுடையோரிடையே, மிகவும் பணிவுள்ளவனுக விளங்குதல் வேண்டும் என்பது அவரது உட்கிடை. எளிய தாழ்மை உள்ள பக்தர்களையே இறைவன் மதிக்கின்ருன். பணிவுடைமையே அமைதி, மகிழ்ச்சி, ஆனந்தம் ஆகியவற்றை நமக்கு நல்கும்.

ஒருவன் காலடி மண்ணுகத் தன்னை மதித்தல் வேண் டும் இவ்வாறு மதித்தால், இறைவனை யாண்டும் காணலாம். எவனொருவன் தன்னைத் தாழ்ந்தவனுகக் கருதுகின்ருனே அவனே உயர்ந்தவர்களுள் உயர்ந்தவனுவான். எல்லோரும் நமது நலத்தை விரும்புகின்றவர்கள் என்று கருதினல், காழ்பிற்கு, பகைமைக்கு இடம் ஏது? இறையின் காருண் யத்தால் ஒருவன் பணிவுள்ளவனுகிருன்; அமைதி பெறு கின்ருன்; பின்னர் வீடுபேறும் பெறுகின்ருன். துலாக் கோலில், பணிவார்ந்த ஒருவனை நிறுத்தால், அவன் நிறை யுடையவனுக விளங்குவான். இனிய பண்பு என்பது, பணிவுடைமையாகும் நானக், இப்பணிவுடைமையையே, நன்னடத்தையின் உள்ளீடு என்று கொள்கிருர். எவரெவர் தாழ்ந்தோராக, அற்ருரது துன்பத்தைத் துடைக்க முற்படு கின்றனரோ, அவர்கள் மீது இறையின் கருணை பொழியும். அடக்கமுடைமையே ஒருவனது, செங்கோலாதல் வேண்டும். பணிந்தோர் பெரியோராவர்.

எவரெவர், பிறரிடத்து அன்பு பூண்டு ஒழுகுகின்றனரோ, அவர்களை இறைவன் அன்போடு ஏற்கின்ருன்.

ஒருவன் உனது கன்னத்தில் அறைந்தால், திருப்பி அவனை அறையாதே! அவனது கால்களை முத்தமிட்டு, வீடு திரும்புக! என்று கூறுகிருர். எங்கே மன்னிக்கும்

பண்பு நிலவுகிறதோ, அங்கே இறைவன் வதிகின்றான். உள்ளத்தினின்று பகைமையை, வன்மத்தை நீக்குக. உலகு முழுமையும் உன்னிடம் நட்பு பூண்டு ஒழுகுவதை நீ காண்பாய்!. எண்ணிலோர், மன்னிக்கும் பண்பு இல்லாது, மடிந்துள்ளனர். ஃபரீத் என்பவரை நோக்கி, குருநானக் கூறுவது, "ஒருவன் உன்னிடம் நம்பிக்கை கெடும் வகையில் நடந்து கொண்டானானால், அவனுக்கு நன்மையையே நீ செய்க! உனது உள்ளத்தில் சினத்திற்கு இடம் தராதே! சினவாது, வன்மங்கொள்ளாது, நடந்து கொண்டால், உடலால், உள்ளத்தால் உறும் பிணிகள், உன்னை விட்டு நீங்கும். நீ விரும்பியதை அடைவாய்!" எவனொருவன், மன்னிக்கும் பண்பைப் பயில்கின்றானோ, அவனே உண்மையில் உண்ணா நோன்பு நோற்பவனாவான். எவன் தானே முயன்று, உடல் வருந்தி, பொருள்தேடி, பிறருக்குத் தானம் தருமம் செய்கின்றானோ, அவன் இறைவனை அடையும் வழியைக் கண்டு கொண்டவனாவான் என்று நானக் கூறுகிறார்.

இரக்கம், மனநிறைவு ஆகிய பண்புகளின் அடிப்படையில், தோன்றுகின்ற அறநேர்மையே இப்பிரபஞ்சத்தைத் தாங்குகின்றது, என்பது குருநானக் கருத்தாகும். எவ்வுயிர்க்கும் கொடுமை செய்யாதே. செய்யாது ஒழுகின் உன்னை எல்லோரும் மதிப்பர். பிறரிடம் இரக்கம் கொள்க. இறைவனாகிய தலைவனை மறவற்க.

எவன் தனது வருவாய்க்குத் தக்க வகையில் செலவைக் கட்டுப்படுத்துகின்றானோ, அவன் என்றும் தோல்வி அடைதல் கிடையாது. உறங்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்க; மிதமாக உண்க; பேராவல், காமம், செருக்கு, மனநிறைவின்மை, ஆகியவற்றை நீக்குக. அதிகம் பேசாதே! மிதமாக உண்போர், உலகத் தடைகள் பலவற்றைக் கடந்தோராவர்.

உண்மையான அன்பு இலதேல். உடம்பு சவத்தை ஒத்ததாகும். அன்பில்லாத வாழ்க்கை, பாலைவனத்தில் மலர்ந்த மலரை ஒக்கும். அம்மலரின் மணத்தை எவரும் நுகர்வார் இலர். பொய்யான அன்பு, செருக்கு ஆகிய

வற்றின் சுழற்சிக்கு உட்பட்டு அலமறுகின்றனர், மனிதர் என்று குருநானக் இரங்குகின்றார். எவனது உள்ளத்தில் அன்பு இருக்கின்றதோ, அவன் விடுதலை பெறுவான்.

நன்றி கொன்றவர் உய்வதிலர், நரகமெனும் சேற்றில் அழுந்துவர். செய்நன்றி மறந்தவன், தலைவனாகிய இறைவனை மறந்தவராவர். அவன், பல பிறப்புக்கள் பிறந்து, இறந்து உழல்வான், நாம் இறைவனிடமிருந்து, பல நன்மைகளைப் பெறுகின்றோம். இருப்பினும், நன்றி மறந்தவராகின்றோம். நமது உள்ளத்தை இறைவன் அறிவான். நமது நன்றி மறந்த செயலை, அவன் மன்னித்தாலன்றி நமக்கு உய்வில்லை.

அறம் அல்லது அறவாழ்க்கை சமய வாழ்க்கையினின்று பிரிக்கவொண்ணாதது. அறப்பண்புகளே, நமது சமய வாழ்க்கையின் அடிப்படையாகும். இறையுணர்வுடையோரிடையே அறப்பண்புகள் நன்கு வெளிப்பட்டுத் தோன்றும். ஆதலால் சீலம் மிகுந்த வாழ்க்கையை நானக் வற்புறுத்துகிறார். இறைவனது திருவருளைப் பெறவேண்டின், கீழ்க்காணும் பண்புகளைப் போற்றுங்கள் என்று நமக்கு எடுத்த்து சொல்கிறார்.

"பணிவுடமை - உனது சொல்லாகட்டும்
மன்னிக்கும் பண்பு - உனது தகுதியாகட்டும்
இனிமையான பேச்சு — உனது கவர்ச்சியாகட்டும்
இவையே நீ அணியத் தக்கன இவை, உன்னை
இறையிடம் சேர்ப்பிக்கும், அல்லது இறைவன்
உன்னுடைய வருவான்"
உன்னுடையவனாவான்." ஃபரீத் சாலோக்தாஸ்

மேலே நாம் முயன்று தவிர்க்க வேண்டிய தீய எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைக் கண்டோம். இதேபோல் முயன்று, பயின்று நம்முடைய அணிகலன்களாகக் கொள்ள வேண்டிய நற்பண்புகளையும் கண்டோம். பணிவுடமை, அடக்கமுடமை, அன்பு, பகிர்ந்துண்ணல் ஆகியவையே நமது அறவாழ்வின் அடிப்படைகளாகும்.

இறைவனின் பெருங்கருணையை நினைந்து, அவன் நாமத்தை இடையருது ஓதி, சீலம் மிகுந்த வாழ்வு வாழ்வோமே யானுல் இறையருள் நமக்குத் தவருது அமையும்.

அஜிதரந்தவா, குருநானக்கை நோக்கி அஹிம்சையைப் பற்றி வினவினர். அப்போது நானக் கூறியது:

''எவர்க்கும் தீமை நினையாதே - சிந்தனையில் அஹிம்சை
எவர் மனதும் புண்படுத்தும்படி பேசாதே – பேச்சில் அஹிம்சை
எவரது பணிக்கும் தடையாக விளங்காதே - செயலில் அஹிம்சை
ஒருவன் உன்னைப்பற்றி குறைவாகப் பேசினுல் அவனை மன்னித்துவிடு
உடல், உள்ளம், ஆன்மா, ஆகிய மூன்றையும் கொண்டு பொறையை வளர்த்துக்கொள். நேரிடும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்.
உனது வாழ்வு கெடுமாறுலும், துன்பப்படுவோருக்கு உதவி செய்க

மேலை நாடுகளில் அறத்தைச் சமயத்தினின்று பிரித்து ஆராய்கின்றனர். இவ்விரண்டையும் பிரித்தே அறிகின் றனர். சமய நம்பிக்கையில்லாதவனும் அறவாழ்வு வாழ இயலும் என்று கொள்கின்றனர். சமய நம்பிக்கை கொள் பவனும் அறமல்லாத வாழ்வை வாழ இயலும் என்று சுட்டிக்காட்டுகின்றனர். கொடுமைகள் பல செய்கின்றவனும் இறையிடத்து நம்பிக்கைகொண்டு வாழலாம். நமது நாட்டில் 'நரபலி' செய்வோர், இந்நாளிலும் இருப்பதை அறிகிறோம். மனிதர்களை, சிறப்பாக ஆண் குழந்தைகளைக் கவர்ந்து சென்று, தாம் வழிபடும் தெய்வத்திற்குப் பலி செய்கின் றனர். பலி இடுவது என்பது தெய்வத்திடத்துக்கொள்ளும் நம்பிக்கையால் இடுவதாகும். ஆனல், ஏதுமறியாத சிறு வனைப் பலி இடுதல் கொடுமை என்று அவர்கள் உணர் கின்றிலர். புறவாழ்க்கையில் எத்தகைய அறமல்லாத செயல் களை மேற்கொண்டாலும், அகவாழ்க்கையில், சமயப்பற்று

டையோராகத் திகழ்கின்றனர். இத்தகைய நிலை நமது நாட்டிலும் உண்டு. ஆனால், நாம் சமயத்தை அறவாழ்க்கையினின்று பிரித்தல் இல்லை. பிரித்தல் தவறு என்றும் கருதுகின்றோம். சிறந்த ஒழுகலாறு சமயத்தின் உயிர்ப்பு என்று கொள்கின்றோம். அறமல்லாதன சமயத்தில் இடம்பெறுதலை நாம் ஒப்புக்கொள்வதில்லை. இவ்வடிப்படையிலேயே, நானக் அவர்களும் சிறந்த சீலம் மிக்க வாழ்க்கையை வற்புறுத்துகிறார். அறப்பண்புகள் என்று நாம் இன்று குறிப்பனவற்றை சமயப்பண்புகள் என்று முன்னோர் கருதினர். பொறை, மன்னிக்கும் பண்பு, இரக்கம், பகிர்ந்துண்ணல், பணிவுடைமை போன்ற சிறந்த பண்புகள் சமய வாழ்விற்கு இன்றியமையாதன என்பது நானக் அவர்களின் கருத்தாகும். மக்கட் சமுதாயம் இகல் நீங்கி, இயைபு தோன்ற அன்பு, ஒப்புரவு போன்ற பண்புகள் நமது வாழ்க்கையில் சிறந்து விளங்க வாழ்தல் வேண்டும் என்பது நானக் நமக்கு வலியுறுத்துவதாகும். இத்தகைய பண்புகள் இன்றும் நமது வாழ்க்கையை வளம் படுத்துவனவாகும். செம்மை செய்வனவாகும். ஆதலால், நானக் வழங்கிய நற்செய்தி, இன்றும் ஏற்கதக்கதாகும்; வழிகாட்ட வல்லதாகும்.

## குருநானக் கண்ட சமுதாயம்

குருநானக் அவர்களது காலத்தில் ஹிந்து சமூகம், சாதிப் பாகுபாடுகளால் பிளவுற்றுக் கிடந்தது. சடங்குகள் ஆட்சி செய்தன. இஸ்லாமியரது சமூகம் விடாப்பிடியாகத் தான் கொண்டதே சரி என்று நம்பி இருந்தது. கொடுங்கோன்மை தலைவிரித்தாடியது. வன்முறைகளும் கையாளப் பெற்றன. இவ்விரு சமூகங்கட்கும் குருநானக், தூய, நல்ல ஆன்மீக நெறியை உணர்த்தினார். கடுமையான தவநெறிகளிலே ஈடுபட்டு உடலை வருத்துதலை அவர் வெறுத்தார். புலனின்பங்களில் தோய்ந்த வாழ்வையும் வெறுத்தார். இவ்விரு நிலைகளையும் மறுத்த அவர், நடுநெறியொன்றை வகுத்தார். இல்லறம் நடாத்தும் குடும்பத்தலைவன் தனது கடமைகளைச் செவ்வையாக ஆற்றுவதுடன், இறைக்கு ஆற்ற வேண்டிய கடமைகளினின்றும் வழுவாதிருப்பான் என்றார். மனிதன்

தனது சுயநலத்தை விடுத்து, சமூக நலனிற்கும், சமுதாய நலனிற்கும் பாடுபடுதல் வேண்டும். இவ்வாறு சமுதாய வாழ்வு அமைவதற்கு, யாவரும் ஒத்து உரிமையுடையவராய் உழைப்பதற்கு ஏற்ற அமைப்பைக்காண விரும்பினார். மக்கள் எல்லோரும் சமநிலையுடையவர் என்றும், ஒத்தவர்கள் என்றும் கருதுகின்ற நிலை அமைதல் வேண்டும் என்று விரும்பினார். சாதிப்பாகுபாடுகளை நீக்க விரும்பினார். செல்வநிலையிலும், பிற உடைமைகளாலும் மக்களிடையே ஏற்றத் தாழ்வு இருக்கலாகாது என்றார். இவ்வேற்றதாழ்வுகள் நீங்க நானக் இரு அமைப்புகளைக் கண்டார்.

'சங்கத்' 'பங்கத்' என்பன இவ்விரு அமைப்புகள். 'சங்கத்', சங்கமாகும். சமூகத்தினர் ஒருங்கே கூடி அனைவரும் அமர்ந்து கூட்டு வழிபாடு நிகழ்த்துவதற்கு ஏற்ற அமைப்பு 'சங்கத்' ஆகும். 'பங்கத்' என்பது இலவச அடுக்களை ஆகும். வெவ்வேறு சாதியினர், சமூகத்தினர் ஒரே மேடையில் அமர்ந்து, ஒருங்கே உண்ணுவதற்கு ஏற்ற அமைப்பு இதுவாகும். இவ்வாறு ஒரே இடத்தில் சாதிப் பாகுபாடுகளை மறந்து, பழகுவதானது பெரிதும் வரவேற்க தக்கதாகும். செல்வநிலையில் உள்ள ஏற்றத்தாழ்வும் மறக்கப்பெறுகிறது, ஏனெனில் ஒரேவகையான உணவை, ஒரே இடத்தில் அமர்ந்து உண்ணுகின்ற நெறியினை, 'பங்கத்' ஏற்படுத்துகிறது. பிறப்பினாலும், பெறுகின்ற செல்வத்தினாலும் உளதாகும். ஏற்றத்தாழ்வுகளைக் களையவும், அனைவரும் இறையன்பர்கள் என்ற நிலையில், கூடி உண்ணவும் 'பங்கத்' சிறந்த அமைப்பாகும்.

மேலும் இலவச அடுக்களை - சமையலால் ஒவ்வொரு சீக்கியனும் தான் உண்ணும் உணவைப் பிறருடன் பகிர்ந்துண்ண வேண்டும் என்ற நியதியும் இதனால் ஏற்படுகிறது. சமூக – சமையல் என்பது, தொண்டிற்கு வாய்ப்பு நல்குகிறது. செல்வத்தையும், உணவையும் சமமாக எல்லோர்க்கும் பகிர்ந்துண்ண வாய்ப்பு ஏற்படுகிறது. 'லங்கர்' என்பது உணவுக் கோயிலாகும். ஏழை எளியவரது வாய்க்கு உணவு தருவது இது. இறைவனது வெகுமதிகள் பெறும் கொள்களங்களாகும்.

குருநானக் காலத்தில் மகளிர், சமுதாய வாழ்வில் இடம் பெறவில்லை. இவர்கள் ஆண்களோடு சமநிலையுடையவர்களாக விளங்கவில்லை. சமய வாழ்விலும் உரிமையின்றி வாழ்ந்தனர். இந்நிலைகளை மாற்றி, மகளிர், சமுதாயத்தில் உரிமையுடன்வாழ, குருநானக் வழிவகுத்தார். மகளிர் தம் வாழ்வில் புது சீரமைப்புடன் வாழத்தலைப்பட்டனர்.

குருநானக்' மகளிரது பெருமையை உயர்த்தினர். மகளிரைத் தீயவர் என்று ஏன் கருதுதல் வேண்டும்? என்று கேட்கிறார். மகளிர் மன்னவர்களையும், பெரியோர்களையும் ஈன்றெடுத்து, வளர்க்கின்றனளன்றோ? ஆதலால் அவர்களைத் தீயவர்கள் என்று கருதுதல் தகாதது என்பது நானக்கின் கருத்தாகும். மகளிர், பிறப்பிலேயே தீயவர் என்று கருதுவதற்கோ, தூய்மை குறைந்தவர்கள் என்று கருதுவதற்கோ இடமின்று, என்பது நானக் வற்புறுத்திய உண்மையாகும். குருநானக் அவர்களது காலத்திலும், சிறிது முன்னரும் பின்னரும் பல பெரியவர்கள் இந்திய நாட்டில், எங்ஙனும் மகளிரைப் பழித்தும், இழித்தும் பேசினர். இந்த சூழ்நிலையில். குருநானக், மகளிரது விடுதலைக்காக அரும்பாடு பட்டார் என்றே கொள்ளுதல் வேண்டும். மேலும் நானக் தனது கருத்தை நன்கு விளக்குகிறார்.

"பெண் நம்மை பெற்றெடுக்கிறாள்
பெண்ணின் கருப்பையிலே நமது தோற்றம்
பெண்ணிற்கே நாம் நிச்சயம் செய்யப் பெருகிறோம்
பெண்ணிற்கே நம்மை மணம் முடிக்கிறார்கள்
பெண்ணே நமது நண்பன்
பெண்ணின் மூலமே நமக்கு உலகத் தொடர்புகள் ஏற்படுகின்றன.

மேலும் நானக் கூறுவது;

மன்னர்களையும், பிறரையும் பெற்றெடுக்கும் மகளிரைத் தீயவர்கள் என்று ஏன் கருதவேண்டும்? இவ்வுலகில் மகளிரின்றி எவரும் இல்லை. இறைவன் ஒருவனே பிறவாதவன்"

பிறிதொரு பாடலில், நமது ஆசைகளை வெல்லுதல் வேண்டும். ஆசைகள் வயப்பட்டு நாம் ஒழுகினல் நமது குறிக்கோளை மறந்தவர்களாவோம். என்று கூறுகிருர்.

''மனித இனம் தாய்ப்பால் அருந்துகின்ற நிலை தொடங்கி விழிப்படைகின்றது;

அடுத்து அன்னையையும், தந்தையையும் அறிகிறது;

பின்னர் படிப்படியே உடன் பிறந்தோர், மனைவி முதலியவர்களை அறிந்து அவர்களிடம் அன்பு செலுத்து கின்றது.

நான்காவது நிலையில், வாழ்க்கையென்னும் விளையாட்டு தொடர்கிறது.

ஐந்தாவது நிலையில், நல்லுணவு, நீர் போன்றவற்றில் ஆசை பெருகுகின்றது;

ஆருவது நிலையில், பாலுணர்ச்சி தோன்றுகின்றது, இவ் வுணர்ச்சி, சாதிப்பாகுபாடுகளைக் கடந்து விளங்குகின்றது.

ஏழாவது நிலையில், இல்லற வாழ்விற்கு உகந்தன வாக அமையும் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் மிகு கின்றது,

எட்டாவது நிலையில், நம்மைக் கொள்ளும் சினம் தோன்றுகிறது;

ஒன்பதாவது நிலையில் வாழ்க்கையில் முதுமை வந்து எய்தும்போது, மேலும் ஆர்வம் உலகப் பொருள்களிடத்து மிகுகின்றது. தலைமுடி நரைத்து விடுகின்றது. மூச்சு இடர்ப்பட்டு வெளியே வருகின்றது;

நண்பர்களாக விளங்கியவர்கள், ஒருவர்பின் ஒருவராக பிரிந்து போகின்றனர்.

பத்தாவது நிலையில் ஆவி பிரிகின்றது. இதுகாறும் நாம் குடியிருந்த வீடு, சாம்பலாகின்றது. நண்பர்களும், உற

வினர்களும் அழுகின்றனர், ஆன்மா, என்னும் அன்னம் உடலைவிட்டு பிரிகின்றது.

இவ்வாறு தான் மக்கள் பிறக்கின்றனர். இறக்கின்றனர். ஆதலால், ஆசைகளைப் பின்பற்றுதல் பொருந்தாதாகும்'' பற்று நீக்கமே வேண்டுவது. பற்றிற்குக் காரணம் நமது மனமே! இதைக் கட்டுப்படுத்துவதைவிட்டு மகளிரை தீமைகட்குப் பிறப்பிடம் என்று கருதுவது பேதைமையாகும்.

ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்றனர் என்ற அளவிலேயே அவர்கள் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்துகின்றனர் என்று கொள்வதற்கில்லை என்று நானக் கூறுகிறார், ஈருடலும். ஓருயிருமாக வாழ்வோரே, கணவன் மனைவியாவர். மகளிரை நோக்கி குருநானக் கூறுவது "உனது கணவன் விருப்பப்படி சொல்கின்றபடி, நடப்பாயாக! அவனுக்குக் கீழ்படிதலையே சிறந்த ஒப்பனைப் பொருளாகக் கொள்க!" கணவனுக்குரிய மதிப்பு தராத நிலையில், மனைவியை நல்ல இல்லறத்தாள் என்று கருதுவது எவ்வாறு இயலும் என்கிறார்.

ஹிந்து சமயத்தில், மரபு பிறழாமல் வாழ்ந்து வந்த மகளிர், தமது கணவன் இறந்து ஈமவிறகுக் குவியலிடையே தீமூட்டி, எரியுண்ணும்போது, உடன்கட்டை ஏறினர். இப்பழக்கத்தை 'சத்தி' என்றனர். இவ்வழக்கத்தை மேற்கொண்டவர்களையும், பின்னர், சத்தி என்று அழைக்கலாயினர். இப்பழக்கம் குறித்து குருநானக் கூறுவது.

"ஈமத்தீயில் (மறைந்த) கணவனுடன் உடன்கட்டை ஏறுகின்ற மகளிரை, சத்தி என்று அழைக்காதீர்கள். கணவன் மறைந்த துயரச் செய்தியைக் கேட்டளவிலேயே ஆற்றாத, ஆவி பிரிந்த மகளிரையே சத்தி என்று அழைத்தல் வேண்டுமென்கிறார் இவ்வாறு இறந்த செய்தி அறிந்த அளவிலேயே உயிர் துறந்தலைத் தலையாய கற்பு என்று தமிழ் நூல்கள் பேசுகின்றன.

இவ்வாறு மகளிர் உடன்கட்டை ஏறுவதனால் மறைந்த தம் கணவரை (சென்று) அடைவதில்லை. சிந்தியாது தமது சமூகத்தில் நிலவிவரும் பழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். இயந்திரம்போல, தமக்கு முன்னிருந்த மகளிர் உடன்கட்டை ஏறியதனால், தாமும் ஏறுகின்றனர்; தீக்கிரையாகின்றனர். கணவன் வாழுங்காலத்தில் மிகுந்த அன்புடன், தமது கணவனைப் போற்றாத மகளிரை சத்தி என்று அழைத்தல் யாங்ஙனம்? மன நிறைவுடனும், கற்புடனும், தூயவாழ்வு வாழ்வோர் சத்தி என்று அழைத்தற்குரியவர் ஆவர். பரம்பொருளையே தமது நாயகனாகக் கொண்டு ஒழுகுவோர் சத்தி என்று கொள்வதற்குரியவர். இறைவனது மன்றத்தில்—அவர்கள் ஏற்கப்பெறுவர். சத்தி என்பதற்குப் புதிய விளக்கம் நானக் தந்தார்.

மரபு வரிசையின் அடிப்படையிலும், பிறப்பு அடிப்படையிலும் வேறுபாடுகள் காண்பது வீணான செயலாகும். அனைத்து மக்களும் இறைவனையே காப்போனாகக் கருதுகின்றனர். பிறப்பிலும், பிறவற்றாலும் நாம் காண்கின்ற வேறுபாடுகள் அனைத்தும் ஒருவனது செயல்களின் அடிப்படையிலே எழுவனவாகும். ஒருவனது செயலைக் கொண்டே ஒருவனை மதித்தல் வேண்டும். பிராமணன் இறைவனை உணர்ந்தவன். அவன் இறையின் புகழை இடையறாது ஓதுதலால், இறைவனால் ஆசிர்வதிக்கப்பெறுகின்றான். கபீர், சாதிப்பாகுபாட்டைக் குறித்துக் கேட்பது, "நீ எவ்வாறு பிராமணன் ஆகிறாய்? நான் எவ்வாறு தீண்டாதவனாகிறேன்? எனது நாளங்களில் இரத்தம் ஓடி, உனது நாளங்களில் பால் பாய்கிறதா? சாதிப்பாகுபாடும், அழகும் ஒருவனை மரணத்திற்குப்பின் தொடர்வனவல்ல. அவனது செயல்களைக் கொண்டு அவனுக்குத் தீர்ப்பு வழங்கப்பெறுகின்றது என்று நானக் கூறுகிறார். உலகிலே பெரியவராக விளங்குகின்றவரால் நமக்கு ஏதுபயனும் இல்லை. கீழ்ச்சாதியில் பிறந்திருந்தாலும், இறைவனின் அடியவனெனில், நாம் கணப்பொழுதில் காக்கப்பெறுவோம்

குருநானக் சாதிப்பாகுபாடுகளைக் குறித்து கூறுவது, "நான் ஹிந்துவுமல்ல; முஸல்மானுமல்ல. எனது உடலும்,

ஆன்மாவும் அல்லாவிற்கும், இராமிற்கும் உரியன." "இறைவனை இடையறவுபடாது நினைத்தலால் ஷத்திரியன், பிராமணன், சூத்திரன், வைசியன் ஆகிய நால் வருணத்தினரும் வீடு பேறு பெறுவர்." நெய், பால் இவை வைக்கப்பெறும் பாத்திரங்களைக் கொண்டு பெயர் பெறுவனவல்ல. இதே போல் எச்சாதியில் பிறந்தாலும், இறைவனின் பக்தன் பக்தனுவான்;" "எவனொருவன் தனது மனவெழுச்சிகளை அடக்குகிருனே அவன் முல்லா ஆவான்;" "இறைவனை மறந்தோரே கீழ்ச் சாதியில் பிறந்தோராவர்;" "சாதியும் பிறப்பும் எவ்வகைப் பயனும் தாரா. உண்மையறிந்தோ ரைக்கேட்க! செயல்களால் சிறப்புற்ருேரே, உயர் ஜாதி யினர் என்றும், உயர்குலத்தோர் என்றும் கருதப்பெறுவர்.

குருநானக் நால்வருணத்தினரையும் ஒருங்கே வைத்து தமது உபதேசங்களைச் செய்தார். ஒருவன் சாதியினுல் பெருமை கொள்ளுதல் ஆகாது. இவ்வாறு பிறப்பினுல் எழு கின்ற செருக்கால் விளையும் தீமைகள் பலவாகும். களி மண்ணைக்கொண்டு குயவன் பலவித பாத்திரங்களை உரு வாக்குகிருன். மீண்டும் மீண்டும் குருநானக் கூறுவது, நாம் ஹிந்துக்களுமல்ல, முஸல்மான்களுமல்ல, நாம் நமது உடல் களையும், ஆன்மாக்களையும் அல்லாவிற்கும், இராமிக்கும், அர்ப்பணித்தவராவோம். நான், ஹிந்துவிடமிருந்தும் துருக்கி யரிடமிருந்தும் பிரிந்துவிட்டேன். நான் 'ஒருவனே ஆகிய இராமையும் அல்லாவையும்' நம்புகிறேன்.

ஜாதிப்பாகுபாடுகளை குருநானக் அறவே ஒதுக்கினுர், வெறுத்தார். தமது வாழ்நாளில் அவற்றைப் போற்றினு ரிலர் எல்லாச்சாதியினரையும் ஒப்பவே நோக்கினுர். சமயம் ஒழுகலாற்றை அடிப்படையாகக்கொண்டது என்பது அவர் கருத்து. ஆதலால் அவரவர் செயலைக்கொண்டே நாம் மதிப் பிடுதல் வேண்டும்என்பது அவர் கருத்து. இறையொருமையை வற்புறுத்திய அவர் இறைவனை இராம் என்றும் அல்லா என்றும் விளித்தார். இறையிடம் அன்பு ஒன்றே ஒருவனை உயர்த்துவது. இறைவனிடத்து அன்பில்லாதவனை கீழ்ச்சாதி யின் பிறந்தவன். இவ்வாறு இறையன்பால், சாதிப்பாகுபாடு களைக் களைய நீக்க முற்பட்டார்.

செல்வரும், வறியோரும் யாவரும் உடன்பிறந்தோ ராவர். இது இறைவனின் ஆணையாகும். இவ்வுண்மையை எவரும் மறுத்தல் இயலாது. உள்ளத்தில் வறுமையுடை யோன் இறைவனை, அவனது நாம மகிமையை மறந்தோன் ஆவன். அறிவு குறைந்தவர்களே, மற்றவர்களை ஒடுக்க முற் படுவர், எவரும் இறை முன்னிலையில் உயர்ந்தோரும் அல்லர் தாழ்ந்தோரும் அல்லர்.

இவ்வாறு சமத்துவம் பேசிய நானக் அவர்கள் பெண் குழந்தைகளைக் கொலை செய்வதையும், வன்மையாகக் கண் டித்தார், குருநானக் வழிவந்த குருஅமர்தாஸ் என்பவர், சமயத்தைப் பரப்புவதற்கு மகளிரை நியமித்தார். குருஹர் கோபிந் என்பவர் மகளிரை 'மனிதனின் மனச்சான்று' என்று கூறிச் சிறப்பித்தார். சமயக் கூட்டங்களில், ஆணும், பெண்ணும் பால், சாதிப்பாகுபாடின்றி, பாடினர். சமய உண்மைகளைப் பரப்பினர். குரு தேக்பகதூர் என்பவர் அமிர் தசரஸ் பகுதி மகளிரை ஆசீர்வதித்து, அவர்கள் இறையினல் ஏற்றற்குரியவர் என்றார். வீரமகளிர் பலர், ஆண்களைத் தூண்டிப் பல உன்னதமான செயல்களைச் செய்யுமாறு ஊக் குவித்த வரலாறுகளைச் சீக்கியம் நமக்கு உணர்த்துகிறது. பத்தாவது குருவைக் காட்டிக்கொடுத்த இழிசெயலுக்காக, "நாற்பது அமரர்" மகளிரால் இழிவுபடுத்தப் பெற்றனர். இதனல் பத்தாவது குரு போர்களத்தில் வெற்றிபெற்று, அழியாத புகழை சீக்கிய மரபிற்குத் தேடித்தந்தார்.

சீக்கியன், எல்லோரையும் அன்போடு நேசித்தல்வேண் டும். தன்னை வெறுப்போரிடமும் அன்போடு பழகுதல்வேண் டும். எல்லோரும் தத்தமக்கென்றே வாழ்கின்றனர், சிலர். தாம் பெறுவதை மற்றவர்களோடு பகிர்ந்து வாழ்கின்றனர். அதனல் உண்மையான சீக்கியன் மற்றவர்கட்காகவே வாழ் பவன் ஆவான். நற்பண்புகளையே போற்றும் தூய வாழ்க் கையை மக்கள் போற்றி ஒழுகவேண்டும் என்று குருநானக் வழிகாட்டினர். அன்பு, இரக்கம், ஒப்புரவு, கருணை ஆகிய பண்புகளை ஆயிரமாயிரம் மக்களிடத்துத் தூண்டித் துலங்கு மாறு செய்தார். சமயங்கள் ஒத்த நிலையுடையன. சமயங் களின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு கற்பிப்பது பொருந்

தாத செயலென்று கண்டித்தார். மக்களனைவரும் இறைவனின் மக்கள் என்று இறையின் தந்தை நிலையை எடுத்துக் காட்டி, இதனால் மக்களனைவரும் தோழமை பூண்டு வாழ்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். நல்லெண்ணமும், பொறையும் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதன என்றார். இவ்வன்பு வாழ்க்கைக்குத் தடையாக விளங்கிய சாதிபாகுபாடுகள் பொருளாதாரத்தின் காரணமாக எழுகின்ற செல்வர், வறியோர் போன்ற பாகுபாடுகள் அனைத்தையும் தகர்த்தார். இறையிடத்துப் பெருகிய அன்பு பூண்டவராகக் குருநானக் விளங்கினார். ஒரு சமயம், மௌல்வி ஒருவர் குருநானக்கை நோக்கி, அவர் ஏன் மனையைவிட்டு வெளியேறி வந்தார் என்று வினவினார். அப்போது குருநானக் மௌல்விக்குத்தந்த மறுமொழி "மனிதச் சமுதாயத்திற்குத் தொண்டு புரிவதற்காகவென்றும், ஹிந்துக்கள், முஸ்லீம்கள் பிறர் யாவருக்கும் தொண்டு செய்வதற்காகவென்றும்" கூறினார். பிறிதொரு சமயம் குருநானக்கோடு உடன்பிறந்தவன் மௌல்வி கேட்டவாறு கேட்டபொழுது "மனிதச் சமுதாயம் எனது குடும்பம். அதற்குத் தொண்டு புரிவதன்மூலம் உனக்கும் தொண்டு புரிகிறேன் என்றார்."

இந்தியாவில் பல சமயங்கள் தோன்றின. வேத வேள்வியை மறுத்து, பௌத்தமும் சமணமும் தோன்றின இவ்விரு சமயங்களும் இறையுண்மையை ஏற்கவில்லை. ஆனால் இவ்விரு சமயங்களும் வளர்ச்சி கண்டபோது, தத்தம் சமயத் தலைவர்களையே இறை நிலைக்கு ஏற்றித் தொழத்தொடங்கின. பௌத்தத்தில் புத்தர்பிரான் வழிபடு கடவுளாக மாறினார். சமணத்தில், இருபத்து நான்கு தீர்த்தங்காரர்களை தம் சமயத் தலைவர்களாக ஏற்றனர். இடபத்தேவர், இவர்களுள் முதன்மையானவர். இறுதியாக வர்த்தமான மகாவீரரைத் தம் சமயத் தலைவராகக் கொண்டனர். பௌத்தமும், சமணமும் வேதநெறியில் விதித்த சடங்குகளை ஏற்க மறுத்தன என்றாலும், கரும விதியையும் மறுபிறப்புண்மையையும் ஏற்றனர். பௌத்த மதத்தில் நிலையான ஆன்மா என ஒன்றிலது என்றனர். சமணமும், பௌத்தமும் உபநிடத உண்மைகளை அடிப்படையாகவே கொண்டு

விளங்குகின்றன என்று இன்னும் சில அறிஞர் கருது கின்றனர். ஆகவே, நாத்திக தரிசனங்கள் என்று அழைக் கப்பெறும் சமணம், பௌத்தம் முதலியனவும் உபநிடதங் களினின்றே தத்தம் கொள்கைகளை ஏற்று வளர்ந்துள்ளன என்பது தெளிவு. காலத்திற்கு ஏற்ப சிலவற்றை மறுத்தும் சிலவற்றை ஏற்றும் இவ்விரு சமயங்களும் வளர்வதாயின. இவற்றுள் சிறப்பாக பௌத்தம் தத்துவ விசாரணையில் காலந்தாழ்த்தல் ஆகாது என்றும், தத்துவம் எவரையும் தூயவராக்காது என்றும் அமைதியே தூயவராக்கும் என்றும் கருதுகிறது. இக்கருத்து குருநானக் அவர்கட்கும் ஏற்புடையது. தத்துவ நுணுக்கங்களை அவர் வற்புறுத் தவே இல்லை. சீலம் செறிந்த வாழ்வையும், இன்றைய இடையறுது இறைஞ்சுகின்ற பக்தியையுமே குருநானக் வலியுறுத்தினர்.

தென்னிந்தியாவில் சிறப்பாக வளர்ந்த இரு பெருஞ் சமயங்கள், சைவமும், வைணவமுமாகும். இவ்விரண்டையும் ஹிந்து சமயத்தின் உட்பிரிவுகள் என்றே கொள்ளலாம். இவ்விரண்டினுள் வைணவ சமயம் பக்தி நெறியைச் சிறப் பாக மேற்கொள்கின்றது. இறைவனிடம் சரண் புகுகின்ற நிலையைப் பெரிதும் வற்புறுத்துகின்றது. பக்தி, பிரபத்தி, ஆகிய இவ்விரண்டையும், நானக் ஏற்று தாம் வகுத்த சமயத்தில் இடம் பெறச் செய்தார். ஜெபமும், கீர்த்தன மும் சீக்கியத்தில் இடம் பெறுகின்றன.

அயல் நாட்டினின்று இந்தியாவினுள் புகுந்து செல் வாக்குப் பெற்ற சமயங்கள், கிறித்தவமும், இஸ்லாமும் ஆகும். கிறித்தவம் குருநானக் காலத்திற்குப்பின் சில நூற் ருண்டுகள் கழிந்த பின்னரே இந்தியாவில் பரவ நேர்ந்தது. ஆனல் இஸ்லாமிய சமயம் வடமேற்கிலிருந்து இந்தியா வந்தது. மேலும் அரசியல் செல்வாக்கு மிகுந்த சமயமாக நானக் காலத்தில் இஸ்லாம் விளங்கியது. ஆதலால், இஸ்லாம் சமயத்தின் கூறுகள் பலவற்றை நாம் சீக்கியத் தில் காண்கிறோம். இஸ்லாம் சமயத்தையோ அல்லது ஹிந்து சமயத்தையோ, முற்றிலும் உள்ளவாறே நானக்

ஏற்றார் என்று சொல்ல இயலாது. இரு சமயங்களிடத்தும் இருந்த அல்லது அன்று, அவர்காலத்தில் நிலவிய மூட பழக்க வழக்கங்களை நானக், களைந்து, புதிய சமயமான சீக்கியத்தை வகுத்தார்.

இந்தியாவில் தோன்றி, சமயத்துறையில் சிறந்து விளங்கியவர்கள் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க மாண்பு மிக்கவர், நானக் என்பவர். இறை பற்றிய ஞானமும் உலகியலறிவும் சான்ற பெரியவர்களாலேயே நமது இந்தியப் பண்பாடு வளர்ந்து வந்துள்ளது எனல் வேண்டும். இப் பண்பாட்டின் ஆக்கத்தில், சமயங்கள் சிறந்த இடம் பெறுகின்றன. சமயப் பொறை என்பது, இந்தியப் பண்பாட்டின் சிறந்த கூறாகும். இந்தியப்பண்பாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. இதில் அடங்கி உள்ள வெவ்வேறு கூறுகளை வளர்ச்சியின் நிலைகளைத் தனித்தும் காணலாம். பிரித்து அறிவது, அறிவிற்கு விருந்தாகும். ஆனல் உண்மையை உணர வேண்டின், இந்தியப் பண்பாட்டைக் கூட்டு அமைப்பாகவே தொகையாகவே கருதுதல் வேண்டும். இயைபுடைய கூறுகளும், ஒற்றுமைக் கூறுகளும். நாம் இந்திய பண்பாட்டில் இன்றும் காணத்தக்கனவாகும்.

சிறந்த ஒழுகலாறு, ஆன்மீகத்துடன் இயைந்து அமைய வேண்டும். ஆன்மீகம் என்பது, இவ்வுலக வாழ்வை, முடிவாகக் கொள்ளாது. இறையை ஏற்று, இறையுடன் ஒன்றுதலை முடிவாகக் கொள்வதாகும்.

இறையுண்மை ஏற்காத ஒழுகலாறு சிறப்பாக அமையாது. உலகிலே பல நாடுகளில் விஞ்ஞானம், தொழில், தொழில் நுட்பத்துறை ஆகியவற்றில் புரட்சிகள் ஏற்படக் காண்கின்றோம். இப்புரட்சிகள் புதிய வாழ்வை மலரச் செய்கின்றன. ஆனல், புறநிலையில் பெருமாற்றங்கள் காணும் இந் நாடுகள் அகநிலையில். உள்ளத்துணர்ச்சிகளில் ஏற்படும் சிக்கல்கட்கு விடை காணவில்லை. ஆதலால் இந்நாடுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முழுமையான வளர்ச்சி என்று கூற இயலாது. உலகநாடுகளின் பண்பாட்டு புனரமைப்பு என ஒன்று அமையுமேல் இந்தியா அதில் சிறந்த பங்கு ஏற்கலாம்.

இப்புனரமைப்பு சிறப்பாக, ஆன்மீக வாழ்வில் ஏற்படும் ஒன்ருகும். ஆன்மீகத் தலைமை என்பது, அரசியல், பொருளாதாரத் தலைமைகள் போன்றதன்று. துறவு மனப் பான்மை, அல்லது தியாக உணர்வு, உண்மை விருப்பம், விரிந்த உள்ளம், பணிவுடைமை, தீர்க்க தரிசனம், (முன் ஞேக்கு) இன்னோரன்ன இயல்புகள் மனிதனின் உய்விற்குத் தேவை. மனிதன் புறவாழ்வில் உய்வதற்குரியவற்றைத் தனது விஞ்ஞான வளர்ச்சியால் பெற்றுள்ளான். ஆன்மீக வாழ்வில் அவன் நீடித்து இருக்க வேண்டுமானல், மேலே கூறிய இயல்புகள் இன்றியமையாதனவாகும். இந்தியா சமயவளம் சான்றது; பண்பாட்டுவளம் சான்றது. பல்வேறு சமயங்களும், பல்வேறு பண்பாடுகளும் இந்திய மண்ணில் வேரூன்றி, தழைத்து இகலாது, ஒற்றுமையுடன் நிலவக் காண்கிறோம். ஆதலால் இந்தியா, ஆன்மீகத் தலைமை ஏற்கும் தகுதி வாய்ந்தது.

உண்மையான சமயம் என்பது, வாழ்க்கையைப் பல் வேறு துறைகளாகப் பகுக்காது; பகுப்பதற்கு இடமின்றி, அகமும், புறமும் ஒத்த வாழ்கையையே சமயம் வற்புறுத்து கின்றது. நமது வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளிலும் சீலத்தை, சிறந்த ஒழுக்கத்தை வற்புறுத்த வேண்டும். இந்நிலை, அடிப்படையான ஆன்மீகப் பண்புகளை ஏற்பதால் எளிதில் அமையும். குருநானக் கண்ட சீக்கியம், வாழ்க் கையை முழுமையாகக் கொள்கிறது; சிறந்த ஒழுக்கத்தை வற்புறுத்துகிறது; இறைவனை மறவாது, அவன் நாமத்தை ஓதுமாறு பணிக்கின்றது. கடமைகளினின்று நீங்காது செவ் வையாகப் பணியாற்றுமாறு கூறுகிறது.

பாய்குருதாஸ் என்பவர் குருநானக்கைப் பற்றிக் கூறி யுள்ளது:

“சத்குருநானக் தோன்றியுள்ளார்;
பனி மறைந்தது;
ஒளி உலகில் பரவுகிறது;
கதிரவன் தோன்றினல், உடுக்களின் ஒளி மறையும்;
இருள் மறைந்து ஒளி யாண்டும் நிலவுகிறது.”

சமயத்துறையில் ஆன்றோர், அவ்வப்பொழுது தோன்றி உலக மக்களை நன்னெறிப்படுத்துகின்றனர், இறைவனிடத்து நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நல்லுறவு ஏற்படும் வகை செய்கின்றனர். இவ்விரண்டு அடிப்படைகளை சமுதாயத்தில் மக்கள் நன்கு உணரும்போது, மனிதனைத் தூய்மையடையச் செய்தல் எளிதாகும். சமயச் சான்றோர் சமுதாயத்தை முதலில் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். தனியொருவன் தூயனாதல் இன்றியமையாதது என்று உணர்ந்தனர். பல தனி நபர்கள் சேர்ந்த ஒன்றே சமூகம் ஆகின்றது. தனித்த வாழ்வில், தூய்மை பெற்றுவிட்டால் சமுதாயம் தானே தூய்மை அடைந்துவிடும். தூயபலர் வாழும் நிலையில் நற்பண்புகள் போற்றப்பெறுவது இயல்பே. நற்பண்புகளின் இயைபே, குணநலன் என்கிறோம். நன்னெறியில் ஒருவன் ஒழுகத் தலைப்பட்டால், அவனை எளிதில் ஆன்மீக வாழ்வில் உயரச் செய்ய இயலும். நல்லொழுக்கம் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் சீலம் மிக்க வாழ்வினைப் போற்றி இடையறுது முயன்று வாழ்தல் கடமை என்பதனைச் சமயப் பெரியோர் அனைவரும் வற்புறுத்தியுள்ளனர். குருநானக் அவர்களும் இத்தகைய சமயப் பெரியோர் வரிசையில் தோன்றியவராதலால், மக்களைத் தூய்மையுடையவர்களாக ஆக்குதலில் முன்நின்றார். சிறந்த ஒழுகலாற்றை வற்புறுத்தினார் என்று நாம் கண்டோம். இச்சீரிய ஒழுக்கமே ஆன்மீக வாழ்வில் முன்னேறச் செய்யும் என்பதும் நானக் என்பரின் துணிவாகும்.

குருநானக் தோன்றிய காலத்தில் இந்திய மக்கள் பகவத்கீதை உணர்த்திய நெறியினையும், புத்தர் பெருமான் போதித்த நெறியினையும் மறந்திருந்தனர். முகமது—நபிகள்—நாயகம் போதித்த மார்க்கத்தையும் சரியாக போற்றாதிருந்தனர். புனிதப்போர் — ஜெகாத் எப்போது எச்சூழ்நிலையில் ஏற்பட வேண்டும் என்பதை நன்கு முஸ்லிம்கள் உணர்ந்திலர். குருநானக் காலத்தில், மக்கள் இம்மை வாழ்க்கையையே பெரிதும் போற்றினர். உலகாயத வாழ்க்கையே

உன்னதமானது என்று பெரும்பாலோர் இருந்தனர். புற மொன்று போற்றி, அகநிலையில் வேருக ஒழுகும், நில மக்களிடத்து இருந்தது, வஞ்சகம் சமய வாழ்வில் வேரூன்றி இருந்தது. புரோகிதர் ஆட்சி வலுத்திருந்தது. குருநானக் அவர்களே தமது காலத்திய சூழ்நிலையை நன்கு விளக்கு கிருர்.

"இருள் சூழ்ந்த இரவைப்போல பொய்ம்மை நிலவுகின்றது"
உண்மையென்னும் நிலவு யாண்டும் காணவில்லை,
நான் (உண்மையை) தேடி இருள் சூழ்ந்த கலத்தில் அலுத்து விட்டேன்—

நன்னெறி காணவில்லை,
அகந்தையால் உலகு அளவிறந்த துன்பங்களுக்கு உள் ளாகி இருக்கிறது

எவ்வாறு உலகு உய்வது?"
என்று நானக் அலமறுகின்ருர்.

இந்தியச் சமுதாயம், ஆன்மீக அடிப்படைகளை மறந்து சீரழிந்து கொண்டு இருந்தது. அறியாமையும் மூடநம்பிக் கைகளும் யாண்டும் நிலவின. சாதிகளின் பெயரால் நிகழ்ந்த கொடுமைகள் பலவாகும். அநீதி எங்கும் நிலவியது. இவற் ருல், சமுதாயம் குலைந்து வந்தது. சாதி. கொள்கை, சமயம் பற்றிய தவருன கருத்து ஆகியவற்ருல் இந்தியர் பிள வுற்றனர். சமயத்தின் அடிப்படையான அகத்தூய்மை அறவே நீங்கியிருந்தது, பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

ஹிந்துக்களும், முஸ்லீம்களும் தனித்தனியே குழுக் களாகப் பிரிந்திருந்தனர். சமய அடிப்படையில் இப்பிரிவு தவிர்க்க ஒண்ணுதது. இவ்விரு குழுக்களிடையேயும், புறச் சடங்குகளையே பெரிதாக மதிக்கும் மனப்பான்மை இருந்தது. இருசாரரும் சடங்குகளுக்குச் சிறப்பு தந்தனர். அதிலும், சடங்குகளின் உயிர் நிலையைக் கருதாது இருதரப்பினரும் விடுத்தனர். இருசமயத்தவரும், உதட்டளவில் தத்தம் சமய வாய்ப்பாடுகளை முணுமுணுத்தனர். சமயத்தின் உயிர் நாடியை மறந்தனர். உள்ளொன்று வைத்து புறமொன்று வாழ்கின்ற வஞ்சக வாழ்க்கையைப் பலரும் வாழ்ந்தனர்.

சமுதாயத்திற்கு நலம் பல செய்பவர்கள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்பவர்கள், அறமல்லாத வழிகளில் பொருளீட்டினர். இவ்வாறு ஈட்டிய பொருளைத் தருமம் செய்தனர். தூய-புனித நூல்களைப் போற்றுவாரைக் காண்பது அரிதாக இருந்தது. மக்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொண்டனர். புரோகிதர்களால் மக்கள் ஏமாற்றவும் பெற்றனர். இந்நிலையில் குருநானக் தோன்றி, சிறந்த ஒழுகலாற்றின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தினர். சமயத்தின் உயிர்நாடியான சீலத்தை வற்புறுத்தினர். இறையுண்மை ஏற்பும், அவரது நாம மகிமையை உணர்ந்து வழிபடுதலும், அடுத்த நிலையில் வலியுறுத்தப் பெற்றன. இறை நம்பிக்கையும் அன்பும், மக்களை உய்விக்கும் என்று அறிவுறுத்தினர் இறையுண்மையில் தளராத நம்பிக்கைக்கொண்டிருந்தார். 'குரு கிரந்த் சாகிப்' என்னும் சீக்கியரது புனித நூலில். இறையொருமையும், உயர்ந்த ஆன்மீக வாழ்க்கையின் அடிப்படைகளும் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. இறையுண்மையில் நம்பிக்கைக்கொண்டு, அயராத அன்பு அவனிடத்துச் செலுத்தி, தூயவாழ்வு வாழவேண்டும் என்பதுதான் நானக் நமக்கு அறிவுறுத்திய சீரிய உண்மைகளாகும்.

ஏனைய சமயப் பெரியோரைப் போல குருநானக் அவர்களும் பரம்பொருளின் அருளைப் பூரணமாகப் பெற்றிருந்ததை உணர்ந்திருந்தார். குருநானக் விக்கரக வழிபாட்டை வெறுத்தார். உயிர்ப்பற்ற சடங்குகளையும், புறநிலையில் மட்டும் வாழும் சமய வாழ்வையும் அவர் எதிர்த்தார்; வன்மையாகக் கண்டித்தார். மக்கள் உண்மையான சமய வாழ்வு வாழவேண்டும் என்று இடையருது அறிவுறுத்தினர். இறைவனிடம் ஒளி வேண்டியும், உதவி வேண்டியும் இறைஞ்சினர், எங்ஙனும் சென்று இறைவன் புகழை ஓதினர்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின் சின்னமாக நானக் விளங்கினர். தனக்குமுன் சென்ற சமயப் பெரியோரது அருளுரைகளில் உண்மையைக் கண்டார். அவர் இஸ்லாமிய துறவிகளோடும், சூபிகளோடும், ஒற்றுமையாக வாழ்ந்தார். பாய், மர்தான என்கின்ற இஸ்லாமிய நண்பரொருவர், குருநானக் அவர்களோடு, இந்திய நடெங்கும் பயணம் செய்தார்.

பாபா, பரித் என்பவரது பாடல்களும், பிற இஸ்லாமிய, தெய்வநலஞ்சான்றவரது பாடல்களும், ஆதிகிரந்தத்தில் தக்க இடம் பெறுகின்றன. இவ்வாறு பிற சமயத்தவர்களது அருட்பாடல்கள், ஆதிகிரந்தத்தில் இடம் பெற்றதானது, சீக்கியரது சமயப் பொறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இஸ்லாமியப் பெரியவர்களோடு, குருநானக் நீண்ட உரை யாடல்கள் நிகழ்த்தியுள்ளார், கருத்துக்கள் பறிமாறப்பெற்றன. குருநானக், முஸ்லீம்களை நோக்கிக் கூறியது, "உண்மை யான முஸல்மானாக இருப்பது அருமையாகும். நீ, தக்க குணநலன்களைப் பெறுக. பெற்றபின் உன்னை முஸ்லீம் என்று கூறிக்கொள்க. முதலில் உனது சமயத்தில் அன்பு கொள். வீண்மை, செல்வச்செருக்கு இவற்றை விடுக, பணி வுள்ளனாக இரு; உறுதியாக இரு; மரண பயத்தை தவிர்த்து வாழ்வதற்கு அஞ்சாதே; பொறுமையோடு இறைவ னிடம் பணிக; அவனை நம்புக; உன்னை அவனிடம் தியாகம் செய்; எவ்வுயிரிடத்தும் கருணை காட்டுக; இப்பண்புகளைப் போற்றி னல்தான் முஸல்மான் என்று நீ உன்னைக் கூறிக்கொள்ளும் தகுதி பெறுவாய்"

முஸ்லீம்களை 'ஷரியத்', 'கலீமா' ஆகிய நோன்புகளைச் சிறிதும் பிறழாது போற்றுமாறு அறிவுறுத்தினர்.

நமது செயல்களில் உண்மையான அன்பு வெளிப் படுதல் வேண்டும். இறைவனிடத்து அச்சமும், தூய அன்பும், கொள்ள வேண்டும் என்றார். ஹஸ்ரத் மீர்ஸா குலாம் ஆமத் என்பவர், இஸ்லாம் சமயப் பிரிவொன்றிற்குத் தலைவராவார். அவர் குருநானக்கைப் பெரிதும் பாட்டினர். அவரைச் சமயத் தலைவர் என்று போற்றும்படிச் சொன்னர்.

அமிர்தசரஸ் என்னும் பகுதியில், எழுப்பப் பெற்றுள்ள சீக்கிய பொற்கோயிலின் அடிக்கல் இஸ்லாமியப் பெரியவ ராகிய ஹஸ்ரத் மியான்மீர் என்பவரால் நாட்டப்பெற்றது. இச் செய்தி முஸ்லீம்கள், சீக்கியத்திடத்திலும், சீக்கியர் முஸ்லீமி டத்திலும் வைத்திருந்த மதிப்பைப் புலப்படுத்துகிறது. இன்று குருநானக் அவர்களது புனிதமான வாழ்வை நாம் அறிய வேண்டும். அவரது இறையொருமைக் கருத்துக்களை நன்கு

உணர வேண்டும். உறுதியான இறை நம்பிக்கை நமது வாழ்வில் இடம் பெறவேண்டும். இறைவனுக்குப் பலபெயர்கள் பல சமயங்களில் சூட்டியுள்ளனர். நாமங்கள் வேறுபட்டாலும், அவை குறிப்பது இறைவனையே என்ற உணர்வு ஏற்பட வேண்டும். இதேபோல் மனித இனம் பல்வேறு பகுதிகளில் வேறுபட்டு விளங்கினாலும் மனித இனம் ஒன்றே என்ற உணர்வும் ஏற்பட வேண்டும். உலகமெங்கும் மனித இனம் ஒன்றே என்ற உணர்வு பிறகு ஏற்படும். கலாச்சாரங்களும், பண்பாடுகளும் இவ்வுணர்விற்குத் தடையாதல் கூடாது. சமயப் பெரியோர் வகுத்த அறவிதிகளைப் பிறழாமல் போற்றுதலாலும், அவர்களது உபதேசங்களைப் பின்பற்றுதலாலும் நாம் சீரிய வாழ்வு வாழ இயலும். ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையை, நாம் இன்றுபோல் வேறு எப்பொழுதும் உணர்ந்ததில்லை. குருநானக்கின் உபதேசங்கள் இவ்வொருமைப்பாட்டுணர்விற்குப் பெரிதும் துணை செய்வனவாகும். இக்பால் என்னும் கவிஞர் கூறியதைப்போல, ‘குருநானக்கின் குரல் ஒருமைப்பாட்டின் குரலாகும், அன்புக் குரலாகும்.

மனிதனின் இயற்கையை, குண இயல்புகளை குருநானக் கூர்ந்து ஆராய்ந்தார். மனிதனிடத்து இருவகை இயல்புகள் இருப்பதை அறிந்தார். இருவகையாக மனிதன் செயற்படுகின்றான். ஒன்று, புற ஆன்மா எனலாம். மற்றொன்று அக ஆன்மா எனலாம். முன்னையதை பகிர்முகம் என்று வழங்கலாம். பின்னையதை அந்தர் முகம் என்று வழங்கலாம். இவ்வாறு வழங்கி, சில உண்மைகளைச் சீக்கியர் வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்று பாகிஸ்தானில் எமினாபாத் என்று ஓரிடம் உண்டு. இவ்வூரை, சையித்பூர் என்று அன்று வழங்கினர். இறையொளிபெற்று, தனது உண்மை உணர்வை உலகிற்கு வழங்க நினைத்த நானக், சையித்பூர் வந்து சேர்ந்தார். இவரை, இருவர் விருந்துண்ணும்படி அழைத்தனர். மாலிக் பாகோ என்பவர் பெருஞ்செல்வர். இவர், குருநானக் அவர்களை அழைத்திருந்தார். மற்றொருவர் பாய்லாலோ என்பவர். இவரது இல்லத்திற்கு விருந்துண்ண நானக் இசைந்தார்.

மாலிக் என்பவர், நானக் தமது இல்லத்திற்கு விருந்துண்ண இசையாதிருந்ததற்குக் காரணம் அறிய விரும்பினார். நானக் பாய்லாலோ என்பவரது அக ஆன்மா, இறையுடன் இசைந்திருந்ததென்றும், பிறரது உழைப்பை அவர் பயன்படுத்திச் செல்வம் சேர்க்கவில்லை என்றும் கூறினார். பாய்லாலோ, உழைத்து அதற்கேற்ற ஊதியம் பெற்றவர் என்றும், அவ்வாறு உழைத்து உண்ணும் உணவைப் பிறரது தேவைகளறிந்து, பகிர்ந்து உண்ணுபவர் என்றும் கூறினார். மாலிக் என்பவர், பிறரது உழைப்பைச் சுரண்டுபவர் என்றும், ஏழை, எளியவர்களது இரத்தத்தை உறிஞ்சுபவர் என்றும் தெய்வீக அழைப்பிற்குச் செவி சாய்க்காதிருப்பவர் என்றும், சுட்டிக் காட்டினார். இதைக்கேட்ட மாலிக் என்பவரது உள்ளம் விழித்தெழுந்து, உண்மையை உணர்ந்தது. தனது கடந்த கால வாழ்விற்கு வருந்தினார். நானக்கிடம் மன்னிப்புக் கேட்டார், உலகப்பற்றுகளிலிருந்து தாம் விடுபட அன்று தொடங்கி முயல்வதாக உறுதி கூறினார். மாலிக், அன்றுமுதல் மாற்றம் கொண்டார். இது எத்தகைய மாற்றம்! புற ஆன்மா, அக ஆன்மாவிற்குப் பணிந்தது.

முல்டான் என்னும் ஊரருகே, சஜ்ஜான் என்னும் கொள்ளைக்கூட்டத் தலைவனைச் சந்தித்தார். குருநானக் அவனுடன் உள்ளத்தைத் தொடும் வகையில் உரையாடினார். அவனுக்கு உலக உடைமைகளின் நிலையாமையை உணர்த்தினார். பிறரிடமிருந்து பல தீய வழிகளில் கைப்பற்றிய உடைமைகள், நில்லா என்றும் அறிவுறுத்தினார். நேரியமுறையில் ஊதியம் பெற்று வாழ்வதே உயரியவாழ்வு என்றும், மனிதரிடத்துத் தெய்வீகப் பண்பு உள்ளது என்றும், பிறரைத் தனக்காக வஞ்சித்து கொள்ளையடித்தல் தகாது என்றும் உணர்த்தினார். இதுகாறும் சஜ்ஜான் என்பவரது புற-ஆன்மா, கொள்ளைக்கூட்டத் தலைவனாக இயங்கியது. குருநானக்கின் அறவுரைக் கேட்டளவில், புற-ஆன்மா ஒடுங்கி அக-ஆன்மா தொழிற்படத் தொடங்கியது. சஜ்ஜான் மாற்றங்கொண்டான்; அனைவருக்கும் நண்பனானான்.

அஸாம் நாட்டில் (அன்று சாம்ரூப் என்று வழங்கியது) மயக்குகின்ற மாது ஒருத்தி வாழ்ந்து வந்தாள். இவ்வம்மை

யார் தனது புறஅழகால், குருநானக்கை மயக்க முயன்றாள். குருநானக், அவளது முயற்சிகளைத் தகர்த்து எறிந்தார். குரு தனது தோழன் மர்தானாவை. புனித பாடல்களைப் பாடுமாறு பணித்தார். இப்புனிதப் பாடல்கள், அவ்வம்மையாரை மாற்ற மடையச் செய்தன. குருவின் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கோரினாள். குரு தனது பார்வையினால், அவ்வம்மையின் காட்சித்திறனை விரிவடையச் செய்தார். உண்மையை பொய்மையினின்று பிரித்து அறியும் திறன் பெற்றாள். நன்மையைத் தீமையினின்று பிரித்து அறிந்தாள். அவளது புறஆன்மா புலனின்பங்களில் தோய்ந்திருந்தது. இப்போது இவ்வான்மா, அகஆன்மாவிற்குக் கீழ்படிந்து நடக்க முற்பட்டது. மன வெழுச்சிகட்கு இடம் கொடுக்காமல் தெய்வ ஒளியைத் தனக்கு வழிகாட்டுமாறு வேண்டி நின்றாள்.

மத்திய இந்தியாவில் காடுகள் அடர்ந்திருந்த பகுதியில் குருநானக்கும், மர்தானாவும், கௌடராக்ஷஸன் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தனர். இவன் கொடியவன், அநாகரிகமானவன். வழிப்பயணம் செய்வோரைக் கொள்ளை அடிப்பது மட்டுமல்லாமல், அவர்களைக் கொன்று, வறுத்து உண்பான். கொடியவனை உற்று நோக்கினார். அவனிடத்து, கொடுமை புறத்தே பெருகிக் காணப்பட்டாலும், மனிதத்தன்மை முற்றிலும் அழியாதிருக்கக் கண்டார். அவன் மனிதர்களைக் கொல்பவனே ஆவான், அவனிடத்தில் உள்ளார்ந்த நிலையில் விளங்கிய தெய்வக்கூறு, அவனை மாற்றவல்லது என்று உணர்ந்தார். மர்தானாவைப் புனிதப் பாடல்களைப் பாடச் சொன்னார். இப்புனிதப் பாடல்கள் அக்கொடியவனை மாற்றியது. பாடல்களைக்கேட்டு, மனந்திருந்தி குருநானக் கால்களில் வீழ்ந்து வணங்கி, மன்னிக்குமாறும், அருளுமாறும் வேண்டி நின்றான்

குருநானக் எங்கு சென்றாலும் மக்களை உண்மையை நாடுமாறு பணித்தார். மனிதரின் புறத்தோற்றங்களை எல்லாம் கடந்து, உண்மை நிலையை உணருமாறு சொன்னார். நேரிய முறையில் ஊதியத்தைப்பெற்று, தேவையுள்ளவர்களோடு பகிர்ந்து உண்ணும்படி அறிவுரைக் கூறினார். புனிதமான மக்கள் திரள் திரளாகக் கூட்டுவழிபாடு செய்தற்பொருட்டு, தரும

சாலைகளைக் கட்டுமாறு பணித்தார். மக்களைத் திருத்துவ தன்மூலம், சமுதாயத்தையும், சமுதாயத்தின்மூலம் மக்களையும் திருத்தி மென்மேலும் நல்வாழ்வு மலரசெய்தார். தனி மனிதன் என்பது, அவனைத் தனிநிலையில் அவனது ஒழுகலாற்றை வைத்து மதிப்பதாகும். ஆனால், தனித்து மனிதன் வாழ்வது கிடையாது. அவன் சமுதாயத்தோடு உறவுகொண்டே வாழ்கின்றான். ஆதலால் தனி மனிதனிற்கும் சமுதாயத்திற்கும் இடையே தமக்குள் உறவு நிலவியே வருகிறது.

மனிதனிடத்து இருமை அல்லது இருவகையான இயல்புகளைக் காணலாம். இவ்வியல்புகளில் ஒன்று மனிதனிடத்து தனித்துக் காண்பது. இதை அகந்தை உணர்வு எனலாம். இதை குருநானக் ஹெளமாய் என்கிறார். மற்றொரு இயல்பு, பொதுவாக காணப்பெறும் அறிவியல்பாகும். இதை 'ஹுக்கம்' என்கிறார். இது தெய்வீக கூறாகும். மனிதன் அகந்தை உணர்வின் வயப்படும்போது, அவன் மனஎழுச்சிகட்கு சுய நலத்திற்கு, சமுதாயத்திற்கு ஏலாத இயல்புகட்கு ஒழுக்கமல்லாதனவற்றிற்கு ஆட்படுகிறான். தீய இயல்புகட்கு இரையாகி, தீயவனாகிறான். ஆனால் இவ்வகந்தையைக் கட்டுப்படுத்தி நெறி நிற்கும்போது, அவன் பொதுவியல்புகளைப் போற்றுவானாகிறான். அவன் இறையுண்மையைத் தனி மனிதனிடத்தும் காண்கிறான், பிரபஞ்சத்தினிடத்தும் காண்கிறான் இந்நிலையில் தெய்வீகக்கூறு அவனிடத்து ஆட்சிபெறத் தொடங்குகிறது. அகந்தை நீங்குகிறது. தெய்வ ஒளியின் காரணமாக எல்லோரிடத்தும் தெய்வத்தன்மையைக் காண்கிறான். இவ்வகையில், சீக்கியனும், சங்கமும் தனி மனிதனும், சமுதாயமும் பின்னிப்பிணைந்து, நல்லுறவு தழைக்கத் தொடங்குகிறது. அகந்தை—ஹெளமாய்-மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கிறது. இறைவனின் திருநாமம், மனிதனை மனிதனோடு பிணைக்கிறது.

மேலே நாம் கண்ட உண்மைகளை குருநானக் குறித்த ஒரு சமூகத்திற்கென்றோ, சமூகத்தின் உட்பிரிவிற்கென்றோ, உபதேசிக்கவில்லை. எல்லா மக்கட்கும், எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும்பொருந்துவதான உபதேசங்களையே போதித்தார். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்

பொருளில் மெய்ப்பொருள் காண்பதே அறிவு" என்பது நானக் தந்த அறிவுரையாகும் பிறர்வாய்க் கேட்டதை அதனதன் தகுதி அறிந்து, மதிப்பிடுதலே தக்க செயல் என்கிறார். இத்தகைய நோக்கை வா – வா (Wah-Wah) என்று குறிப்பிடுகிறார்.

அவர், தனியொருவன் வாழ்வில் பின்பற்றத்தக்க விதிகளை வகுத்தாரெனினும், அவற்றை ஆணையாக அமைக்கவில்லை ஆராயாது மக்கள் ஏற்று ஒழுக வேண்டும் என்று குறிக்கவில்லை. ஒருவனது புறவாழ்விற்குக்கூட அவர் வகுத்த விதி பொதுமையானது. எவ்வுணவும், எவ்வுடையும், எத்தகைய வாழ்வும் ஏற்கத்தக்கதே என்பது அவரது கருத்து ஆனல் உணவு, உடை, வாழ்க்கைமுறை. நல்லுடலையும், நல்ல உள்ளத்வையும் பேணுவனவாக அமைதல் வேண்டும் என்பது அவரது கருத்தாகும். மனிதனிடத்து தெய்வீகக் கூறுகள் உள. இவற்றையே நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இத்தெய்வீகக் கூறுகளையே நாம் வளர்க்க வேண்டும். எல்லோரும் நன்ருக வாழ வேண்டும் என்று விழைந்து, வாழ முற்படல் வேண்டும். கற்றறிந்த ஒருவன், பேராசை, பொருமை, அறியாமை, முதலியவற்றிற்கு இடம் கொடாமல் வாழ்தல் வேண்டும். கற்றறிந்தநிலை அவனது ஒழுகலாற்றில் வெளிப்படுதல் வேண்டும் என்பது அவரது கருத்து. இராவணனை 'குருபானி'யில் எடுத்துக்காட்டாக சீக்கியம் குறித்துள்ளது. இராவணன் நன்கு கற்றறிந்த பண்டிதன் ஆவன். அனைத்து சாத்திரங்களையும், வேதங்களையும் நன்கு பயின்றிருந்தான். ஆனல் அவன் காமவேட்கையையும், வஞ்சந்தீர்த்துக்கொள்கின்ற இயல்பையும் வெல்லவில்லை. அவனிடம் விலங்குக் கூறுகள் வலுத்திருந்தன. கல்வியிற் சிறந்த ஒருவன் அகந்தை அற்றவனுக இருந்து மற்றையோருக்கு நலம்பல செய்பவனுக விளங்குதல் வேண்டும். இறைவனை அனைவரிடத்தும் காணவேண்டும்.

குருநானக், ஜப்ஜீ என்று வழங்கும் பகுதியில் மனிதன் மனவளர்ச்சியில், ஆன்மீக வளர்ச்சியில் காண இருக்கின்ற ஐவகை நிலைகளைக் குறிக்கின்ருர். அறிவியல்

நாட்டம் ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்கிறார். உண்மையை நாடுபவன், அறிவியல் நாட்டம் உடையவனாதல் வேண்டும்; இயற்கையில் நாம் காணும் சட்டங்களை ஒழுங்குகளை, கூர்ந்து அறிதல் வேண்டும் இப்பிரபஞ்சத்தில் எந்நிகழ்ச்சியும் தற்செயலாக நிகழ்வதின்று அமைப்புக்கள் சட்டங்கள், விரிந்த சட்டங்கள் என்று பல்வகையான நியதிகளே இப்பிரபஞ்சத்தை இயக்கக் காண்கிறோம். பெருஞ் சட்டங்கள் சிறியவற்றை உட்படுத்துவனவாகும். பிரபஞ்சம் ஓர் ஒழுங்குமுறைக்கு உட்பட்டே இயங்கி வருகிறது என்பதை நாம் நன்கு உணரவேண்டும். இவ்வுறுதி ஏற்பட்ட பின்னர், கலையுணர்வோடு இயற்கை நிகழ்ச்சிகளைக்காண முற்படுதல் வேண்டும். இக்காட்சி, சிந்தனைக்கு வழிவகுக்கின்றது. இறைவனது படைப்பு மிகவும் விரிந்தது, பரந்தது எல்லையற்றது என்பதைச் சிந்தித்துப் பழகுதல் வேண்டும். அறிவியல் நாட்டம், கலையுணர்வு ஆகிய இவ்விரண்டும் அமைந்த பின்னர், நாம் செய்யும், ஈடுபடும் தொழில்களில் எல்லாம், கலையுணர்வு வெளிப்படுதல் வேண்டும். ஒருவன் படைப்புண்ட நிலையிலேயே காலங்கழித்தல் ஆகாது. இவனும் படைக்க வேண்டும். செடிகொடிகளை வளர்த்தல், பயன்படும் மரச்சாமான்களைத் தயாரித்தல், கவிதையாத்தல், பானை வனைதல் போன்ற செயல்களில் ஈடுபடுதல் வேண்டும். வறிதே வாழ்க்கையைக் கழித்துவிட்டால், அவன் புழுவிற்குச் சமமாவான். பின்னர், அவன் அருளுலகிலும், உண்மையுலகிலும் இடம் பெறுகின்றான். அகந்தையை அறவே நீக்கி, இறையருளை இறைஞ்சுகின்றான். பின்னர் இவன் தன்னலம் என்று எதையும் போற்றாது. பிறரது நலத்தைப் பேணுபவன் ஆகிறான். இந்நிலையில் 'யான்'; 'எனது', 'நீ' 'உனது' என்பனப் போன்ற வேறுபாடுகள் நீங்குகின்றன. என்றுமுள்ள, பரம்பொருளினிடத்து அவன் ஒன்றுகின்றான். இறையருளால், எல்லாப் பொருளிலும், அவன் இன்பம் காண்கின்றான்.

குருநானக் கண்ட சமுதாய அமைப்பு சீரியது. மக்கள் தமது ஆன்மீக நலனை நாடுதற்பொருட்டு இல்லற கடமைகளினின்றும் நீங்க வேண்டுவதின்று, இல்லறத்தில் இருந்து

கொண்டே, ஆன்மலாபம் அடையும் வகையில், ஒருவன் முயலலாம் என்பது நானக் அவர்களது துணிபு. 'சங்கத்' 'பங்கத்' என்ற இரு நிறுவனங்களும் சிறந்த ஆன்மீக வாழ்விற்குத் துணைசெய்வனவாகும். சமுதாயக் கேடுகளை நீக்குவனவாகும்.

மக்களில் கொடியவர்களாக விளங்கியவர்களையும் குருநானக் தமது பாடல்களினால், திருத்தியுள்ளதைக் கண்டோம். மனிதனிடத்து விலங்கியல்புகள் மாறுவதற்கு, இறையன்பு தேவை. தனித்து இறையிடம் அன்பு செலுத்தவேண்டுமென்பதில்லை. தொடர்பு கொள்வோரிடையே, இறையைக் காண்டலால், காணப் பழகுதலால் பகைமையுணர்ச்சி அருகிவரும். மாறுபட்ட குணங்களையுடையவரோடு பழகி அவர்களை நன்னெறியிற் செலுத்த இயலும் என்பதை நானக் அவர்களது வாழ்க்கை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மாயையின் வஞ்சனைச் செயல்களினின்று நாம் தப்ப இறைவனின் நாமத்தை இடையறாது பயிலுதல்வேண்டும். சத்ஸங்கத்தின் உறவுவேண்டும். இறைவனின் பெருமையைப் பரவும் பாடல்களை, கீர்த்தனங்களைச் செவி மடுக்கவேண்டும். குருநானக்கிற்கு முன்னிருந்த சமயத் தலைவரும், பின்வந்தோரும் மகளிரைப் பழித்தனர். குருநானக், மகளிரது உயர்வை நமக்கு வலியுறுத்தினார். மகளிர், சமுதாய வாழ்விலும் சமய வாழ்விலும் சிறந்த இடம் பெற்றனர்.

சமயம், சமுதாயம் என்று வாழ்க்கையைப் பல கூறுகளாக நானக் பகுக்க விரும்பவில்லை. வாழ்க்கையை முழுமையாக நோக்கினார் முழுமையான வாழ்வு வாழும் வகையே அவர் அருளிச் செய்தனர். செம்மையான சமுதாய வாழ்வு அமைவதற்கு உறுப்பினர்கள், சீலம் மிக்க வாழ்வு வாழ்தல் வேண்டும் என்பது நானக் எடுத்துக்காட்டிய உண்மையாகும். தனி மனிதன் திருந்தினால், சமுதாயம் திருந்தும். உழைத்து உண்பவனே வாழ்பவன் என்பதை பன்முறை எடுத்தியம்பியுள்ளார். உழைத்துப் பொருளீட்டி வாழ்பவன் இல்லாதோருக்கு ஈட்டிய பொருளைப் பகிர்ந்து வாழ்கின்ற சிறப்புமிக்க வாழ்வினை நானக் வகுத்தார்; பல வகைகளிலும் நானக் கண்ட சமுதாயம் சிறப்புமிக்க தொன்றாகும்.